வெற்றியுள்ள வீட்டு ஜெபக்குழுக்கள்

போதகர் பால் யாங்கி சோ

தமிழாக்கம்: J. சாம் ஜெபத்துரை

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

75

வெற்றியுள்ள வீட்டு ஜெபக்குழுக்கள்

(SUCCESSFUL HOME CELL GROUPS)

போதகர் பால் யாங்கி சோ

மொழியாக்கம்
சகோ. J. சாம் ஜெபத்துரை

கிறிஸ்துவின் வார்த்தை நூல் நிலையம்
சென்னை, இந்தியா.

வெற்றியுள்ள வீட்டு ஜெபக்குழுக்கள்

Successful Home Cell Groups (Tamil) by Paul Yonggi Cho

Copyright © Paul Yonggi Cho

ISBN : 978-93-82134-16-9

All rights reserved. No part of this publication may be reproduced, stored in a retrieval system, or transmitted in any form or by any means-electronic, mechanical, photocopying, recording, or otherwise-without the prior written permission of the publisher. The only exception is brief quotations in printed reviews.

Published by Word of Christ Ministries with kind permission of Bro. J. Sam Jebadurai.

Published by:
WORD OF CHRIST MINISTRIES
No. 100/3, Nirmala Apartments
Medavakkam Tank Road, Kellys
Chennai 600 010 Tamil Nadu, India
Phone: 044-2661 3242/ 4264 0111
E-mail: christianliterature@gmail.com
www.wordofchrist.org.in

Price: Rs 75/-

முன்னுரை

உலகத்திலேயே மிகப்பெரிய கிறிஸ்தவ ஆலயம் எங்கிருக்கிறது என்று கேட்டால், அது கொரியாவில் சீயோல் என்ற பட்டணத்தில் இருக்கிறது என்று சொல்வேன்.

அங்குள்ள பூரண சுவிசேஷ மத்திய சபையின் தலைமைப் போதகராக பால் யாங்கி சோ அவர்கள் ஊழியஞ்செய்து கொண்டிருக்கிறார்கள். தற்போது அந்த சபையின் அங்கத்தினரின் எண்ணிக்கை ஐந்தரை இலட்சமாகும். மாதந்தோறும் பத்தாயிரம் புதிய ஆத்துமாக்கள் இரட்சிக்கப்பட்டு, இந்தச் சபையில் சேர்க்கப்பட்டு வருகிறார்கள்.

எழுப்புதல் தீ பரப்பும் இந்த ஆலயம் உலகிலுள்ள எல்லா விசுவாசிகள், போதகர்களின் கவனத்தையும் ஈர்த்திருக்கிறது. அவர்கள் இந்தப் போதகரின் சபைக்கு பறந்து சென்று, எழுப்புதலின் அக்கினி அலைகளால் நிரப்பப்பட்டு திரும்புகிறார்கள்.

இந்தப் புத்தகத்தில் அவர் ஆலயத்தில் ஆத்துமாக்கள் நிரம்பி வழிவதின் இரகசியங்களையும், அதை நடைமுறைக்கு கொண்டு வருவதின் வழிகளையும் குறித்து மனம் விட்டுப் பேசுகிறார். இந்தப் புத்தகத்தின் செய்திகள் மகத்தான மாறுதல்களை உங்கள் வாழ்க்கையில் உண்டு பண்ணக்கூடியவை!

எழுப்புதலடையுங்கள்! உங்கள் எழுப்புதல் அக்கினி நமது தேசமெல்லாம் பரவட்டும்!

J. சாம் ஜெபத்துரை

பொருளடக்கம்

1.	சுயமுயற்சி – தோல்வியின் துவக்கம்!	01
2.	தேவனுடைய புது பயிற்சித் திட்டம்!	09
3.	திட்டத்தை சபையாருடன் பகிர்ந்துகொள்ளுதல்!	15
4.	சாத்தானின் தாக்குதல் – ஏழு தடைகள்!	23
5.	ஜெபக்குழுக்களின் பாதுகாப்பு!	37
6.	வீட்டு ஜெபக்குழுக்களும் – சுவிசேஷம் அறிவித்தலும்!	43
7.	புதுவகையான மிஷனெரி!	55
8.	அற்புத சபை!	63
9.	அன்புடன் இணைந்த அதிகாரம்!	69
10.	அகில உலக சபை வளர்ச்சி இயக்கம்!	75
11.	வீட்டு ஜெபக்குழுக்கள் ஆரம்பிப்பது எப்படி?	83
12.	பரிசுத்தாவியானவரது ஐக்கியத்தின் முக்கியத்துவம்!	93
13.	பகுதிநேர ஊழியர்களை உற்சாகப்படுத்துதல்!	107
14.	வளர்ந்து வரும் சபைக்குப் பிரசங்கித்தல்!	115
15.	சபையின் வளர்ச்சி அளவில்லாதது!	131

வீட்டு ஜெபக்குழுக்கள் அவசியம்தானா?

பல ஆண்டுகளாக உலகம் முழுவதும் பிரயாணம் செய்து எங்களது சபையில் தேவன் செய்து வரும் அற்புதத்தைக் கருத்தரங்குகளிலும், மாநாடுகளிலும், பகிர்ந்து கொண்டு வருகிறேன். 1958–ஆம் ஆண்டு ஒரு குடிசைப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட சிறிய ஊழியம் இன்று உலகத்தின் மிகப் பெரிய சபையாக மாறியிருக்கிறது.

இதை உருவாக்க முதலாவது என்னையும், என்னுடைய நோக்கங்களையும் தேவன் மாற்ற வேண்டியதாயிருந்தது. வழக்கமாக சபைகள் கடைப்பிடிக்கும் முறைகளைக் கொண்டு இப்படிப்பட்ட பெரிய வளர்ச்சியை உண்டாக்க முடியாது. ஆனால் தேவனுடைய வழி முறைகளே வெற்றியைத் தரும் என்பதை நான் அறிந்துகொண்டேன். ஒவ்வொரு சபையும் இந்த வெற்றியின் இரகசியத்தைப் பின்பற்றி வளரவேண்டுமென்பதே தேவனுடைய விருப்பம். மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்ளும் படியாகவே தேவன் இத்திட்டத்தை எங்களுக்கு தந்துள்ளார்.

இன்றைய உலகிற்கு இயேசுவே இரட்சகர், ஆண்டவர் என்ற செய்தி இன்றியமையாத தேவையாயிருக்கிறது. நம்முடைய சபைகளிலும், நகரங்களிலும் எழுப்புதல் அவசியம். ஏதோ ஒரு சில நாட்களில் மட்டுமல்ல, வருடத்தின் 365 நாட்களிலும் எழுப்புதல் தேவை. அப்படிப்பட்ட எழுப்புதல் சாத்தியமே. ஏனெனில் எங்களது சபையில் அது இப்பொழுதும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்தப் புத்தகத்தில் நான் கூறியுள்ள வழிமுறைகளை நான் செயல்படுத்தியதால் எழுப்புதலின் அக்கினி இன்றும் பற்றி எரிந்து கொண்டேயிருக்கிறது! அல்லேலூயா!

இந்த வெற்றியின் இரகசியத்தை எனக்குள் மட்டும் வைத்துக்கொள்ள தேவன் விரும்பவில்லை. 1976–ஆம் ஆண்டு உலக சபை வளர்ச்சி என்ற ஸ்தாபனத்தை உருவாக்க தேவன் என்னை ஏவினார். சபை வளர்ச்சியைப் பற்றிய தத்துவங்களையும் விதிகளையும் மற்ற சபைப் போதகர்களுக்கும் விசுவாசிகளுக்கும் பகிர்ந்து கொடுக்கவே இதனை செய்தார். கருத்தரங்குகளில் சிலரே பங்குபெற முடியும். இந்தத் தத்துவங்கள் என்னுடைய

தல்ல; தேவனுடையது என்பதை நான் அறிவேன். ஆகவே முழு உலகத்திலிருக்கிற எல்லாக் கிறிஸ்தவர்களுக்கும் பயனுள்ளதாயிருக்கும்படிக்கே இத் திட்டத்தை உங்களோடு பகிர்ந்து கொள்ளுகிறேன்.

சபை வளர்ச்சியே இந்நூற்றாண்டில் பரிசுத்த ஆவியானவரின் மிகப் பெரிய பணியாயிருக்கப்போகிறதென்று நான் விசுவாசிக்கிறேன். இப்புத்தகத்தின் தலைப்பு சபை வளர்ச்சி என்றில்லாவிட்டாலும் இப்புத்தகம் எழுதப்பட்டதன் நோக்கம் சபை வளர்ச்சிக்காகவே! சபை வளர்ச்சியின் உண்மையான இரகசியம் வீட்டு ஜெபக்குழுக்களே!

அநேக சபைகள் தனி மனிதர்கள் மீது கட்டப்பட்டதால் இன்று அழிந்துகொண்டிருக்கின்றன. மிகப் பிரம்மாண்டமாகக் கட்டப்பட்டிருக்கும் சில ஆலயங்களில் இன்று விரல் விட்டு எண்ணக்கூடிய அளவிற்கே விசுவாசிகள் இருப்பதை நான் கண்டிருக்கிறேன். பெரிய பிரசங்கியார்கள் இருந்த சபைகளில் அவர்கள் மரித்த பின்பு அவர்களது மந்தையானது சிதறிப்போய்விட்டது. சபைகள் ஒரு தனி மனிதனது வல்லமையின் மீது கட்டப்படுவது நல்லதல்ல.

இன்னொரு வழி இருக்கிறது. அது வீட்டு ஜெபக்குழுக்கள் மூலம் சபை கட்டப்படுவதாகும். இதன்மூலம் சபையின் ஒவ்வொரு விசுவாசியும் ஊழியத்தில் பங்கெடுத்து தன் வீட்டைச் சுற்றியுள்ள பகுதிகளில் எழுப்புதலை உண்டாக்க வாய்ப்பு கிடைக்கிறது. எங்களது சபையினர் இது பயனுள்ள தென்று கண்டுள்ளனர். சுவிசேஷத்தை அறிவிக்கும் மிகச் சிறந்த வழியாகவும் இது காணப்படுகிறது.

ஆனால் வீட்டு ஜெபக்குழுக்கள் வெற்றிகரமாகச் செயல்பட வேண்டுமானால் சில விதிமுறைகள் கடைப்பிடிக்கப்பட வேண்டும். சபை வளர்ச்சியும், சுவிசேஷம் அறிவித்தலும் தானாக நடைபெறுவதில்லை. சில அடிப்படை விதிகளைக் கடைப்பிடிக்காததால் பல சபைகளில் வீட்டு ஜெபக் குழு திட்டங்கள் தோல்வி அடைந்துள்ளன.

நான் இங்கே கொடுத்திருக்கும் விதிமுறைகளைப் பின்பற்றுவதன் மூலம் வீட்டு ஜெபக்குழுக்கள், சபை வளர்ச்சி என்னும் அற்புதங்களை உங்கள் சபையில் காண முடியும். இதை வாசிக்கும்போதே உங்கள் பங்கென்ன என்பதை பரிசுத்த ஆவியானவரிடம் கேளுங்கள். பரிசுத்த ஆவியானவரோடு நீங்கள் எந்த அளவிற்கு ஒத்துழைக்கிறீர்களோ அந்த அளவிற்கு உங்கள் ஊழியத்தில் பலனுண்டாகும். உங்கள் சபை பெருகிவரும்!

அத்தியாயம் 1

சுயமுயற்சி - தோல்வியின் துவக்கம்!

1961 ஆம் ஆண்டு கொரியாவிலேயே மிகப்பெரிய சபையை உருவாக்க வேண்டுமென்ற எண்ணம் எனக்குள் உண்டாயிற்று. அப்போது நான் தேவனுக்கென்று அதைச் செய்கிறேன் என்று எண்ணினாலும் உண்மையில் என்னுடைய சுயவிருப்பத்தின்படியே அதை நிறைவேற்ற முயன்றேன்! அதுபெரும் தோல்வியாய் அமைந்தது. நான் தேவனைச் சார்ந்து அவருடைய சபையை அவர் சித்தத்தின்படி கட்டுவதற்கு அவரை அனுமதிக்கவில்லை!

அப்போது எங்களது சபையில் 600 விசுவாசிகள் இருந்தனர். சீயோல் நகரத்தின் குடிசைப்பகுதிகளில் ஒன்றாகிய டயஜோ டாங் என்னுமிடத்தில் மூன்றாண்டுகளுக்கு முன் தொடங்கப்பட்ட சபையானது, மேற்கு வாசல் என்றழைக்கப்படும் சோடேமூன் என்னும் நகர்ப்பகுதிக்கு மாற்றப்பட்டது. என்னுடைய சபையின் வளர்ச்சியைக் கண்டு மூன்றாண்டுகளுக்குள் 600 அங்கத்தினர்களைச் சேர்ந்து விட்டேன் என்று என்னைக் குறித்தும் எனது திறமையைக் குறித்தும் விசுவாசிகள் பெருமைப்பட ஆரம்பித்தார்கள். மூன்றாண்டுகளுக்குள் 600 அங்கத்தினர்களைச் சேர்த்துவிட்டபடியால், சீயோல் நகரத்திலேயே மிகப் பெரிய சபையை துரிதமாய் கட்டமுடியும் என்னும் தன்னம்பிக்கை எனக்கு உண்டாயிற்று.

அந்நாட்களில் யாங் நாக் பிரஸ்பிடேரியின் சபையானது சீயோல் நகரத்தின் மிகப்பெரிய சபையாயிருந்தது. அதில் ஏறத்தாழ 6000 அங்கத்தினர்கள் இருந்தனர். அது எனக்கு ஒரு சவாலாயிருந்தது. ஒரு நாளில் ஒருவருக்கும் தெரியாமல் ஒரு அளவுகோலை எடுத்துக்கொண்டு அந்த சபைக்குச் சென்று அதன் நீளம், அகலம் எல்லாவற்றையும் அளந்தபின் இதைவிடப் பெரிய சபையை நான் கட்டுவேன், கர்த்தர் அதை நிரப்புவார் என்று எனக்குள் சொல்லிக்கொண்டேன்.

என்னுடைய ஊழியத்தின் ஆரம்ப நாட்களில் ஊழியத்தில் இலக்குகளை வைத்து, அந்த இலக்கை அடைய தேவன் உதவுவார் என்று விசுவாசித்து அதன்படி செயல்படுவதன் முக்கியத்துவத்தை தேவன் எனக்கு வெளிப் படுத்தியிருந்தார். தேவைகளுக்காக குறிப்பாக ஜெபிப்பதைப் பற்றியும் அவர் எனக்குக் கற்பித்திருந்தார். ஊழியம் வளர்ந்து வரும் நாட்களில் என்னுடைய

நான் வேண்டுமென்றே அப்படிச் செய்யவில்லை. கொரியாவை ஜப்பானியர் கைப்பற்றி இருந்தபோது ஒரு ஏழை குடும்பத்தில் பிறந்து க்ஷயரோக வியாதியால் சாகும் நிலையிலிருந்து, உயிர் பிழைத்த எனக்கு எப்படியாவது ஒரு வெற்றியுள்ள மனிதனாக மாறவேண்டும். ஏராளமான பணம் சம்பாதிக்க வேண்டும் என்ற ஒரு வெறி உண்டாயிருந்தது. இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளும் முன்பு ஒரு மருத்துவராக வேண்டும் என்பதே என் இலட்சியமாயிருந்தது. எனவே ஊழியத்தில் பிரவேசித்தபோது ஒரு பிரபலமான, வெற்றியுள்ள பிரசங்கியாராக வேண்டுமென்ற எண்ணம் என் இருதயத்தில் ஆழமாய் குடிகொண்டிருந்தது! நான் தேவனை நேசித்தேன். அவருக்கு ஊழியம் செய்ய விரும்பினேன். ஆனாலும் வெற்றியுள்ள மனிதனாக விளங்க வேண்டும் என்ற எண்ணத்தில் என்னுடைய சுய வழிகளில் அநேக காரியங்களைச் செய்து கொண்டிருந்தேன்.

சபை தேவனுடையது, என்னுடையதல்ல என்று நான் உணரும்படி தேவன் என்னுடைய சுயதிட்டங்களையெல்லாம் நொறுக்கிப்போட வேண்டியதாயிற்று. அவருடைய மந்தையை நடத்த தகுதிப்படுத்தும்படி தேவன் என்னை நொறுக்க வேண்டியிருந்தது. 1964 ஆம் ஆண்டில் எங்களது இலக்கைவிட சற்று குறைவாகவே சபை வளர்ந்திருந்தது. நாங்கள் எதிர்பார்த்திருந்த 3000 அங்கத்தினர்களுக்குப் பதிலாக 2400 அங்கத்தினர்கள் இருந்தனர். ஆனால் எனக்கோ பெரும் தொல்லைகள் உண்டாகத் தொடங்கின. அப்போதும் நான் தேவனுக்கென்று பெரிய காரியங்களைச் செய்கிறேன் என்ற எண்ணத்தில் அதிகாலையிலிருந்து இரவு வரை ஓடி, ஓடி ஊழியம் செய்தேன். ஓய்வில்லாத எனக்கு விரைவில் நரம்புத்தளர்ச்சி உண்டாயிற்று. நான் மிகவும் களைப்படையத் தொடங்கினேன். ஆனாலும் கஷ்டப்பட்டு சபையை நடத்திக் கொண்டிருந்தேன்; பிரசங்கித்தேன்; ஆலோசனை கூறினேன்; வியாதியஸ்தர்களைச் சந்தித்தேன்; வீடுகளுக்குப் போய் இயேசுவை குறித்து கூறினேன். இப்படியாகப் பல வேலைகளைச் செய்துக்கொண்டேயிருந்தேன்.

ஒரு ஞாயிற்றுக்கிழமையன்று இரண்டாம் ஆராதனை நடத்தி முடித்த போதுதான் பிரச்சனை உருவானது. எங்களுடைய சபையின் வழக்கத்தின் படி வருடத்திற்கு இருமுறை மட்டுமே ஞானஸ்நானம் கொடுப்போம். அன்று 300 பேருக்கு ஞானஸ்நானம் கொடுக்க வேண்டியதிருந்தது. எனக்கு ஊழியத்தில் உதவி செய்யும்படி டாக்டர். ஜான் ஹுஸ்டன் என்னும் அமெரிக்க மிஷனெரி என்னோடிருந்தார். ஞானஸ்நானம் கொடுப்பதில் எனக்கு உதவ முன்வந்தபோதும் எல்லாவற்றையும் நானே செய்வதுதான் சரி என்ற

என்னுடைய மனப்பான்மையின் காரணமாக நானே 300 பேருக்கும் ஞானஸ்நானம் கொடுத்தால்தான் அந்த விசுவாசிகளுடைய வாழ்க்கை ஆசீர்வாதமாயிருக்கும் என்று எண்ணினேன்.

ஆனால் நான் மிகவும் களைப்பாயிருப்பதைக் கண்ட ஜான் தண்ணீருக்குள் இறங்கி நான் தண்ணீருக்குள் மூழ்குகிறவர்களை மேலே தூக்குவதில் உதவி செய்யும்படி வந்தார். நானோ, "நான் நன்றாகவே இருக்கிறேன்" என்று கூறி நானே ஒவ்வொருவரையும் தண்ணீருக்குள் அமிழ்த்தி தூக்கினேன். சில பெண்கள் குண்டாயிருந்தபடியால் அவர்களைத் தூக்குவது அதிக களைப்பைத் தந்தது. கொஞ்ச நேரத்திற்குள் என் முகமெல்லாம் வெளுத்து கைகளெல்லாம் நடுங்கத் தொடங்கின. என் நிலையைக் கண்ட ஜான் மீண்டும் என்னிடம், "சற்று இளைப்பாறுங்கள், நான் ஞானஸ்நானம் கொடுக்கிறேன்" என்றார். அப்போதும் விடாப்பிடியாக, "இல்லை இல்லை; நான் நன்றாகவே இருக்கிறேன்" என்றேன். ஆனாலும் உள்ளுக்குள் "ஆண்டவரே, என்னைப் பெலப்படுத்தும்" என ஜெபித்தேன். தேவன் என்னைப் பெலப்படுத்தினாரா அல்லது நானாகவே என்னுடைய மனவலிமையால் செய்தேனோ தெரியாது. 300 பேருக்கும் ஞானஸ்நானம் கொடுத்து முடித்தேன். அத்துடன் அன்றைய வேலைகள் முடிந்துவிடவில்லை. அன்று புதிதாய் அமெரிக்காவிலிருந்து வரும் ஒரு பிரசங்கியாரை விமான நிலையத்திலிருந்து அழைத்து வர வேண்டியிருந்தது. அன்று மாலை அவர் எங்கள் சபையில் பிரசங்கிக்கும்போது மொழி பெயர்க்கவும் வேண்டியிருந்தது. என்னுடைய உடல் நலத்தைக் குறித்துக் கவலைப்பட்ட போதகர் ஜான் என்னிடம், "நீங்கள் ஓய்வெடுங்கள், நான் விமான நிலையம் சென்று அவரை அழைத்து வருகிறேன்" என்றார்.

நானோ, "இல்லை, நானே போகிறேன்; அவர் என்னைத்தான் எதிர் பார்ப்பார்" என்றேன். சபையின் போதகர் என்ற முறையில் எனக்கிருந்த பொறுப்புகளை நான் மற்றவர்களுக்குக் கொடுக்கத் தயாராயில்லை. எனவே மதிய உணவும் சாப்பிடாமல் விமான நிலையத்திற்குச் சென்று அந்த மிஷனெரியை வரவேற்று அவர் தங்கவேண்டிய ஹோட்டலில் விட்டுவிட்டு, சிறிது நேரம் இளைப்பாறிவிட்டு மீண்டும் அவரை சபைக்கு அழைத்துப்போனேன்.

அன்று மாலை ஆராதனையில் ஜான் மட்டுமல்லாமல் சபையின் மூப்பர்களில் சிலரும் சேர்ந்து "நீங்கள் மிகவும் களைப்பாயிருக்கிறீர்கள். எனவே மொழிபெயர்க்க வேண்டாம். வேறு யாராவது ஒருவரை மொழி பெயர்க்கச் செய்யலாம்" என்று கூறினார்கள். "அந்த மிஷனெரியின்

பிரசங்கத்தை என்னைப்போல் திறமையாக வேறு யாரால் மொழி பெயர்க்க முடியும்? தேவ வல்லமை என் மூலமாக மட்டுமே வெளிப்படுகிறது. நான் மட்டுமே சரியாக மொழிபெயர்க்க முடியும்'' என்று எண்ணிய நான், ''இல்லை நான் நன்றாகவே இருக்கிறேன்'' என்று சொல்லிவிட்டேன்.

அமெரிக்க மிஷனெரி பிரசங்கிக்கத் தொடங்கினார். வல்லமையான பிரசங்கியாராகிய அவர் மிகுந்த சத்தமாய் அங்கும் இங்கும் ஓடிக்கொண்டு பிரசங்கித்தபோது மொழி பெயர்ப்பாளரான நானும் அப்படியே மிகுந்த சத்தமாய் பேச வேண்டியிருந்தது. அவருக்குள் அபிஷேகம் இருந்ததால் வல்லமையாய் பிரசங்கித்தார். களைப்படையவில்லை! நானோ என் மாம்ச வைராக்கியத்தால் உரத்தச் சத்தமாய் கத்த ஆரம்பித்தேன். என்னுடைய சத்தம் அவருடைய சத்தத்தைவிட அதிகமாய் இருப்பதைக் கண்ட பிரசங்கியார் மேலும் சத்தமாய் பேச ஆரம்பித்தார். இப்படியாக இருவரும் பிரசங்க பீடத்தில் இங்கும் அங்கும் ஓடிக்கொண்டும் பேசிக்கொண்டும் இருந்தோம். அரைமணி நேரம் கடந்தது. திடீரென்று என் இருதயத்தில் கடும் வேதனை உண்டாயிற்று. என் முழங்கால்கள் நடுங்கத் தொடங்கின. என்னுடைய காதுகளில் பிரசங்கியாரின் சப்தம் மெதுவாகக் கேட்டாலும் என் கண்கள் இருளடைந்தன. அப்படியே மேடையில் சரிந்து விழுந்தேன். விழும்போது என் மனதிற்குள் "ஆண்டவரே, இப்படி பகிரங்கமாக எல்லோருக்கும் முன்பாக என்னைத் தண்டித்து விட்டீரே; வெட்கப்படுத்தி விட்டீரே; தனியாக என் அலுவலகத்தில் தண்டித்திருக்கக் கூடாதா?'' என்று முறுமுறுத்து ஜெபித்தது எனக்கு இன்னும் நினைவிலிருக்கிறது. என்னுடைய கண்கள் சற்று தெளிவடைந்தபோது போதகர் ஜானைப் பார்த்து, "ஜான் என்னால் சுவாசிக்க முடியவில்லை. என் இருதயம் மிகவும் வலிக்கிறது. நான் செத்துக்கொண்டிருக்கிறேன்'' என்றேன். அதன் பின்பு மயக்கமடைந்து விட்டேன்.

சபையார் அனைவரும் கூடி எனக்காய் ஜெபித்துக் கொண்டிருந்தனர். பிரசங்கியாரை யாரும் கவனிப்பதாயில்லை. அவர் என்னசெய்வதென்று தெரியாமல் நின்று கொண்டிருந்தார். எனக்கு சற்று மயக்கம் தெளிந்ததும் மீண்டும் மெதுவாக மேடைக்குச் சென்று, ஆராதனை இத்துடன் முடிந்த தென்று கூறினேன். அப்போதைக்கு என்னால் செய்ய முடிந்தது அதுதான்.

பின்பு மூப்பர்கள் என்னை ஒரு ஆம்புலன்ஸ் வண்டியில் ஏற்றி மருத்துவ மனைக்கு கொண்டு சென்றனர். மருத்துவமனையில் அவசர சிகிச்சைப் பிரிவில் படுக்கையில் படுத்திருந்தது எனக்கு மிகவும் வெட்கமாயிருந்தது. "நான் ஜெபித்து எத்தனை வியாதியஸ்தர்கள் சுகமடைந்திருக்கின்றனர்!

நான் மருத்துவமனையில் படுத்திருப்பதா?" என்று எண்ணிய நான் எனக்கு மருந்து எதுவும் வேண்டாம். நான் தேவனுடைய வார்த்தையை விசுவாசிக்கிறேன். "அவருடைய தழும்புகளால் குணமானேன்" என்று சொல்லி வீட்டிற்கு புறப்பட்டேன்.

வேறு வழியில்லாமல் டாக்டர்கள் வீட்டிற்கு அனுப்பி விட்டார்கள். நான் வீட்டில் படுக்கையில் உட்கார்ந்து கொண்டு வேதத்தில் தெய்வீக சுகத்தைக் குறித்து சொல்லப்பட்டுள்ள எல்லா வாக்குத்தத்தங்களையும் அறிக்கை யிட்டேன். "ஆண்டவரே, நீர் கொடுத்த வாக்குத்தத்தம் மாறாததல்லவா! இன்றும் நீர் ஜீவிக்கிறவரல்லவா! ஆகவே, இயேசுவின் நாமத்தில் நான் சரீர சுகத்தை எடுத்துக்கொள்கிறேன்" என்று கூறினேன். ஆனாலும் தேவன் என்னைக் குணமாக்கவில்லை. என்னுடைய இருதயம் மிகவும் பெலவீன மாகவே இருந்தது. சுவாசிப்பது மிகவும் கடினமாயிருந்தது. எங்களது சபையின் மூப்பர்களில் அநேகர் மருத்துவர்களாயிருந்தனர். அவர்கள் எனக்கு உதவி செய்யத் தயாராயிருந்தும், நான் எந்த உதவியையும் பெறாமல் மறுத்துவிட்டேன். "நான் தேவனுடைய வார்த்தையின் மீதே நிற்க விரும்புகிறேன்" என்று அவர்களிடம் உறுதியாய்க் கூறிவிட்டேன்.

அது என் இருதயத்திலிருந்து வந்த விசுவாசமல்ல; மூளையிலிருந்து வந்த விசுவாசத்தையே சார்ந்திருந்தேன் என்பது இப்பொழுது விளங்குகிறது. மூளை அறிவிலிருந்து உண்டாகும் விசுவாசமானது தேவனிடமிருந்து ஒன்றையும் பெற்றுத் தராது. பொதுவான தேவனுடைய வார்த்தையையே (Logos) நான் உரிமை பாராட்டிக்கொண்டிருந்தேன். ஆனால் தனிப்பட்ட ரீதியில் பரிசுத்த ஆவியானவரால் என்னுடைய ஆவியில் வெளிப்படுத்தப் படும் தேவ வசனத்தின் அடிப்படையில்தான் (Rhema) தேவனிடமிருந்து ஆசீர்வாதங்களை நான் பெறமுடியும் என்பதை பிற்காலத்தில்தான் கண்டு கொண்டேன். அப்படிப்பட்ட விசுவாசமே இருதயத்திலிருந்து உண்டாகும் விசுவாசம் ஆகும்! அப்படிப்பட்ட விசுவாசமே மலைகளைப் பெயர்க்கும்!

அடுத்த ஞாயிற்றுக்கிழமையன்று சபையில் பிரசங்கிப்பதற்காக என்னை சபைக்குக் கொண்டுபோகும்படி மூப்பர்களுக்குக் கூறினேன். மிகவும் பெலவீனமாய் இருந்தபடியால் மற்றவர்களின் துணையில்லாமல் என்னால் வெளியே செல்ல முடியவில்லை. ஆனாலும் சபையின் போதகர் என்ற முறையில் என்னுடைய கடமையைச் செய்வதில் நான் தவற விரும்பவில்லை. நான் இல்லாத நேரத்தில் டாக்டர் ஜான் ஹுஸ்டனும், பிற்காலத்தில் என் மாமியராக மாறிய ஜெசில் சோய் அம்மையாரும் சபையின் காரியங்களைக் கவனித்தனர்.

மூப்பர்கள் என்னை சபையின் பிரசங்க மேடைக்குக் கொண்டு சென்றனர். கால்கள் நடுங்க, மிகவும் மெல்லிய குரலில் பிரசங்கிக்கத் தொடங்கினேன். ஆனால் என்னுடைய பிரசங்கம் எட்டு நிமிடங்களே நீடித்தது. மேடையிலேயே மயங்கி விழுந்தேன். மூப்பர்கள் என்னை என்னுடைய அலுவலக அறைக்குக் கொண்டு சென்றனர். மயக்கம் தெளிந்ததும் மறுபடியும், "அவருடைய தழும்புகளால் குணமானேன்; அவர் என்னுடைய பெலவீனங்களை ஏற்றுக்கொண்டு என்னுடைய நோய்களைச் சுமந்தார்" என்று அறிக்கையிட்டேன். ஆனாலும் நான் குணமாவேன் என்று பரிசுத்த ஆவியானவர் என்னுடைய இருதயத்தில் உறுதிப்படுத்தவில்லை. மீண்டும் மூப்பர்களிடம் "இரண்டாவது ஆராதனைக்கு என்னைக் கொண்டு போங்கள்; கர்த்தர் என்னைப் பெலப்படுத்துவார் என்று விசுவாசிக்கிறேன்" என்று கூறினேன்.

இரண்டாவது ஆராதனையிலும் பிரசங்கபீடத்தில் சரீரமெல்லாம் நடுங்கும் நிலையில் "ஆண்டவரே, விசுவாசத்துடன் வந்திருக்கிறேன்; என்னை உம்முடைய வார்த்தையின்படியே பெலப்படுத்தும்" என்று மூப்பர்கள் என்னை என்னுடைய வீட்டிற்கு கொண்டு சென்றனர். நான் உண்மையில் செத்துக்கொண்டிருப்பதை அப்போதுதான் உணர்ந்தேன். அப்போதுதான் எனக்குள் ஆண்டவர் பேச ஆரம்பித்தார். "வசனத்தை குருட்டாட்டமாக அறிக்கையிடுவதனால் மட்டும் சுகத்தைப் பெற முடியாது" என்றார் அவர்! அதுவரை என்னுடைய வாழ்க்கையில் ஆண்டவரின் சித்தம் என்ன என்று அவரிடம் ஒருபோதும் நான் கேட்டதில்லை. உண்மையில் தேவன் என்னைக் குணமாக்காமலும் இருக்கமுடியும் என்று நான் நினைத்துக்கூடப் பார்க்கவில்லை.

"பிதாவே, நீர்தானே இந்த வாக்குத்தத்தங்களைக் கொடுத்தீர்! நான் அவைகளை அறிக்கையிட்டும் ஏன் எனக்குச் சுகம் கிடைக்கவில்லை? நீர் என்னைக் குணமாக்கப் போவதில்லையா?" என்று கதறினேன். அப்பொழுது தேவன் கூறிய வார்த்தைகள் என்னைத் திடுக்கிடச் செய்தன. "மகனே, நான் உன்னைக் குணமாக்கப் போகிறேன்; ஆனால் அதற்குப் பத்து வருடங்கள் ஆகும்" என்றார் உறுதியான குரலில்! என் காதுகளால் கேட்கும்படியாக அவர் பேசவில்லையானாலும் பேசுவது தேவனே என்பதை என்னால் அறிந்துகொள்ள முடிந்தது. தேவன் என்னைக் கடுமையாகத் தண்டித்து விட்டதைப் போன்ற உணர்வினால் நான் நடுங்கினேன். ஆனாலும் ஒரு விதமான சமாதானம் என் இருதயத்தை நிரப்பிற்று. நான் தேவனுடன் போராட விரும்பினேன். ஆனால் தேவனோடு போராடி வெற்றி பெற முடியாதென்பது எனக்குத் தெரியும்.

1964 முதல் 1974 வரையான அடுத்த பத்து ஆண்டுகளும் எந்த நிமிடத்திலும் செத்துவிடுவேன் என்று சொல்லக்கூடிய நிலைமையிலேயே நான் இருந்தேன். கடினமான இருதயத்தை உடைக்க கர்த்தருக்குப் பல வருடங்கள் ஆகும் என்பதை அன்று நான் தெளிவாகப் புரிந்து கொண்டேன். நான் ஒரு வினாடியில் உடைக்கப்பட விரும்பினேன். ஆனால் என்னுடைய "நான்" என்னும் அகம்பாவத்தை உடைக்க தேவனுக்கு பத்து ஆண்டுகள் ஆயிற்று.

நான் இந்த பத்தாண்டுகளில் அனுபவித்த கஷ்டங்களை விவரிப்பது கடினம். ஒவ்வொரு நாளும் காலையில் எழுந்தவுடன் என்னுடைய இருதயம் மிக வேகமாகத் துடிக்கும். என்னுடைய கால் பாதங்களிலிருந்து ஒருவித மரண உணர்வு தலைவரை வரும். "இன்று உயிரோடிருப்பேனோ?" என்ற எண்ணம் ஒவ்வொருநாளும் உண்டாகும். ஆனாலும் "குணமாக்குவேன்" என்று தேவன் கூறிய வார்த்தைகள் நினைவுக்கு வரும். உடனே, "இல்லை, நான் சாகப்போவதில்லை" என்று கூறியபடி படுக்கையை விட்டு எழுந்து ஜெபிக்க சிரமப்பட்டபடியே எனக்கு அவசியமாயிருந்த மருந்துகளைச் சாப்பிடுவேன்.

கொரியாவிலேயே மிகப்பெரிய சபையை உருவாக்க வேண்டும் என்னும் என்னுடைய தரிசனம் என் கண்களுக்கு முன்பாகத் தோன்றும். 2,400 உறுப்பினர்கள் கொண்ட ஒரு சபையை நிர்வகிக்கவே முடியாத நிலையில் கொரியாவிலேயே பெரிய சபையை எவ்வாறு உருவாக்கப்போகிறேன் என்று எண்ணித் திகைத்தேன்.

ஆனால் தேவன் என்னைக் குணமாக்குவதாக வாக்குப்பண்ணி யிருந்ததால் நான் சோர்ந்துபோகவில்லை. பிரசங்கபீடத்தில் நின்று பிரசங்கம் பண்ணமுடியாத அளவுக்கு நான் பெலவீனமாயிருந்தபோதும் போதகர் ஜான் ஹர்ஸ்டன் பிரசங்கிப்பத்தைக் கேட்பதற்காக என்னை சபைக்குக் கொண்டுபோகும்படி சபையின் மூப்பர்களை வலியுறுத்தினேன்.

இப்படிப்பட்ட பரிதாபமான நிலையிலிருந்தபோதுதான் என்னுடைய பாடுகளில் தேவன் ஒரு மேலான நோக்கத்தை வைத்திருந்ததை மெதுவாக அறிந்து கொண்டேன். அவருடைய நடத்துதலுக்கு என்னை முற்றுமாய் அர்ப்பணிக்க வேண்டியதன் அவசியம் அப்போதுதான் எனக்குப் புரிந்தது. அப்போதுதான் என்னைக் குறித்தும் பூரண சுவிசேஷ மத்திய சபையைக் குறித்தும் தேவனுடைய திட்டம் என்னவென்பதைப் புரிந்துகொள்ளமுடிந்தது.

அத்தியாயம் 2

தேவனுடைய புது பயிற்சித்திட்டம்!

நான் சுகவீனமடைந்து ஒரு மாதத்திற்குபின் தன்னுடைய சபையை நிர்வகிப்பதில் நான் பின்பற்றிய தவறான அணுகு முறைகளைத் தேவன் வெளிப்படுத்த தொடங்கினார். நான் படுத்த படுக்கையாக இருந்தேன். ஊழியம் செய்ய முடியாமற்போனாலும் ஊழியத்தைவிட்டுவிட எனக்கு விருப்பமில்லை. ஜான் ஹூஸ்டனும், என் மாமியாரும் சபையைக் கவனித்து வந்தனர். ஆனாலும் 2,400 விசுவாசிகளின் பாரத்தை சுமக்க அவர்களால் முடியவில்லை. ஜான் கொரிய மொழியை நன்கு அறிந்தவரல்ல; எனவே விசுவாசிகளை அணுகி, அவர்களது கஷ்டங்களை அறிந்து அவர்களுக்காக ஜெபிக்க அவரால் முடியவில்லை. என் மாமியார் பெண்ணாயிருந்தபடியால் ஆண்கள் அவர்களிடம் தங்கள் பிரச்சனைகளைக் கூறத் தயங்கினர்.

எல்லாவற்றுக்கும் மேலாக கொரியா மிகவும் ஏழ்மையான நாடா யிருந்தபடியால் வளர்ந்துவரும் எங்களது சபையின் பணத்தேவைகளைச் சந்திப்பது எங்கள் சபையாருக்கு மிகக் கடினமாயிருந்தது. எனவே அதிகமான முழு நேர ஊழியர்களை நியமிப்பதும் சிரமமாயிருந்தது. எனவே விசுவாசிகளையே ஊழியத்தில் பயன்படுத்த வேண்டிய நிர்ப்பந்தம் எனக்கு உண்டாயிற்று. ஆனால் அதை எப்படிச் செய்வதென்று எனக்குத் தெரிய வில்லை. என்னால் ஒன்றும் செய்ய முடியவில்லை!

என்னுடைய சுகவீனமான நிலையில் என்னால் ஒன்றும் செய்ய முடியவில்லை. பெரும்பாலான நேரம் நான் படுத்தே இருந்தேன். மற்றவர்களுடைய உதவியில்லாமல் வீட்டைவிட்டு வெளியே செல்ல முடியாத நிலை, காரணம், திடீரென மயக்கம் வந்து விடும். சிறிது நேரம் தூங்குவதும் ஜெபிப்பதும்; மீண்டும் தூங்குவதும் மறுபடியும் ஜெபிப்பதுமே என்னுடைய அன்றாட வேலையாக மாறிவிட்டது. “தேவனே, என்னை ஏன் இந்த பயங்கரமான நிலையில் வைத்திருக்கிறீர்? உம்முடைய நோக்கமென்ன?” என்று கதறினேன். பிற்காலத்தில் தேவன் என்னை வல்லமையாய் உபயோகப்படுத்துவதற்கு என்னை ஆயத்தப்படுத்திக்கொள்ளும்படி அநேக வேதபாடங்களைக் கற்றுக்கொள்ள அந்நாட்கள் எனக்கு பிரயோஜனமாய் இருந்தன என்பதை இப்போது அறிகிறேன்.

தன்னுடைய திட்டத்தை பூரணமாய் வெளிப்படுத்துவதற்கு முன் தேவன் எனக்கு இரண்டு சத்தியங்களைக் குறித்த வேதபாடத்தை கற்றுக் கொடுத்தார். அவற்றில் ஒன்று தெய்வீக சுகம். மற்றது பரிசுத்த ஆவியானவர் பற்றியதாகும். தெய்வீக சுகத்தைக் குறித்து அதற்கு முன்பே நான் பிரசங்கித்திருக்கிறேன். அற்புதங்களைக் கண்டிருக்கிறேன். ஆனால் என்னுடைய வாழ்வில் சுகம் பெறுவதற்கான விசுவாசம் எனக்குள் இல்லாதிருந்தது. தெய்வீக சுகத்தைப் பற்றிய முழுமையான வேத அறிவு எனக்கு அப்போது இல்லை. பரிசுத்த ஆவியானவரோடு நெருங்கிய ஐக்கியம் வைத்திருப்பதன் அவசியமும் அப்போது எனக்குத் தெரியாதிருந்தது.

இந்த இரண்டு வேத பாடங்களுமே "தெய்வீக சுகமளிக்கும் இயேசு கிறிஸ்து" **(Jesus Christ the Divine Healer)** "பரிசுத்த ஆவியானவர்" **(The Holy Spirit)** என்னும் இரு புத்தகங்களையும் எழுத உதவின. தேவன் வெளிப்படுத்திய இந்த வேத பாடங்களின் மூலம் என்னுடைய விசுவாசமும் அறிவும் வளர்ந்தது. உதாரணமாக நான் வேதத்தை வாசித்தபோது பரிசுத்த ஆவியானவரோடு எப்போதும் நெருங்கிய தொடர்பு அல்லது ஐக்கியம் வைத்துக்கொள்ள வேண்டியதன் அவசியத்தை அறிந்துகொண்டேன் (2 கொரி.13:14). ஐக்கியம் என்பதற்கு ஒரு அகராதியில் "ஆழமான புரிந்து கொள்ளுதலுடன் கூடிய நெருங்கிய உறவு" என்று விளக்கம் கொடுக்கப் பட்டிருந்தது. இன்னொரு அகராதியில் "ஒருவருடைய சிந்தனைகளையும், உணர்ச்சிகளையும் மற்றொருவருடன் பகிர்ந்து கொள்ளுதல்" என்று கூறப்பட்டுள்ளது.

என்னுடைய நெருக்கடியின் மத்தியில் பரிசுத்த ஆவியானவரோடு ஆழமான நெருங்கிய ஐக்கியம் வைத்துக்கொள்ளவதன் அவசியத்தை தேவன் எனக்கு உணர்த்தினார். "ஒரு திருமணத்தைக் குறித்து நினைத்துப் பார். ஒரு மனிதன் ஒரு பெண்ணை திருமணம் செய்தபின் அவளை தன் வீட்டில் கொண்டுவந்து விட்டுவிட்டு, தன் வீட்டிலுள்ள அசையாப் பொருளைப்போல அவளை நடத்துவதில்லை. மாறாக அவளை நேசிக்கிறான்; தன்னுடைய வாழ்க்கையை, உணர்வுகளை, அவளோடு பகிர்ந்து கொள்ளுகிறான். அப்படிப்பட்ட நெருங்கிய உறவு பரிசுத்த ஆவியான வருக்கும் உனக்கும் இருக்கவேண்டும்" என்று தேவன் தெளிவாக என்னோடு பேசினார்.

1964–65 ஆண்டுகளில் நான் அதிக சுகவீனமாயிருந்தேன். எனவே படுக்கையிலேயே எப்போதும் உட்கார்ந்து கொண்டு அதிகமாகப் பரிசுத்த ஆவியானவரோடு நெருங்கி வாழக் கற்றுக்கொண்டேன். அப்போதுதான்

இந்த இரு புத்தகங்களையும் எழுதினேன். கொரியாவிலும், ஜப்பானிலும் மிக அதிகமாக விற்பனையாகும் புத்தகங்களாக இப்புத்தகங்கள் இருக்கின்றன.

ஆனால் அந்நாட்களில் நான் கற்றுக்கொண்டதெல்லாம் தேவன் எனக்கு வெளிப்படுத்த விரும்பிய காரியங்களின் ஆரம்ப பாடங்கள் மட்டுமே. அந்த வெளிப்படுத்துதல் என்னுடைய ஊழியத்தில் மிக வல்லமையாகப் பயன் பட்டன. சுருக்கமாகக் கூறுவதானால் தேவன் எனக்குக் கற்றுக்கொடுத்த அனுபவங்களை என்னுடைய சபையாருக்கும் பகிர்ந்து கொடுக்க விரும்பினார்.

நான் படுக்கையில் படுத்துக்கொண்டு என்னுடைய பெரிய சபையை நான் தனிமையாக எவ்வாறு நிர்வகிக்கப்போகிறேன் என்று ஒருநாள் திகைத்துக் கொண்டிருந்தேன். அப்பொழுது பரிசுத்த ஆவியானவர் "என் ஜனங்கள் வெளியேறி வளரட்டும்" என்று பேசுகிற சத்தத்தைக் கேட்டேன். நான் திகைத்துப்போய் "ஆண்டவரே, என்ன சொல்லுகிறீர்?" என்று கேட்டேன். அவர் தொடர்ந்து, "என் ஜனங்கள் பால் யாங்கி சோவின் ஆளுகை யிலிருந்து வெளியே புறப்பட்டுப் போய் வளரட்டும்" என்றார். "அவர்கள் வளரட்டும்" என்பதன் பொருளென்ன? என்று நான் மறுபடியும் கேட்டபோது, "அவர்கள் தங்கள் சொந்த கால்களில் நின்று ஊழியம் செய்ய உதவி செய்" என்றார். நான் வேதத்தை ஆராய்ந்து பார்க்க இந்த வார்த்தைகள் என்னைத் தூண்டின.

எபேசு சபைக்கு பவுல் எழுதிய நிருபத்தை நான் வாசித்தபோது, அது எனக்கு தைரியமளித்தது. எபே.4:12,13 வசனத்தில் "பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும் பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும், அவர் சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும், போதகராகவும் ஏற்படுத்தினார்" என்று கூறப்பட்டுள்ளது.

அப்போஸ்தலர், தீர்க்கதரிசி, சுவிசேஷகர், மேய்ப்பர், போதகர் ஆகிய ஊழியர்கள் சபையின் விசுவாசிகளை சுவிசேஷ ஊழியத்தின் வேலையைச் செய்யும்படி பயிற்றுவிக்கவே சபைக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை அப்போதுதான் நான் கண்டுகொண்டேன்.

பின்பு அப்போஸ்தலர் 2:46,47 வசனங்களை வாசித்தபோது ஆதிச் சபைகளில் இருவிதமான கூட்டங்கள் நடைபெற்றதைப் பற்றி கவனித்தேன். ஆதி சீஷர்கள் தேவாலயத்தில் அனுதினமும் கூடினார்கள். அதுமட்டு மல்லாமல் வீடுகள்தோறும் அப்பம் பிட்டு ஐக்கியம் பாராட்டினார்கள்.

எருசலேமில் இருந்த ஆதி சபையில் ஏறத்தாழ ஒரு லட்சம் விசுவாசிகள் இருந்தனர். எருசலேமில் மொத்த ஜனத்தொகையாகிய இரண்டு லட்சம் பேரில் சரிபாதி கிறிஸ்தவர்களாயிருந்தனர். பன்னிரண்டு அப்போஸ்தலர்கள் மட்டுமே இருந்த எருசலேம் சபையை எவ்வாறு அவர்களால் நிர்வகிக்க முடிந்தது? வீடுகள் தோறும் கூடுகிற சிறு குழுக்களுக்குத் தலைவர்கள் இருந்திருக்கவேண்டும். அப்போஸ்தலர் ஆறாம் அதிகாரத்தில் கூறப் பட்டுள்ள மூப்பர்களோடுகூட வீட்டுக் கூட்டங்களை நடத்துவதற்கென விசுவாசிகளும் பொறுப்புகளை ஏற்றிருக்கவேண்டும்.

அதுவரை சபை என்பது ஒரு பொதுவான கட்டிடம் என்பதே என்னுடைய எண்ணமாயிருந்தது. ஒரு வீடு சபையாக மாற முடியும் என்று நான் ஒருபோதும் எண்ணியதேயில்லை. ஆனாலும் சபையானது வீடுகளில் கூடியது என்பதை வேதம் தெளிவாகக் கூறுகிறது. நான் விசுவாசிகளிடம் "ஞாயிற்றுக் கிழமைகளிலும், புதன்கிழமைகளிலும் ஆலயத்திற்கு வாருங்கள்" என்றுதான் அதுவரை வலியுறுத்தியிருந்தேன். ஆனால் நான் அதுவரை அறிந்திராத "வீட்டு ஊழியம்" ஒன்று இருக்கிறது என்பதை அன்று அறிந்து கொண்டேன்.

தொடர்ந்து அப்போஸ்தலர் ஆறாம் அதிகாரத்தைப் படித்தேன். சபையாரின் உலகப்பிரகாரமான, சரீர தேவைகளைச் சந்திக்கும்படியாக ஏழு மூப்பர்கள் தெரிந்துகொள்ளப்பட்டனர். அப்போஸ்தலர்களோ ஜெபிப்பதற்கும், வேத வசனத்தைப் போதிப்பதற்காகவும் மட்டும் தங்களை வேறு பிரித்துக் கொண்டனர். ஆனால் ஸ்தேவான் கல்லெறியப்பட்டு மரித்தபின்பு சபை சிதறியது. பந்தி விசாரித்துக் கொண்டிருந்த மூப்பர்களும்கூட சுவிசேஷத்தை அறிவிக்கத் தொடங்கினர். இதை அப்போஸ்தலர் எட்டாம் அதிகாரத்தில் பிலிப்புவின் ஊழியத்திலிருந்து நாம் அறியலாம். சாப்பாடு பரிமாறுவதற்கு மட்டுமல்ல, சுவிசேஷத்தை அறிவிப்பதற்கும் அவர்கள் அப்போஸ்தலர்களிடம் அதிகாரம் பெற்றிருந்தனர்! அல்லேலூயா!

பெந்தெகொஸ்தே நாளில் மூவாயிரம்பேர் இரட்சிக்கப்பட்டனர். அடுத்த நாளில் மேலும் ஐயாயிரம்பேர் இரட்சிக்கப்பட்டனர். ஆனாலும் பன்னிரெண்டு அப்போஸ்தலர்களும் ஏழு மூப்பர்களும் மட்டுமே இருந்தனர். எனவே வீடுகளில் கூடிவந்தவர்களைக் கவனித்துக்கொள்வதற்காக ஒவ்வொரு வீட்டிலும் கூடி வந்தவர்களுக்குத் தலைவர்கள் இருந்திருக்க வேண்டும். வளர்ந்து வரும் சபையின் தேவைகளை சந்திப்பதற்கேற்ப சபையின் அதிகாரங்கள் சரியான விதத்தில் பகிர்ந்து கொடுக்கப்பட்டிருந்திருக்க

வேண்டும். பெந்தெகொஸ்தே நாளில் சீஷர்கள் கூடியிருந்த மேலறையில் மூவாயிரம்பேர் எப்படி சேர்க்கப்பட்டிருக்க முடியும்? இடம் போதாதே. எனவே அவர்களுடைய வீடுகளிலேயே அவர்களது ஆவிக்குரிய தேவைகள் சந்திக்கப்பட்டிருக்க வேண்டும் சபையிலல்ல என்ற முடிவுக்கு வந்தேன்.

நான் தொடர்ந்து வேதத்தை வாசித்துக்கொண்டு வந்தபோது, லீதியாளின் வீட்டில் கூடி வந்த சபையைப் பற்றியும் (அப்.16:40). ஆக்கில்லா, பிரிஸ்கில்லாள் வீட்டில் கூடி வந்த சபையைப் பற்றியும் (ரோம.16:3,5). பிலேமோனின் வீட்டில் கூடிய சபையைப் (பிலேமோன் 1:2) பற்றியும் கவனித்தேன். எனவே வீடுகளில் ஜெபக்கூட்டங்கள் நடத்துவது வசனத்திற் கேற்றதுதான் என்ற முடிவுக்கு வந்தேன்.

பின்பு யாத்திராகமம் பதினெட்டாம் அதிகாரத்திற்கு என் கவனம் திரும்பியது. வனாந்தரத்திலே இஸ்ரவேல் ஜனங்களுக்கிடையே உண்டான வழக்குகளைத் தீர்ப்பதற்கு மோசே பட்டப்பாடுகளைக் கவனித்தேன். ஒவ்வொருநாளும் அவர் காலையிலிருந்து இரவு வரை அவர்களுக்கு முன்பாக உட்கார்ந்து வழக்குகளைத் தீர்த்துக்கொண்டிருந்தார். அதைக் கண்ட அவரது மாமனார் எத்திரோ மோசேயிடம் பத்துப் பேருக்கு அதிபதி, நூறு பேருக்கு அதிபதி, ஆயிரம் பேருக்கு அதிபதிகளை ஏற்படுத்தி அதிகாரத்தைப் பகிர்ந்து கொடுக்கும்படி கற்றுக் கொடுத்தார். அதனால் மோசேயின் மீதிருந்த பாரம் குறைந்தது.

“ஜனங்கள் எல்லாருக்குள்ளும் தேவனுக்குப் பயந்தவர்களும் உண்மையுள்ளவர்களும் பொருளாசையை வெறுக்கிறவர்களுமான திறமையுள்ள மனிதரைத் தெரிந்துகொண்டு, அவர்களை ஆயிரம்பேருக்கு அதிபதிகளாகவும், நூறுபேருக்கு அதிபதிகளாகவும், ஐம்பது பேருக்கு அதிபதிகளாகவும், பத்துப்பேருக்கு அதிபதிகளாகவும், ஏற்படுத்தும். அவர்கள் எப்பொழுதும் ஜனங்களை நியாயம் விசாரித்து, பெரிய காரியங்கள் யாவையும் உம்மிடத்தில் கொண்டுவரட்டும், சிறிய காரியங்கள் யாவையும் தாங்களே தீர்க்கட்டும்; இப்படி அவர்கள் உம்மோடேகூட இந்தப் பாரத்தைச் சுமந்தால் உமக்கு இலகுவாயிருக்கும்” (யாத்.18:21,22).

அதிகாரத்தைப் பகிர்ந்து கொடுப்பது தேவனுடைய சித்தத்தின் படியானதே என்ற தெளிவு எனக்கு இவ்வசனங்கள்மூலம் உண்டாயிற்று. “என்னுடைய சபையின் மூப்பர்கள் தங்களுடைய வீடுகளை வீட்டு சபைகளாக மாற்ற அனுமதித்து அவர்கள் ஜனங்களுக்குப் போதித்து, ஜெபித்து அதனால் இரட்சிக்கப்படுகிறவர்கள் தங்கள் வீடுகளில்

ஜெபக்குழுக்களை அமைத்து நண்பர்களையும், உறவினர்களையும் வரவழைத்து, அவர்களை இரட்சிப்பிற்குள் கொண்டு வந்து இப்படியாக வீட்டு ஜெபக்குழுக்களுக்கு வருவோர் ஞாயிற்றுக்கிழமைகளில் சபையில் தேவனை ஆராதிக்கும்படி கூடி வந்தால் நான் வீடு வீடாக ஏறி சுவிசேஷம் அறிவித்து ஆலோசனைகள் கூறி ஆத்துமாக்களை ஆதாயம் செய்யவேண்டிய பாரம் குறையுமே. வசனத்தைப் போதிப்பதும், விசுவாசிகளை ஊழியத்திற்கும் பயிற்றுவிப்பதுமே என்னுடைய பணியாயிருக்கும்; அதனால் எனக்கும் போதிய ஒய்வு கிடைக்கும்" என்ற எண்ணம் எனக்குள் உதித்தது.

மூன்று வாரங்களுக்குள் என்னுடைய சபையைக் குறித்த புதிய திட்டம் எனக்குள் உருவாயிற்று. ஆனாலும் எங்களது சபையின் மூப்பர்களிடம் இத்திட்டத்தைக் கூறி அவர்களிடமும் சம்மதம் வாங்க வேண்டியிருந்தது. என்னுடைய தலைமையைக் குறித்து அவர்கள் ஏற்கெனவே கவலைப்பட்டுக் கொண்டிருந்ததால் இத்திட்டத்தை இவர்களுக்குத் தெளிவாக விளக்க வேண்டியிருந்தது.

அதன்பின்பு நான் எழுந்து நடமாட முடிந்தது. ஆனாலும் மிகவும் பெலவீனமாயிருந்ததால் நடக்கத் தடுமாறும் நிலையிலிருந்தேன். நான் ஒரு டாக்டரிடம் சென்றபோது அவர், "உங்களது இருதயம் பெலவீனமாயிருப்ப தால் உங்கள் முழுச் சரீரமும் பெலவீனமாயிருக்கிறது. நரம்புத் தளர்ச்சி உண்டாயிருக்கிறது. ஆகவே நீங்கள் ஊழியம் செய்வதையே விட்டு விடுங்கள்" என்றார்.

"எனக்கு ஏதாவது மருந்து இருக்கிறதா?" என்று அவரிடம் கேட்டேன். அதற்கு அவர், "இல்லை, உங்கள் சரீரத்தில் ஒரு கோளாறும் இல்லை, நீங்கள் அதிகமாய் உழைத்ததினால் உங்கள் இருதயம் பெலவீனப் பட்டிருக்கிறது; அதற்கு மருந்தொன்றுமில்லை; உங்கள் உணர்ச்சிகளை அதிகம் பாதிக்காத வேறு வேலை எதையாவது செய்வதுதான் ஒரேவழி" என்று கூறினார் அந்த டாக்டர்.

அவருடைய வார்த்தைகள் என்னுடைய ஊழியத்தை மரணக்குழிக்குள் தள்ளுவதைப் போலிருந்தது. ஆனாலும் நான் சோர்ந்து போய்விடவில்லை. "தேவன் உன் மூலம் ஒரு பெரிய சபையைக் கட்டுவேன் என்றும், உன்னை பத்து ஆண்டுகளில் படிப்படியாகக் குணமாக்குவேன்" என்றும் கூறிய வார்த்தைகள் எனக்குள் இருந்ததால் டாக்டரின் வார்த்தையை விசுவாசிப்பதைப் பார்க்கிலும் தேவனுடைய வார்த்தையை விசுவாசிப்பதே சிறந்ததென்று தீர்மானித்தேன். அப்படியே தேவனில் சார்ந்து கொண்டேன்.

அத்தியாயம் 3

திட்டத்தை சபையாருடன் பகிர்ந்துகொள்ளுதல்!

நான் இருபத்தெட்டே வயது நிரம்பிய வாலிபனாயிருந்தபோதும் என்னுடைய சரீரம் ஒன்றுக்கும் உதவாததாயிருந்தது. பிரசங்கிக்கும் தொழிலை விட்டுவிட்டு வேறு தொழில் செய்யுங்கள் என்று டாக்டரும் கூறிவிட்டார். ஆனாலும் என்னுடைய சரீர பெலவீனத்தின் மத்தியிலும் என்னுடைய படுக்கையில் தேவன் பேசிய வார்த்தைகள் என்னை மகிழ்ச்சியடையச் செய்தன. என்னுடைய சபையை மீண்டும் கட்டுவதற்கான சரியான திட்டத்தை தேவன் எனக்கு வெளிப்படுத்தி விட்டார். இனி நான் தனிமையாகக் கஷ்டப்பட வேண்டிய அவசியமில்லை. தேவனுடைய திட்டம் வெற்றிகரமாகச் செயல்படும் என்ற நிச்சயம் எனக்கிருந்ததால் உடனடியாக அத்திட்டத்தைச் செயல்படுத்த ஆவலாயிருந்தேன்.

ஆனாலும் நான் சுயமாக என்னுடைய சபையாரைப் பார்த்து இந்த திட்டத்தை செயல்படுத்துங்கள் என்று கட்டளையிட முடியாது. 2400 உறுப்பினர்கள் இருந்த என்னுடைய சபைக்கு மூப்பர்கள் குழு ஒன்று இருந்தது. சபையின் அமைப்பிலோ அல்லது ஊழியத்திலோ மாற்றங்கள் செய்வதானால் அவர்களிடம் அனுமதி பெறவேண்டும். நான் தேவனை நோக்கி, "ஆண்டவரே, இது உம்முடைய திட்டம். அவர்கள் எப்படி மறுக்க முடியும்" என்று ஜெபித்தேன். எதிர்ப்பு எதுவும் இராதென நம்பினேன்.

நான் நடமாடத் தொடங்கிய ஒரு மாதத்திற்குப் பின் மூப்பர்கள் கமிட்டியைக்கூட்டி அவர்களிடம், "நான் மிகவும் பெலவீனமாயிருப்பது உங்களுக்குத் தெரியுமல்லவா! என்னால் வீடுகளைச் சந்திக்க முடியாது. வியாதியஸ்தருக்காக ஜெபிக்கவோ அல்லது பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்திற்காகவோகூட என்னால் அதிக நேரம் நின்று ஜெபிக்க முடியாது" என்று கூறி தேவன் எனக்குத் கொடுத்திருந்த திட்டத்தை அவர்களுக்கு விளக்கமாகக் கூறினேன். வீட்டு ஜெபக்குழுக்கள் எவ்வாறு பயனளிக்கும் என்பதை தேவ வசனத்தின் ஆதாரத்தோடு எடுத்துரைத்தேன். "நீங்களே உங்கள் சொந்தக்கால்களில் நின்று ஊழியத்தைப் பொறுப் பெடுத்துச் செய்ய வேண்டும்" என்று விளக்கினேன். அப்பொழுது ஒரு மூப்பர் "நீங்கள் சொல்வது வேதத்தின் அடிப்படையிலான நல்ல

திட்டம்தான். ஆனால் நாங்கள் எவ்வித வேதாகமப் பயிற்சியும் பெறவில்லையே; நீங்கள் பயிற்சி பெற்றிருக்கும் காரணத்தினாலேயே உங்களுக்குச் சம்பளம் கொடுத்து எங்கள் போதகராய் வைத்திருக்கிறோம்'' என்றார். இன்னொருவர் ''எனக்கு வேலைகள் அதிகம்; மாலையில் வேலை முடித்து களைப்புடன் வருகிறேன். எனக்கு ஓய்வு தேவை; என்னால் வீட்டு ஜெபக்குழுவை தலைமை தாங்கி நடத்த முடியாது'' என்றார்.

எல்லோருமே, ''இது நல்ல திட்டம்தான், கர்த்தரால் கொடுக்கப் பட்டதுதான், ஆனால் நம்முடைய சபையில் இதைச் செயல்படுத்துவது கடினம்'' என்று கூறிவிட்டார்கள். அவர்களை சரிப்படுத்த எவ்வளவோ முயன்றும் என்னால் முடியவில்லை. கூட்டத்திற்குப் பின் என்னுடைய ஊழியத்தைக் குறித்த சந்தேகங்கள் மறுபடியும் எனக்குள் வரத்தொடங்கின. மூப்பர்கள் வெளிப்படையாக என்னிடம் கூறாவிட்டாலும் ஒரு வேலையைச் செய்வதற்காக அவர்கள் எனக்குச் சம்பளம் கொடுக்கும்போது, அதே வேலையை அவர்களைக் கொண்டு இலவசமாக செய்து முடிக்க நான் முயற்சிப்பதாக அவர்கள் நினைத்தது எனக்குத் தெளிவாகவே தெரிந்தது. என்னுடைய வியாதியைக் காரணமாக வைத்து என்னுடைய கடமையை நான் தட்டிக்கழிப்பதாக அவர்கள் என்னைக் குற்றம் சாட்டுவார்களோ என்ற பயம் எனக்குள் உண்டாயிற்று.

என் சபை மூப்பர்கள் இரக்கமே இல்லாதவர்களாய் இருக்கிறார்களே என்று எண்ணினேன். வேறு போதகரை நியமிக்கப்போகிறோம் என்று அவர்கள் கூறாவிட்டாலும் கூட நானாக பொறுப்பிலிருந்து விலகினால் அதை உடனடியாக ஏற்றுக்கொள்ள அவர்கள் தயாராயிருந்தார்கள் என்ற செய்தி மற்ற விசுவாசிகள்மூலம் என் காதுகளுக்கு எட்டியது.

நான் இன்னும் பெலவீனமாகவே இருந்தேன். அடிக்கடி மயக்கம் வரும்போலிருக்கும். மூப்பர்கள் என்னுடைய திட்டத்தை நிராகரித்தது என்னை மிகவும் ஏமாற்றமடையச் செய்தது. என்னுடைய முழு நம்பிக்கைக்குரிய ஒரே ஒருவர் பிற்காலத்தில் என்னுடைய மாமியாராக மாறிய திருமதி ஜெசில் சோய் அம்மையார் மட்டுமே. அவர்களிடம் எல்லாவற்றையும் மனந்திறந்து கூறினேன்.

நாம் இதற்காக ஒன்றுபட்டு ஜெபிப்போம் என்று கூறினார்கள். திருமதி சோய் சில நாட்கள் ஜெபித்து வேத வசனங்களை ஆராய்ந்தபின் நானும் அவர்களும் வீட்டு ஜெபக்குழுக்கள் ஆரம்பிப்பதற்கான வேறு வழிகளைப் பற்றி விவாதித்துக் கொண்டிருந்தபோது பெண்களை இந்த ஊழியத்தில்

பயன்படுத்தலாம் என்ற எண்ணம் இருவருக்கும் ஒரே நேரத்தில் உண்டாயிற்று. நாங்கள் தொடர்ந்து அதற்காக ஜெபித்தோம். திருமதி சோய் அவர்கள் "இது தேவனுடைய சித்தமாகவே இருக்க வேண்டும். அதனால் தான் அவர் ஒரே நேரத்தில் இருவருக்கும் இந்த திட்டத்தை வெளிப்படுத்தியிருக்கிறார். நாம் சபையின் பெண் மூப்பர்களை அழைத்து அவர்களிடம் இத்திட்டத்தைப் பற்றிக்கூறுவோம்'' என்றார்கள்.

நான் அவநம்பிக்கையோடு தலையசைத்துக்கொண்டு, "இது அமெரிக்காவல்ல, கொரியா; பெண்களின் உரிமைக்காகப் போராடும் இயக்கம் எதுவும் கொரியாவில் இல்லை; பெண்களை மதிக்காத ஒரு சமுதாயத்திலல்லவா நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறோம்! பெண்களுக்கென்று கொரியாவில் எவ்வித உரிமையும் இல்லை. அவர்கள் கணவன் சொல்வதைக் கேட்டு அப்படியே கீழ்ப்படிய வேண்டிய நிலைமையிலிருக்கிறார்கள். அப்படியிருக்க பெண்களை சபையில் உபயோகிப்பதை யார் ஏற்றுக்கொள்வார்கள்? பெண்கள் சபையிலோ அல்லது சமுதாயத்திலோ இதுவரை எந்தப் பதவியிலும் நியமிக்கப்பட்டதில்லையே, அவர்களை சபையின் ஊழியத்தில் பயன்படுத்துவது முடியுமா? ஆண்கள் எதிர்ப்பார்களே! மேலும் சபையில் பெண்கள் மௌனமாயிருக்கவேண்டும் என்று பவுல் தீமோத்தேயுக்கு எழுதும்போது கூறியிருக்கிறாரே'' (1 தீமோ.2:11) என்று கூறினேன்.

பழமையான பாரம்பரியங்களில் மூழ்கியிருந்த நான் பவுல் தீமோத்தேயுக்கு எழுதியதைத் தவறாகப் புரிந்து கொண்டிருந்தேன். கொரியாவிலிருந்த பெரும்பாலான சபைகளில் ஆராதனையில் பெண்கள் தனியாகவும், ஆண்கள் தனியாகவும் உட்காருவது வழக்கம். பெண்கள் இடது புறத்திலும், ஆண்கள் வலது புறத்திலும் சபையில் உட்காருவார்கள். ஒருவரையொருவர் பார்க்க முடியாதபடி பெண்களுக்கும், ஆண்களுக்கும் நடுவே பெரிய திரை தொங்கவிடப்பட்டிருக்கும். ஆராதனை முடியும் நிலையிலிருக்கும்போது பெண்கள் திரைக்கு அப்பாலிருக்கும் தங்கள் கணவரிடம் "ஆராதனை முடிந்ததும் நான் வாசலில் நிற்கிறேன். நீங்கள் சீக்கிரம் வந்து விடுங்கள்'' என்று முணுமுணுக்க ஆரம்பிப்பார்கள். சில நேரங்களில் போதகர்கள், "ஆராதனை முடியும்வரை யாரும் தயவுசெய்து பேசக்கூடாது'' என்று கண்டிக்க வேண்டிய நிலை உருவாகும்.

சாராள் ஆபிரகாமை "ஆண்டவனே'' என்றழைத்தது போலவே கொரியாவிலும் பெண்கள் தங்கள் கணவரை "ஆண்டவனே'' என்றே

அழைப்பது வழக்கம். அப்படி அழைக்காவிட்டால் கணவனை அவமதித்ததாகக் கருதப்படுவார்கள். கொரியப் பெண்களிடம், "உங்கள் கணவர் எப்படி இருக்கிறார்" என்று கேட்டால், "என் ஆண்டவன் சுகமாயிருக்கிறார்" என்றே பதில் கூறுவார்கள்.

இந்த எண்ணமெல்லாம் என் மனதிலிருந்தபடியால் பெண்களை சபையில் உபயோகிக்கும்படி தேவன் கூறியபோது, "ஆண்டவரே, என்னுடைய சபையை அழிப்பதற்காக இப்படிப்பட்ட திட்டத்தைக் கூறுகிறீரா? பெண்களை உபயோகித்து அவர்களுக்குப் பொறுப்புகளைப் பகிர்ந்து கொடுத்தால் சபையிலிருக்கும் ஆண்கள் அனைவரும் கோபித்து சண்டைக்கு வர மாட்டார்களா? கொரியாவிலிருக்கும் எல்லோரும் என்னை எதிர்ப்பார்களே! என் ஆலயத்தையே மூட வேண்டிய நிலை வந்துவிடுமே?" என்று புலம்பினேன்.

அப்போது ஆண்டவர் தெளிவாக, "அது உன்னுடைய எண்ணம். என்னுடைய எண்ணம் சபைகளில் பெண்களை உபயோகிக்கவேண்டும் என்பதே" என்று கூறினார். அடுத்த சில நாட்களாக நான் வேதத்தை ஆராய்ந்ததுடன், "ஆண்டவரே, பெண்களை ஊழியத்தில் உபயோகிப்பதற்கு வேதவசன ஆதாரங்களைக் காண்பியும்" என்று ஜெபித்தேன். அப்பொழுது தான் பவுல் பெண்களுக்கு எதிரானவரல்ல; அவரே தனது ஊழியத்தில் பெண்களை அதிகமாகப் பயன்படுத்தியிருக்கிறார் என்பதை அறிந்து கொண்டேன். ரோம.16:1 வசனத்தில் பெபேயாள், கெங்கிரேயா சபைக்கு ஊழியக்காரியாய் இருந்தாள் என்று பார்க்கிறோம். அதாவது சபையின் முக்கிய பொறுப்பிலிருந்தாள். அதே நேரத்தில் பவுலின் அதிகாரத்திற்கு கீழ்ப்படிந்திருந்தாள். ஊழியக்காரி என்று சொல்லும்போது அவள் பிரசங்கம் செய்திருக்கவும் வேண்டும். பிரசங்கிக்கவும் பவுல் அவளுக்கு அதிகாரம் கொடுத்திருந்தார்.

ரோம.16:3–ல் பிரிஸ்கில்லாள், ஆக்கில்லாவின் வீட்டில் கூடிவந்த சபையைப் பற்றி பவுல் குறிப்பிடுகிறார். அந்தச் சபையை யார் தலைமை தாங்கி நடத்தியிருக்கக்கூடும்? கொரியாவில் தலைவரது பெயரைத் தான் முதலில் குறிப்பிடுவது வழக்கம், பவுல் பிரிஸ்கில்லாளை முதலாவது குறிப்பிடுகிறார். எனவே பெண்களை மதிக்காத பின்னணியில் வளர்ந்தவனாகிய எனக்கு அது கஷ்டமாயிருந்தது.

கொரியாவில் ஒருவர் ஒரு வீட்டிற்குள் நுழைந்தவுடன் வீட்டில் கணவர் இருந்தாலும் இல்லாவிட்டாலும் "உங்கள் கணவர் எப்படி இருக்கிறார்?" என்றுதான் முதலில் கேட்க வேண்டும். பெண்களை முதலாவது நலம்

விசாரித்தால், அவர் அந்த வீட்டை அவமதித்ததாகக் கருதப்படுவார். மேலும் கொரியாவில் மேற்கத்திய நாடுகளைப்போல "லேடிஸ் அண்ட் ஜென்டில்மென்" என்று கூறாமல் "ஜென்டில்மென் அண்ட் லேடிஸ்" என்றே கூறுவார்கள். வீடுகளில் ஆண்கள் கதவைத் திறந்து மனைவி உள்ளே வரும் வரை கதவைப் பிடித்துக்கொண்டு நிற்க மாட்டார்கள். பெண்களே கதவைத் திறந்து கணவர் உள்ளே வரும் வரை கதவைப் பிடித்துக்கொண்டு நின்று கணவர் சென்றபின் பின்னால் செல்லவேண்டும். இப்படிப்பட்ட சூழ்நிலையில் வளர்ந்த எனக்குப் பவுலின் செயல் தவறாகக் காணப்பட்டது. ஆனால் பிரிஸ்கில்லாள் அந்த வீட்டுச் சபையை நடத்தியதால் பரிசுத்த ஆவியானவர் பவுலை பிரிஸ்கில்லாளின் பெயரை முதலில் குறிப்பிடச் செய்திருக்க வேண்டும்.

"உங்களுக்காக மிகவும் பிரயாசப்பட்ட மரியாளை வாழ்த்துங்கள்" என்று ஆறாம் வசனம் கூறுகிறது. தேவனுக்காகப் பிரயாசப்பட்டு உழைத்தவர்களின் பெயர்களில் மரியாளின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளதேயல்லாமல் அடுப்பறையில் வேலை செய்தாள் என்றோ அல்லது குழந்தைகளைப் பராமரித்தாள் என்றோ சொல்லப்படவில்லை. பவுல் குறிப்பிடும் பெண்களெல்லாம் சுவிசேஷத்தைப் பரப்புவதில் அவனுக்குத் துணையாயிருந்தவர்கள். திரிபேனாள், திரிபோசாள் ஆகிய இரு பெண்களின் பிரயாசம் பற்றி பன்னிரண்டாம் வசனத்தில் பவுல் குறிப்பிடுகிறார். இவர்களெல்லாம் சமையல் செய்வதில்லை. கர்த்தருக்குள் பிரயாசப்பட்டவர்கள் என்பது தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

கர்த்தருக்குள் பிரயாசப்படுவது எவ்வாறு? சாட்சி கூறுவதும், ஜெபிப்பதும், பிரசங்கிப்பதும் ஆவிக்குரிய காரியங்களில் உதவுவதும் கர்த்தருக்குள் பிரயாசப்படுவதாகும். இதிலிருந்து புதிய ஏற்பாட்டில் தேவன் பெண்களை உபயோகித்தார். ஆனால் அவர்கள் ஆண்களின் அதிகாரத்திற்கும் கீழ்ப்பட்டிருந்தனர் என்பதை எனக்கு விளக்கின. பெண்கள் தீர்க்கதரிசனம் கூறும்போது தலையில் முக்காடிட்டுக்கொள்ளவேண்டுமென்று பவுல் 1 கொரி.11:5—ல் கூறுகிறார். அதாவது பெண்கள் தீர்க்கதரிசனம் என்பதும் தேவனிடமிருந்து பெற்றுத் தரப்படும் பிரசங்கமே. தலையில் முக்காடிட்டுக் கொள்வதன் மூலம் ஆண்களின் அதிகாரத்திற்குக் கீழ்ப்படிந்தவர்கள் என்பது விளங்கும்.

பின்பு கர்த்தர் என்னோடே பேசத் தொடங்கினார். "யார் மூலமாக நான் இந்த உலகத்தில் பிறந்தேன்" என்று அவர் கேட்டபோது "மரியாள் என்னும் பெண்மூலமாக" என்றேன் நான்.

“எனக்குப் பால் கொடுத்து வளர்த்தது யார்?”

“ஒரு பெண், ஆண்டவரே”

“என்னுடைய ஊழியத்தில் என்னோடிருந்து தங்கள் ஆஸ்திகளால் என்னைத் தாங்கியவர்கள் யார்?”

“பெண்கள், ஆண்டவரே”

“நான் சிலுவையிலடிக்கப்பட்ட கடைசி நிமிடம் வரை என்னோடிருந்தது யார்?”

“பெண்கள், ஆண்டவரே”

“கல்லறையில் என்னுடைய சரீரத்திற்குச் சுகந்தவர்க்கமிடவந்தவர்கள் யார்?”

“பெண்கள், ஆண்டவரே”

“நான் உயிர்த்தெழுந்தபின் என்னுடைய வார்த்தைகளை முதலாவது கேட்டது யார்?”

“மகதலேனா மரியாள், ஒரு பெண் ஆண்டவரே”

“என்னுடைய எல்லாக் கேள்விகளுக்குமே பெண்கள் என்று பதிலளித்த நீ பெண்களை ஊழியத்தில் பயன்படுத்த அஞ்சுவது ஏன்? நான் இவ்வுலகில் இருந்தபோது என்னோடிருந்து எனக்கு ஊழியம் செய்த பெண்கள் என்னுடைய சரீரமாகிய சபைக்கு ஊழியம் செய்தால் அதில் தவறென்ன?” என்று ஆண்டவர் கேட்டபோது என்னால் பதில் கூற முடியவில்லை.

சபையில் பெண்களை ஊழியத்தில் பயன்படுத்துவது தேவசித்தமே என்று தெளிவாக அறிந்துகொண்ட நான் அடுத்த வாரமே பெண்கள் மிஷனெரி இயக்கத்தைக் கூட்டினேன். ஏறத்தாழ இருபது பெண் மூப்பர்கள் வந்து நான் சொல்வதைக் கவனமாய்க் கேட்டனர். என்னுடைய உடல் நலமின்மையையும், அதனால் தேவன் எனக்கும், சோய் அம்மையாருக்கும் கொடுத்த வெளிப்படுத்தலையும் கூறியபோது, மூப்பர்கள் பேசியதைப்போல் தத்துவம் பேசாமல் என் மீது அனுதாபப்பட்டனர். மேலும் என்னுடைய ஆலோசனையின்படி நடக்க ஒருமனதாக ஒப்புக்கொண்டனர். சீயோல் நகரம் இருபது பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பகுதியிலும் வந்திருந்த பெண் மூப்பர்களைக்கொண்டு அவர்களுடைய வீடுகளிலேயே ஜெபக்குழுக்கள் தொடங்கப்பட்டன. நான் சுகவீனமாய் இருந்ததால் திருமதி ஜெசில் சோய்

அம்மையார் இக்குழுக்களைக் கண்காணிக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டார்கள்.

பவுல் பெண்கள் தீர்க்கதரிசனம் கூறும்போது அவர்கள் ஆண்களின் அதிகாரத்திற்குக் கீழ்ப்பட்டவர்கள் என்பதைக் காட்ட முக்காடிட்டுக் கொள்ளும்படி கூறுவதைப்போல நானும் திருமதி சோய் அம்மையாரிடமும் மற்ற பெண் மூப்பர்களிடமும் அவர்கள் என்னுடைய அதிகாரத்தின்படியே பிரசங்கிக்கிறார்கள், தங்கள் சொந்த அதிகாரத்தின்படியல்ல என்று சபையார் அறிந்துகொள்ளும்படி தலையில் முக்காடிட்டுக் கொள்ளும்படி கேட்டுக் கொண்டேன்.

அன்றிரவு என்னுடைய வீட்டிற்குத் திரும்பியபோது என்னுடைய சரீரத்தில் பெலவீனமாயிருந்தாலும் என் உள்ளத்தில் தேவன் என்னுடைய சபையில் மகத்தான காரியங்களைச் செய்கிறார் என்ற பெரும் மகிழ்ச்சி உண்டாயிருந்தது. என் கவலைகளெல்லாம் ஒருவழியாகத் தீர்வதை உணர்ந்தேன்.

உண்மையில் தேவன் மகத்தான காரியங்களைச் செய்தார். ஆனாலும் பிரச்சனைகள் முற்றுமாய்த் தீர்ந்து விடவில்லை. பிசாசு தாக்குதல்களைத் தொடுப்பான் என்பது எனக்குத் தெரியாதிருந்தது.

அத்தியாயம் 4

சாத்தானின் தாக்குதல் ஏழு தடைகள்!

பெண் மூப்பர்களுடன் பேசிய பின்பு அடுத்த ஞாயிற்றுக்கிழமையன்று சபையில் தேவனுடைய திட்டத்தை விவரித்துக்கூறினேன். வீட்டு ஜெபக்குழுக்கள் தொடங்குவதுபற்றி வேத வசனத்தின் ஆதாரத்தோடு கர்த்தர் பேசியதைத் தெரிவாக விளக்கினேன். ஜெபக்குழுக்களைப் பொறுப்பேற்று நடத்த பெண்களுக்கு அதிகாரம் கொடுப்பது வேதத்தின்படி சரிதான் என்பதை விவரித்துக் காட்டினேன். இது என்னுடைய திட்டமல்ல தேவனுடைய திட்டம். எனவே நீங்கள் அனைவரும் இதில் பங்கெடுப்பது அவசியம் என வலியுறுத்தினேன்.

சபையானது இருபது வட்டங்களாகப் பிரிக்கப்பட்டு நீங்கள் ஒவ்வொருவரும் ஒரு ஜெபக்குழுவில் கலந்து கொள்ளவேண்டும் என்று கூறி எந்த வீட்டில் எந்த நாளில் கூட்டம் நடைபெறும் என்ற விவரங்கள் அடங்கிய தாளை ஒவ்வொருவருக்கும் கொடுத்தேன். சபையாரில் பெரும்பாலோர் என்னோடு ஒத்துழைப்பார்கள் என்று எண்ணியிருந்தேன். ஆனால் அது தவறு என்பது பிற்பாடுதான் புரிந்தது. அதிகமான எதிர்ப்புகள் உண்டாயின. ஞாயிறு ஆராதனை தவிர கூடுதலாக ஒரு கூட்டத்தில் கலந்துகொள்ளத் தங்களுக்கு நேரமில்லை எனச் சிலர் வாதிட்டனர். பெண்கள் தலைமையேற்று நடத்தும் கூட்டங்களில் நாங்கள் உட்கார்ந்து பிரசங்கம் கேட்பதா என்று வேறு சிலர் சண்டையிட்டனர். ஆனால் இவ்வித எதிர்ப்பெல்லாம் நான் எதிர்பார்த்ததுதான். ஆனால் எதிர்பாராதவிதமாக பல பெண்களே எதிர்ப்புத் தெரிவித்தனர். பெண்களைவிட ஆண்களே அதிகாரம் படைத்தவர்கள் என்று பல ஆண்டுகளாகப் போதிக்கப்பட்டிருந்ததால் ஆண்களே கூட்டத்தை நடத்த வேண்டுமெனப் பல பெண்கள் கூறினர்.

முதல் வாரத்தில் எரிநரகமே என்னுடைய சபைக்குள் வந்துவிட்டதைப்போன்ற அத்தனை எதிர்ப்புகளை உண்டாயின. சபையின் 2400 அங்கத்தினர்களில் 400 முதல் 600 பேர் மட்டுமே அருகிலிருந்த ஜெபக் குழுக்களில் கலந்து கொண்டனர். ஒவ்வொரு குழுவிலும் ஏறத்தாழ இருபது முதல் முப்பது உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். கூட்டத்தில் என்ன செய்யவேண்டும்? எப்படிச் செய்ய வேண்டும் என்பது ஒருவருக்கும் தெரியவில்லை. பொறுப்பேற்று நடத்தும் பெண்கள் தாங்களே செய்தியை ஆயத்தம் செய்துகொள்ள வேண்டியிருந்தது. ஏனெனில் என்ன பிரசங்கம்

செய்யவேண்டுமென்று நான் எதுவும் கற்றுக்கொடுக்கவில்லை. ஏனெனில் என்னிடம் கற்றுக்கொடுக்கும்படி எதுவும் இல்லை. ஏற்கெனவே கிறிஸ்தவர்களாயிருப்பவர்கள் பின்வாங்கிப் போகாமல் பார்த்துக்கொள்வதோடு புதிதாக பக்கத்திலுள்ளவர்களைக் கிறிஸ்துவுக்குள் கொண்டு வாருங்கள் என்று மட்டும் கூறியிருந்தேன்.

ஆண்களிடமிருந்துதான் கடும் எதிர்ப்பு உண்டாயிற்று. பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெறுவதற்காகவோ அல்லது வியாதியிலிருந்து சுகம் பெறுவதற்காகவோ பெண்கள் தங்கள் மீது கைகளை வைப்பதை அவர்கள் எதிர்த்தனர். கைகளை வைத்து ஜெபித்ததற்காக ஒரு பெண் தன் கணவனால் அடிக்கப்பட்டாள். மேலும் கூட்டங்கள் கிரமமாக நடத்தப்படவில்லை என்றும் புகார் கூறப்பட்டது.

அடுத்த ஞாயிற்றுக்கிழமை "பெண் ஊழியர்கள் தங்கள் சுய அதிகாரத்தின்படியல்ல, நான் கொடுத்த அதிகாரத்தின்படியே ஜெபக்குழுக்களில் பேசுகிறார்கள்" என்று வலியுறுத்திப் பேசிய பின்புதான் சிலரது கோபம் தணிந்தது. பின்பு உண்மையாக இரட்சிக்கப்பட்டிருந்த அனைவரும் இத்திட்டத்தை ஏற்றுக்கொண்டனர். சில அரைகுறை கிறிஸ்தவர்கள் மட்டுமே இத்திட்டத்தை ஏற்றுக்கொள்ள மறுத்தனர். கூட்டத்திற்கு வாராதபடி மற்றவர்களைத் தடுப்பதன் மூலம் இத்திட்டத்தை தோல்வியடையச் செய்ய முயன்றனர். நான் சபையின் மீது எனக்கில்லாத அதிகாரத்தை பயன்படுத்த முயல்வதாக எண்ணினர்.

இரண்டாவது வாரத்தில் கூட்டத்திற்கு வருவோரின் எண்ணிக்கை அதிகரித்தது. நான் எவ்வித ஆலோசனையோ அல்லது பிரசங்கக் குறிப்புகளையோ கொடுக்காவிட்டாலும் இக்கூட்டங்கள் பயனுள்ளவைகள் என்று ஜனங்கள் கண்டுகொள்ளத் தொடங்கினர். ஆனால் சரியான ஆலோசனைகள் இல்லாததினால் கூட்டத்தை நடத்தும் பெண் மூப்பர்கள் சிரமம் அடைந்தனர். அவர்கள் செய்த சில காரியங்கள் நான் எதிர் பாராததாயிருந்தது.

முதலாவதாக பெண்களுக்கு பிரசங்கம் செய்வதற்காக எவ்வித பயிற்சியையும் நான் கொடுக்கவில்லை. தெளிவான உபதேசங்களில் அவர்கள் வேரூன்ற நான் எவ்வித பயிற்சியும் கொடுக்கவில்லை. ஒரு பெண் திரித்துவத்தைப் பற்றிகூட சரியாக அறிந்துகொள்ளாமல் தனது ஜெபக் குழுவில் மூன்று தெய்வங்களை நாம் வணங்குகிறோம் என்று பிரசங்கித்தார். பிதா பெரிய தெய்வம் என்றும், இயேசு கிறிஸ்துவும் பரிசுத்த ஆவியானவரும்

பிசாசைவிட குறைந்த வல்லமை உள்ள தெய்வங்கள் எனவும் அப்பெண் மூப்பர் நினைத்தார். இன்னொருவர் அந்நிய பாஷையில் பேசும்வரை ஒரு மனிதன் இரட்சிக்கப்படவில்லை என்று உபதேசித்தார் (நாங்கள் முழுக்கு ஞானஸ்நானத்தை விசுவாசிப்பவர்கள்).

இப்படியாக பெண் மூப்பர்கள் தாங்கள் நினைத்ததைச் செய்து கொண்டிருந்தனர். முழு சபையும் ஒரே குழப்பத்திலிருந்தது. நான் தேவனிடம் ஏற்கெனவே சொல்லியபடி என்னுடைய சபை அழியப் போகிறது என்று நினைத்து, "ஆண்டவரே, நான் நினைத்தபடியே நடந்து விட்டது" என்று புலம்பினேன்.

ஆனாலும் பரிசுத்த ஆவியானவர் மெல்லிய சத்தத்துடன் என்னோடு பேசினார். "ஆம்; குழப்பங்கள் இருக்கத்தான் செய்யும். ஒழுங்கின்மை நிலவத்தான் செய்யும். ஆனால் இந்த முழு உலகமும் குழப்பத்திலிருந்தும், ஒழுங்கின்மையிலிருந்தும் உண்டாக்கப்பட்டதுதான்; எல்லா நல்ல காரியங்களும் குழப்பத்திலிருந்துதான் உண்டாயிருக்கின்றன. தொடர்ந்து உறுதியாகப் பிடித்துக்கொள்" என்று அவர் பேசினார்.

சில பெண் மூப்பர்கள் மிக அருமையாக ஜெபக்குழுக்களை நடத்தினார்கள். பக்கத்து வீடுகளில் குடியிருப்போரைச் சந்தித்து அவர்களுடைய தேவைகளை அறிந்து அவர்களை ஜெபக்கூட்டங்களுக்கு அழைத்துக் கொண்டு வந்து கிறிஸ்துவுக்குள் கொண்டுவந்தனர். நேர்த்தியான ஆராதனையாக ஜெபக்குழுக்களை நடத்தினார்கள். வெற்றிகரமாக ஜெபக்குழுக்களை நடத்தினார்கள். வெற்றிகரமாக ஜெபக்குழுக்களை நடத்திய பெண்களை நான் என்னுடைய அலுவலக அறைக்கு அழைத்து அதன் இரகசியமென்ன என்பதை விசாரித்தேன்; அவர்கள் ஏதோ ஒருவிதத்தில் பயிற்சி பெற்றிருந்ததே அவர்களது வெற்றிக்கும் காரணமாயிருந்தது.

ஒரு பெண் என்னிடம் "பாஸ்டர், சரியான பயிற்சி அளிக்காமல் எல்லாப் பெண்களையும் பிரசங்கிக்க அனுமதிப்பது நல்லதல்ல. நீங்கள் அவர்களுக்குச் சரியான பயிற்சியளிக்க வேண்டும். நீங்கள் உங்களது பொறுப்புகளை எங்களிடம் கொடுத்திருப்பதைப்போலவே உங்களது பிரசங்கக் குறிப்புகளையும் பகிர்ந்து கொடுக்க வேண்டும். நாங்கள் சொந்தமாகப் பிரசங்கம் பண்ண அனுமதிக்கக்கூடாது" என்றாள்.

அவள் சொன்னது எனக்குச் சரியானதாகக் காணப்பட்டதால் உடனடியாக என்னுடைய பிரசங்கக் குறிப்புகளை எழுதி எல்லா ஜெபக்குழுத்

தலைவிகளுக்கும் கொடுத்தேன். அதன்பின் ஒவ்வொரு புதன்கிழமையன்றும் ஜெபக்குழுத் தலைவிகளைக் கூடச் செய்து அவர்களுக்குப் பிரசங்கக் குறிப்புகளைக் கொடுத்து எதைப் பிரசங்கிக்க வேண்டும் என்று கூறுவேன். ஆராதனை ஒழுங்கு முறைகளையும்கூட ஏற்படுத்திக் கொடுத்தேன். ஆரம்ப ஜெபம், பாடல்கள், பின்பு துதித்தல், அதன் பின்பு என்னுடைய பிர்சங்கக் குறிப்புகளின் அடிப்படையில் செய்தி, காணிக்கை, சாட்சி கூறுதல், சுகத்திற்காகவும், பரிசுத்த ஆவியின் அபிஷேகத்திற்காகவும் ஜெபித்தல், இறுதி ஜெபம். இந்த வரிசையில் ஜெபக்கூட்டம் அமைய வேண்டும் என்று ஒழுங்குபடுத்தினேன்.

ஒரு மாதத்திற்குள் ஜெபக் கூட்டங்கள் ஒரு ஒழுங்கான முறையில் நடைபெறத் தொடங்கின. எல்லாப் பிரச்சனைகளும் தீர்ந்துவிட்டதென நினைத்தேன். ஆனாலும் ஒன்றன்பின் ஒன்றாக ஆறு பிரச்சனைகள் தோன்றின. யுத்தமில்லாமல் நாங்கள் வெற்றி பெறுவதைப் பிசாசு விரும்பவில்லை. எனவே அவன் எல்லாவித தடைகளையும் உருவாக்க முயற்சித்தான்.

ஒழுங்கின்மை காரணமாக இரண்டாவது குழப்பம் உருவாயிற்று. ஜெபக்குழுக்கள் வளர்ந்தன. தலைமைப் பொறுப்பிலிருந்தவர்கள் நான் சொல்லிக் கொடுத்தபடியே எல்லாவற்றையும் செய்தனர். ஆனால் கூட்டத்தை எப்போது முடிப்பது என்பது அவர்களுக்குத் தெரியவில்லை. ஒரு விருந்தைப்போன்று கூட்டங்கள் நடத்தப்பட்டன. ஜெபக்குழுவின் உறுப்பினர்கள் விருந்தளிப்பவர்களாக மாறினர். அதினால் ஒவ்வொரு வாரமும் கூட்டங்கள் வெவ்வேறு உறுப்பினர்கள் வீடுகளில் நடத்தப்பட்டன. ஒரு வீட்டில் இட்லியும், காரமான சட்னியும் கொடுக்கப்படும். அடுத்த வாரம் இன்னொரு வீட்டில் இட்லியும், மீனும் கொடுக்கப்படும். மூன்றாவதாக வேறொரு வீட்டில் இட்லியும், கறிவறுவலும் கொடுக்கப்படும். இப்படியாக ஒருவரோடொருவர் போட்டி போட்டுக்கொண்டு தாங்களே சிறந்த விருந்து கொடுத்தாகக் காட்டிக்கொள்ள முயன்ற நிலை உருவாயிற்று. சில நாட்களுக்குப் பின்பு ஜெபக்கூட்டம் வைத்தால் அதிக பணச்செலவுண்டாகும் என்ற எண்ணத்தால் அநேகர் தங்கள் வீடுகளில் ஜெபக்கூட்டம் வைக்கத் தயங்க ஆரம்பித்தனர்.

விருந்து படைக்கும் கூட்டங்களாக ஜெபக்கூட்டங்கள் மாறியதால் இக்கூட்டங்கள் முடிய இரவு வெகு நேரமாயிற்று. அதனால் பல பெண்கள் தங்கள் கணவர், பிள்ளைகளுக்குச் செய்யவேண்டிய கடமைகளை

ஒழுங்காகச் செய்யத் தவறினார்கள். இதனால் பகலெல்லாம் வேலை செய்து களைப்போடு இரவில் வீடு திரும்பும் கணவர்கள் மனைவிகள் மீது கோபம் கொள்ளத் தொடங்கினர். மேலும் சாப்பாட்டிலேயே கவனம் செலுத்தப் பட்டதால் ஊழியம் செய்வதிலோ, செய்தியைக் கவனிப்பதிலோ கவனம் செலுத்த அநேகர் தவறினர். எனவே நான் ஒரு மணி நேரத்திற்குள் ஜெபக்கூட்டம் முடிவடைந்துவிட வேண்டுமென்ற புதிய சட்டம் ஒன்றை உருவாக்க வேண்டியதாயிற்று. மேலும் தேநீர், பிஸ்கட் தவிர வேறு உணவு வகைகள் எதுவும் கொடுக்கப்படக் கூடாதென்றும் உறுதியான ஆலோசனை கூறினேன்.

சிறிது முன்னேற்றம் காணப்பட்டாலும் கூட்டம் சரியான நேரத்தில் முடிக்கப்பட முடியாமலிருந்தது. காரணம் கூட்டம் ஆரம்பிப்பதற்கு முன்பாகவே தேநீர் வழங்கப்பட்டதால் ஒவ்வொருவராக கூட்டத்திற்கு வரும்போது அவர்களுக்கு தேநீர் கொடுத்து முடிக்கும்வரை கூட்டத்தின் பொறுப்பாளர் கூட்டத்தை ஆரம்பிக்காது தாமதிப்பார். இதனால் கூட்டம் முடிவதற்கு அதிக நேரமாயிற்று. எனவே இறுதியாக ஆறு மாதங்களுக்குப் பின் கூட்டத்தின் ஆரம்பத்தில் தேநீர் வழங்குவதற்குப் பதிலாக கூட்டத்தின் இறுதியில் தேநீர் வழங்கும்படி கேட்டுக்கொண்டேன்.

ஆனாலும் முன்பு வந்ததைப்போன்ற பெரிய பிரச்சனைகள் வராவிட்டாலும் சிறு சிறு பிரச்சனைகள் இருந்து கொண்டேயிருந்தன. எல்லா ஜெபக்குழுக்களையும் இப்பிரச்சனைகள் பாதிக்காவிட்டாலும் நடவடிக்கை எடுக்க வேண்டிய முக்கிய பிரச்சனைகளாக அவைகள் எனக்குக் காணப்பட்டன.

மூன்றாவது பிரச்சனை வெளியிலிருந்து பிரசங்கியார்களைக் கொண்டு வருவதால் உண்டாயிற்று. ஜெபக்குழுத் தலைவர்கள் அவ்வப்போது வெளியிலிருந்து பிரசங்கியார்களை வரவழைத்துக் கூட்டத்தில் பேசும்படி செய்யத் தொடங்கினர். பெரும்பாலான பிரசங்கியார்கள் தங்கள் ஊழியங்களை விளம்பரம் செய்வதற்கும், காணிக்கை வாங்குவதற்குமே சுற்றித்திரிபவர்களாயிருந்தார்கள். எனவே ஜெபக்குழுத் தலைவர்கள் எனக்கோ அல்லது சபையின் மூப்பர்கள் கமிட்டிக்கோ தெரிவிக்காமல் ஜெபக்குழுக்களில் காணிக்கை எடுத்து வெளிப்பிரசங்கியார்களுக்குக் கொடுக்கத் தொடங்கினர். மேலும், எனக்குத் தெரியாமலேயே பிரசங்கியார்கள் அழைக்கப்பட்டதால், சிலர் தவறான உபதேசங்களைப் பிரசங்கித்து, வேதனை தரும் விதைகளை விதைத்து விட்டுச் சென்றனர்.

எனவே ஜெபக் குழுத்தலைவர்களை அழைத்து என்னிடம் அனுமதி பெறாமல் வெளியிலிருந்து எந்தப் பிரசங்கியாரையும் அழைக்கக் கூடா தென்றும், சபையின் ஊழியத்திற்காக அல்லாமல் வேறெந்தக் காரணத்திற் காகவும் காணிக்கை எடுக்கக் கூடாதென்றும் நான் கொடுக்கும் பிரசங்கக் குறிப்புகளைக் கொண்டே ஜெபக்குழுத் தலைவர்களே பிரசங்கிக்க வேண்டும் என்று கண்டிப்பாகக் கூறினேன்.

வெளியிலிருந்து பிரசங்கியார்களைக் கொண்டு வருவது ஓரளவு கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டிருந்தாலும் அவ்வப்போது இந்தப் பிரச்சனை வந்து கொண்டுதான் இருந்தது. ஆனால் அவைகள் என்னுடைய கவனத்திற்கு வராமல் போவதில்லை.

நான்காவது பிரச்சனை பணம் சம்பந்தமானது. சில ஜெபக்குழுக்களில் உறுப்பினர்கள் ஒருவருக்கொருவர் கடன் கொடுக்கவும், கடன் வாங்கவும் தொடங்கினார். சிலர் மற்றவர்களது தொழில்களில் தங்கள் பணத்தை முதலீடு செய்து தொழில் நஷ்டமடைந்ததால் முதலீடு செய்தபணம் முழுவதையும் இழந்தனர். இதையும் தடுத்து நிறுத்த வேண்டியிருந்ததால் நான் ஜெபக்குழுக்களில் பணம் கொடுக்கல், வாங்கல் இருக்கக்கூடாதெனத் தடை செய்தேன்.

ஜெபக்கூட்டத்திற்கு வருவோரின் எண்ணிக்கை பெருகியதால் ஐந்தாவது பிரச்சனை உருவாயிற்று. சில ஜெபக்குழுக்களில் முப்பது முதல் ஐம்பது குடும்பங்கள் வரை இருந்தன. இட நெருக்கடி காரணமாக வரவேற்பறை, படுக்கை அறை, முற்றம் ஆகிய இடங்களிலும் ஆட்கள் உட்கார வேண்டி யிருந்ததால், ஒரே நபர் எல்லோரையும் கவனிக்க முடியாமல் இருந்தது. எனவே பெரிய ஜெபக்குழுக்களை சிறிய குழுக்களாகப் பிரிக்க வேண்டிய கட்டாயம் உண்டாயிற்று. எனவே உறுதி ஜெபக் குழுத் தலைவர்களை உருவாக்கி ஜெபக் குழுக்களைப் பிரித்து ஒரு குழுவில் பதினைந்து குடும்பங்களுக்கு அதிகமாக இல்லாமல் ஒழுங்கு செய்தோம். சில குடும்பங்கள் ஜெபக்குழுவின் தலைவரோடு நெருங்கிப்பழகியதின் காரணமாக வேறு ஜெபக்குழுக்களுக்குப் போகத் தயங்கினார்கள். நண்பர்களையும், உறவினர்களையும் அழைத்துக் கொண்டு வந்து அவர்களை கிறிஸ்துவுக்குள் கொண்டு வருவதே ஜெபக்குழுக்களின் உன்னதமான நோக்கம் என்பதை அவர்களுக்கு விளக்கி ஒரு ஜெபக்குழுவில் பதினைந்து குடும்பங்களுக்கு அதிகமானவர்கள் வந்தால் அந்த ஜெபக்குழு இரண்டாகப் பிரிக்கப்பட வேண்டுமென்ற விதியை ஏற்படுத்தினேன்.

அது எளிதானதாயிருக்கவில்லை. ஆனால் படிப்படியாக விசுவாசிகள் ஒத்துழைக்கத் தொடங்கினர். சிலர் தாங்கள் ஏற்கெனவே கலந்துகொண்ட ஜெபக்குழுவுக்கும் செல்வார்கள்; பிரிக்கப்பட்ட புதிய ஜெபக்குழுவுக்கும் செல்வார்கள். பழைய ஜெபக்குழுவின் தலைவர்மீது கொண்டிருக்கும் அன்பு காரணமாக அப்படிச் செய்தார்கள். முழு ஒத்துழைப்பு கிடைக்கச் சில மாதங்களாயின.

ஆறாவது பிரச்சனை மிகவும் சிக்கலானது. எல்லா ஜெபக்குழுக்களிலும் சபையின் தேவைகளுக்காக காணிக்கை எடுக்கப்பட்டது. அடுத்த ஞாயிற்றுக்கிழமை அதைச் சபையில் ஒப்படைக்க வேண்டும். சில ஜெபக்குழுத் தலைவர்கள் இடைப்பட்ட நாட்களில் காணிக்கை பணத்திலிருந்து தங்கள் தேவைகளுக்காகக் கடனாக பணம் எடுத்துக்கொள்ளத் தொடங்கினார்கள். ஆனால் அந்தக் கடன் பணம் முழுமையாகச் சபையின் பொருளாளரிடம் வந்து சேர்வதில்லை.

எனவே இந்தக் காரியத்தில் ஒரு ஒழுங்கை உருவாக்கும்படியாக ஒவ்வொரு ஜெபக்குழுவிலும் ஒரு கணக்காளரையும், ஒரு பொருளாளரையும் நியமித்தேன். காணிக்கைப் பணத்தை கணக்காளர் எண்ணி கணக்கெழுதிக் கொண்டு பொருளாளரிடம் கொடுப்பார். பொருளாளர் அதைப் பத்திரமாக வைத்திருந்து ஞாயிற்றுக்கிழமை சபைப் பொருளாளரிடம் ஒப்படைக்க வேண்டும். இப்படியாக பண விஷயத்தில் தவறுதல்கள் உண்டாகாமல் தடுக்க வழி செய்யப்பட்டது.

ஜெபக்குழுக்களில் என்ன நடைபெறுகிறதென்பதை நான் கண் காணிக்கும்படி சில ஒழுங்கு முறைகளை ஏற்படுத்த வேண்டிய அவசியத்தை நான் உணர்ந்ததால் ஒரு தகவல் அறிக்கை படிவத்தைத் தயார் செய்தேன். ஒவ்வொரு ஜெபக்குழுவின் தலைவரும் கூட்டம் முடிந்தபின்பு தகவல் அறிக்கை படிவத்தில் செய்தி அளித்தவரின் பெயர், கலந்துகொண்ட விசுவாசிகளின் எண்ணிக்கை, வராதவர்களின் விவரம், காணிக்கை எவ்வளவு போன்ற விவரங்களை எழுதி எனக்குத் தரவேண்டும். அதன்மூலம் வீட்டு ஜெபக்குழுக்கள் இயங்கும் விதம் குறித்து என்னால் அறிந்துகொள்ள முடிந்தது.

உண்மையில் ஜெபக்குழுக்களை ஒழுங்குப்படுத்துவது தவிர்க்க முடியாததாயிற்று. ஜெபக்குழுக்கள் வேகமாக வளர்ந்த காரணத்தால் திருமதி சோய் அவர்கள் முழு நிர்வாகத்தையும் கவனிக்க முடியாதிருந்தது. நான் சுகவீனமாயிருந்த காரணத்தால் அவர்களே, எல்லா வேலைகளையும்

செய்து கொண்டிருந்தார்கள். ஜெபக்குழுக்களின் எண்ணிக்கை 150 ஆக வளர்ந்தது. எனவே சில உதவி ஊழியர்களை நியமிக்க வேண்டியது அவசியம் என நாங்கள் தீர்மானித்தோம். எனவே மூன்று உதவி ஊழியர்களை ஏற்படுத்தி ஒவ்வொரு ஊழியரையும் ஐம்பது ஜெபக் குழுக்களைக் கண்காணிக்கும்படி ஏற்படுத்தினோம்.

என்னுடைய சரீரத்தில் உண்டான கஷ்டங்கள், சபைப் பிரச்சனைகள் மத்தியிலும் திருமணத்தைக் குறித்து நினைக்க எனக்கு நேரமிருந்தது ஆச்சரியந்தான். திருமதி சோய் அம்மையாருக்கு (Sung Hae Kim) சங் ஹே கிம் என்னும் அழகான பெண் இருந்தாள். உலகத்திலேயே மிகப்பெரிய பெண்களுக்கான கிறிஸ்தவப் பல்கலைக்கழகமாகிய எவ்ஹா பெண்கள் பல்கலைக்கழகத்தில் படித்துப் பட்டம் பெற்றதுடன் இசையிலும் சிறந்து பயிற்சி பெற்ற அப்பெண்மீது என் கவனம் திரும்பியது. இருவரும் திருமணம் செய்துகொள்ள விரும்பினோம். 1965 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் நாள் எங்கள் திருமணம் நடைபெற்றது.

எங்கள் திருமண வாழ்க்கை மகிழ்ச்சியாயிருந்தாலும் என்னுடைய திருமண நாள் அனுபவம் மகிழ்ச்சியானதல்ல என்பதை நான் சொல்லியே ஆகவேண்டும். நான் வியாதியாயிருந்ததால் திருமண நிகழ்ச்சியில் எந்த நேரத்தில் மயங்கி விழுவேனோ என்ற பயத்துடனேயே இருந்தேன். என்னுடைய சரீரமெல்லாம் நடுங்கிக் கொண்டிருந்தது. விசேஷமான பெலத்தைத் தரும்படியாக தேவனிடம் வேண்டிக்கொண்டேயிருந்தேன்.

திருமண ஆராதனைக்கு 3000 பேர்களுக்கு மேல் வந்திருந்தனர். ஒரு மிஷனெரியை திருமண ஆராதனை நடத்தும்படி கேட்டிருந்தோம். ஏராளமான மக்களைக் கண்ட உற்சாகத்தில் என்னையும், மணப் பெண்ணையும் நிற்க வைத்துக்கொண்டு ஒரு மணி நேரம் பிரசங்கம் பண்ணினார். மயங்கி விழாமலிருக்க நான் அரும்பாடுபட வேண்டியதாயிருந்தது. திருமண உறுதி மொழியைக் கூறிய ஞாபகமே எனக்கில்லை. எங்கள் தேனிலவின்போது என்னுடைய உடல் நலத்தைக் கவனிப்பதே என் மனைவிக்கு நாள் முழுவதும் வேலையாயிருந்தது.

ஒரு வழியாக எங்கள் சபையின் ஜெபக்குழுக்களில் உண்டான பெரும்பாலான பிரச்சனைகள் தீர்ந்தன. ஜெபக்குழுக்கள் வெற்றிகரமாக இயங்கத் தொடங்கின. விசுவாசிகள் பக்கத்து வீட்டுக்காரர்களைக் கூட்டத்திற்கு அழைத்து வந்தனர். வந்தவர்கள் இயேசுகிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொண்டனர். வளர்ந்த ஜெபக்குழுக்கள் பிரிக்கப்பட்டன. ஒவ்வொரு

வாரமும் சபையில் புதிய அங்கத்தினர்கள் சேர்க்கப்பட்டனர். ஜெபக்குழுக்கள் பெருகினபடியால் மேலும் முழுநேர ஊழியர்களை நியமித்து, மூப்பர்களையும், பெண் மூப்பர்களையும் ஏற்படுத்தினோம்.

ஆனாலும் என்னுடைய சரீர நிலையில் எனது சபையின் வளர்ச்சியைக் குறித்து என்னால் மகிழ்ச்சியடைய முடியவில்லை. அக்காலத்தில் அங்கத்தினர்களின் எண்ணிக்கையைக் குறித்த விவரப்பட்டியல் எங்களிடம் இல்லை. ஆனால் 1964 ஆம் ஆண்டு அங்கத்தினர்களைக் கணக்கிட்டபோது 2400 பேர் இருந்தது எனக்கு நினைவிலிருந்தது. இப்போது ஜெபக்குழுக்கள் மூலமாக சபை பல மடங்காகப் பெருகியிருந்தாலும் எண்ணிக்கை எனக்குச் சரியாகத் தெரியவில்லை. என் மனதில் எதுவும் தங்கியிருப்பதில்லை. என்னுடைய பிள்ளைகளின் பெயர்களே சில நேரங்களில் ஞாபகத்திற்கு வராத அளவிற்கு அவ்வளவாக என் உடல் நிலை பாதிக்கப்பட்டிருந்தது.

ஒவ்வொரு நிமிடமும் மரண வாசலில் இருப்பதைப்போலிருக்கும். உயிரைக் கையில் பிடித்துக்கொண்டே வாழ்ந்து கொண்டிருந்தேன். ஒவ்வொருநாளும், "ஆண்டவரே, இன்னும் ஒரே ஒரு பிரசங்கம் செய்து விடுகிறேன்; அதன் பின் சாகத்தயார்" என்று கூறினேன். அந்த நிலைமையிலும் தேவன் என்னை உபயோகித்தார். எங்களுடைய சபையின் வளர்ச்சி கொரியாவிலும் நான் சார்ந்திருந்த தேவ சங்க சபை (Assembly of God) ஸ்தாபனத்திலும் பரவியது. சீயோல் நகரத்திலிருந்த எல்லா தேவ சங்க சபைகளுக்கும் மேற்பார்வையாளராக நியமிக்கப்பட்டேன். பிரேஸில், சீயோல் நகரங்களில் நடைபெற்ற உலக பெந்தெகொஸ்தே மாநாட்டில் ஆலோசனைக் கமிட்டியில் அங்கத்தினராகப் பொறுப்பு வகித்தேன்.

மேலும் எங்களது சபை மிஷனெரிகளை அனுப்பும் பணியையும் செய்து கொண்டிருந்தபடியால், எங்களது மிஷனெரிகள் பணியாற்றிய எல்லா இடங்களிலும் வீட்டு ஜெபக்குழுக்களை உருவாக்க நான் உதவி செய்து கொண்டிருந்தேன். அதிக வேலை காரணமாக எதிர்பாராமல் திடீரென்று மயங்கி விழத் தொடங்கினேன். ஒருமுறை டோக்கியோ விமான நிலையத்திலும், இன்னொரு முறை அமெரிக்காவிலுள்ள ஒரு தேவ சங்க சபையிலும், ஸ்பிரிங் ஃபீல்டிலுள்ள ஸ்தாபனத்தின் தலைமை அலுவலகத்தில் ஒருமுறையும் மயங்கி விழுந்தேன். ஹோட்டல்களில் பலமுறை மயங்கி விழுந்திருக்கிறேன். என் நிலைமை மிகப் பரிதாபமாயிருந்தது.

ஆனால் நான் வியாதியஸ்தருக்காக ஜெபித்தபோது அநேகர் சுகமானார்கள். ஒவ்வொருமுறை யாராவது சுகமடையும்போது, "ஆண்டவரே, என்னையும் சுகமாக்கும்" என்று கதறுவேன்.

ஆனால் தேவன் பத்து ஆண்டுகள் ஆகும் என்று கூறியபடியே பத்து ஆண்டுகளாயிற்று. ஒவ்வொருநாளும் மிகுந்த வேதனை அனுபவித்தேன். நான் எதையும் பொறுப்பெடுத்து செய்ய முடியாத நிலையிலிருந்தேன். ஏனெனில் அந்த அளவிற்கு நான் வியாதியாயிருந்தேன். முன்பு என்னுடைய சபையில் எல்லாக் காரியத்தையும் நானே செய்ய வேண்டும்; புகழ் பெற்ற மனிதனாய் விளங்க வேண்டுமென்று விரும்பினேன். ஆனால் இப்போதோ அவைகள் எனக்கு முக்கியமல்ல. ஒவ்வொருநாளும் சரீரத்தின் ஒவ்வொரு அசைவிற்கும், ஒவ்வொரு மூச்சிற்கும்கூட தேவனையே சார்ந்திருக்க வேண்டிய நிலைமையில் இருந்தேன். ஆனாலும் தேவன் என் மீது கிருபையுள்ளவராயிருந்தார்.

என் வாழ்க்கையின் போராட்ட நாட்களில் தேவன் என்னை உடைத்து உருவாக்கினார் என்பதையும், ஒரு மனிதன் தலைவனாக வேண்டுமென்றால், அவன் உடைத்து நொறுக்கப்பட வேண்டும் என்பதையும், இப்போது அறிந்திருக்கிறேன். அவன் நொறுக்கப்படாவிட்டால் ஒரு மேய்ப்பன் தன் ஆடுகளை நடத்துவதைப்போல் தேவ ஜனங்களைத் தலைமை தாங்கி நடத்த முடியாது. ஏனெனில் அவன் பயந்து பயந்து நடக்கிறவனாயிருப்பான். அதிகாரத்தையும், அந்தஸ்தையும் இழந்து விடுவோமோ என்ற பயத்தால் அவன் பணத்தையும், அதிகாரத்தையும் குறித்தே நினைத்துக்கொண்டு இருப்பான். அவன் தன்னுடைய விசுவாசிகள் மீது நம்பிக்கை வைத்து தனது அதிகாரத்தை அவர்களுடன் பகிர்ந்துகொள்ள மாட்டான். அவர்கள் செய்யும் சிறு தவறுகூட தன்னை பாதிக்கும் என்று அஞ்சுவான். அவன் தேவனுக்கென்று ஏராளமான காரியங்களைச் செய்தாலும் தேவனுடைய வார்த்தைக்குச் செவி கொடுக்க அஞ்சுவதால் தேவன் அவனை உபயோகிக்க முடியாது.

தேவ மனிதர்களின் நொறுக்குதலுக்கு ஏற்றவிதமாகவே தேவன் அவர்களை உபயோகிக்கிறார். நான் முற்றுமாய் நொறுக்கப்படும் வரை தேவன் என்னை உபயோகிக்க முடியவில்லை. என்னுடைய சுயபெலத்தைச் சார்ந்திருக்க முடியாத நிலை வரும்வரை நான் உடைக்கப்பட வேண்டியதாயிற்று. எனவே, பத்தாண்டுப் பாடுகளுக்குப் பின் நான் தூளுக்குச் சமமானவனாக, உதவியற்றவனாக, ஒன்றுக்கும் உதவாதவனாக ஆகிவிட்டேன்.

அந்தப் பத்தாண்டுகளின் இறுதியில் எங்களது சபைக்கு ஒரு புதிய கட்டிடத்தைக் கட்ட வேண்டுமென்ற தரிசனம் எங்களுக்கு உண்டாயிற்று. சீயோல் பட்டணத்திற்கு அருகில் உள்ள யோய்டோ தீவில் புதிய கட்டிடங்களும், அரசாங்க அலுவலகங்களும், கட்டப்பட்டு வந்த பகுதியில்

நிலம் வாங்கி **1973** ஆம் ஆண்டு கட்டிடம் கட்டி முடிக்கப்பெற்றது. புதிய கட்டிடத்திற்குப்போன பிறகுதான் எங்களது சபையின் அங்கத்தினர்களைச் சரியாக கணக்கிட முடிந்தது. வீட்டு ஜெபக்குழுக்களில் ஈடுபாடு கொண்ட 18,000பேர் எங்கள் சபையில் இருந்தனர். ஆனால் சோடே மூன் என்னுமிடத்திலிருந்த எங்களது பழைய சபையிலிருந்து எல்லோரும் புதிய கட்டிடத்திற்கு வரவிரும்பவில்லை. எனவே எட்டாயிரம் அங்கத்தினர்கள் அங்கேயே தொடர்ந்து ஆராதிக்கும்படி உடன்பாடு செய்து கொண்டு தேவ சங்க சபையின் சார்பில் வேறொரு போதகர் நியமிக்கப்பட்டார். பத்தாயிரம் அங்கத்தினர்களுடன் பூரண சுவிசேஷ மத்திய சபையின் புதிய கட்டிடத்திற்கு வந்தோம். இன்னும் யோங் நாக் பிரஸ்பிடேரியன் சபையை விடச்சிறிய சபையாகவே இருந்தாலும் வீட்டு ஜெபக்குழுக்கள் மூலமாக நாங்கள் வேகமாக வளர்ந்து கொண்டிருந்தோம்.

இடமாற்றத்தின்போது தேவன் வாக்குப் பண்ணியிருந்த சுகமும் என்னை ஆட்கொண்டதால் நான் மிகவும் மகிழ்ச்சியடைந்தேன். எந்த நாளில் எந்த நேரத்தில் எனக்கு சுகம் கிடைத்ததென்று குறிப்பாகச் சொல்ல முடியா விட்டாலும் நான் எதிர்பார்த்துக் கொண்டிருந்த சுகம் எனக்குக் கிடைத்தது. என் இருதயம் முழுவதும் அற்புதமாக சுகமடைந்தது. சரீரத்தில் புதிய பெலன் கிடைத்தது. மரணம் எப்போது வருமோவென்று பயந்து கொண்டிருந்த உணர்வு என்னைவிட்டு நீங்கிப்போயிற்று.

அப்போதும்கூட நான் பூரண சுகமடைந்து விட்டேன் என்று கூற முடியாது. நான் அதிகக் களைப்படையும்போது என் மனம் பல திசைகளில் சென்று கொண்டிருந்தது. ஞாபக சக்தி குறைவாயிருந்தது. என்னுடைய நெருங்கிய உதவி ஊழியர்களின் பெயர்கள்கூட சில நேரங்களில் ஞாபகத்திற்கு வருவ தில்லை. ஆனாலும் என் சரீரத்தில் படிப்படியாக சுகம் வந்து கொண்டே யிருக்கிறது. நான் எல்லாவற்றிற்கும் இப்போது தேவனையே சார்ந் திருக்கிறேன். “சோ” என்னும் மனிதன் மரித்தவிட்டான் என்பதை தெளிவாக அறிந்தேன். இப்போது நான் பணம் பதவி, புகழ் எதையும் நாடி ஓடுவதில்லை. அவைகள் மீது எனக்கிருந்த விருப்பம் என்னைவிட்டு நீங்கிவிட்டது. என்னுடைய அனுபவத்திலிருந்து இவையெல்லாம் எந்த நிமிடமும் உடைந்து விடக்கூடிய நீர்க்குமிழிகளைப் போன்றவையே என்பதை அறிந்திருக்கிறேன்.

என்னுடைய சரீரத்தில் சுகம் கிடைத்தபோதும் பிசாசு எங்கள் சபையின் வளர்ச்சியைத் தடுக்கும்படியாக ஒரு பெரிய தாக்குதலைத் தொடுத்தான். இது ஏழாவது பிரச்சனை. ஆனாலும் இது சில வருடங்களுக்குள் நீங்கிவிட்டது.

யோய்டோ தீவிற்குச் சென்ற முதல் வருடத்தில் 3000 ஆத்துமாக்கள் சபையில் சேர்ந்தனர். தேவன் தங்களுக்குச் செய்த நன்மைகளை சுற்றியுள்ள ஜனங்களுக்கு அறிவித்து, அவர்களைக் கிறிஸ்துவுக்குள் நடத்தி, சபைக்கு அழைத்துக்கொண்டு வருமாறு நான் ஜெபக்குழு உறுப்பினர்களை உற்சாகப் படுத்தினேன். ஒவ்வொரு ஜெபக்குழுவும், ஒவ்வொரு வட்டத்திலுள்ள ஜெபக்குழுக்களும் ஒரு வருடத்தில் இத்தனை ஆத்துமாக்களை கிறிஸ்து வுக்குள் கொண்டு வரவேண்டுமென்ற குறியீட்டையும் நிர்ணயித்தேன். புதிய இடத்தை நிரப்பும்படியாக எத்தனை ஆத்துமாக்கள் வேண்டுமென்ற தரிசனத்தை உண்டாக்கிக் கொண்டேனோ, அத்தனை ஆத்துமாக்களைத் தர தேவன் உறுதியளித்தார். எனவே, ஒவ்வொரு வருடமும், ஒவ்வொரு மாதமும் வளர்ச்சியைக் கண்டேன். சில வருடங்களுக்குள் ஒவ்வொரு மாதமும் 3000 ஆத்துமாக்களை நாங்கள் கிறிஸ்துவுக்குள் கொண்டு வரத் தொடங்கினோம்.

சாத்தான் கொண்டு வந்த ஏழாவது குழப்பம் நான் எதிர்பாராத மிக மோசமான ஒன்றாகும். சபையின் பெண் மூப்பர்கள் இப்படி நடக்கும் என்று ஒரு நாளும் எதிர்பார்த்திருக்க மாட்டார்கள். பெண்கள் என்னோடு நூற்றுக்கு நூறு ஒத்துழைத்தனர். ஆனால் சில ஆண் ஜெபக்குழுத் தலைவர்கள் தங்கள் பொறுப்புகளையும், அதிகாரங்களையும் தங்களது கண்காணிப்பாளர்களுக்கு விட்டுக்கொடுக்க ஆரம்பித்தனர். நாங்கள் நியமித்திருந்த முழுநேர ஊழியர்களில் மூவர், விசுவாசிகள் என்னைவிடத் தங்களையே அதிகம் விரும்புவதாக நினைக்கத் தொடங்கினர். அவர்கள் மூவரும் தங்களது அதிகாரத்திற்குக் கீழிருந்த ஐம்பது ஜெபக்குழுக்களையும் பூரண சுவிசேஷ மத்திய சபையிலிருந்து பிரித்து தாங்களே புதிய சபைகளை உருவாக்கிக் கொண்டனர். ஒவ்வொருவரும் ஏறத்தாழ 2000 விசுவாசிகளைக் கண்காணித்து வந்ததால் அவர்களை அப்படியே தங்கள் பக்கமாகச் சேர்த்துக் கொண்டனர்.

நான் அந்த ஊழியர்களிடம், "நீங்கள் செய்தது சரியல்ல; என்னுடைய ஆடுகளை நீங்கள் திருடுகிறீர்கள்" என்று கூறினேன். ஆனால் அவர்கள் கேட்கவில்லை. தங்களுக்குக் கீழிருந்த ஜெபக் குழுக்களின் ஒவ்வொரு உறுப்பினர்களுக்கும் "இனி பூரண சுவிசஷே மத்திய சபைக்கு ஞாயிறு ஆராதனைக்குச் செல்ல வேண்டாம்" என்ற செய்தி அனுப்பினார்கள். தாங்களே தனி ஆராதனை நடத்தப் போவதாகவும் தெரிவித்தார்கள். ஆனால் அவர்களது செய்கையை நான் ஏற்றுக்கொள்ளவில்லை என்று நானும் ஜெபக்குழுக்களுக்கு செய்தி அனுப்பினேன்.

இந்தப் பிளவு சுமார் ஆறு மாதங்கள் நீடித்தது. தனி ஆராதனை ஆரம்பித்தபோது அந்த மூன்று ஊழியர்களும் ஒவ்வொரு சபையிலும் 2000 பேர் வருவார்கள் என்று எதிர்பார்த்ததற்குப் பதிலாக 300 முதல் 500 விசுவாசிகளே அவர்களது ஆராதனையில் கலந்து கொண்டனர். ஆனாலும் அவர்கள் தங்களைப் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட சபைகளாக எண்ணிக் கொண்டு தொடர்ந்து ஆராதனை நடத்தி வந்தனர்.

இதற்கிடையே அந்த குறிப்பிட்ட மூன்று வட்டங்களிலும் எங்களது சபைக்கு உண்மையாயிருந்த ஜெபக்குழுக்களைக் கண்காணிக்கும்படி வேறு புதிய ஊழியர்களை ஏற்படுத்தினோம். சிறிது சிறிதாக விலகிப்போன விசுவாசிகள் மீண்டும் வந்து சேரத் தொடங்கினார்கள். ஆறு மாதங்களின் இறுதியில் அந்த மூன்று ஊழியர்களோடு போன விசுவாசிகளில் பெரும்பாலோர் மீண்டும் எங்கள் சபைக்கு திரும்பி விட்டனர். அந்த ஊழியர்கள் மூவரும் ஊழியத்தையே மூடிவிட்டு ஊரைவிட்டு செல்ல வேண்டியதாயிற்று. அம்மூவரும் இப்போது கொரியாவின் எங்கோ ஒரு மூலையில் சிறிய சபைகளை நடத்திக்கொண்டிருக்கின்றனர். தங்கள் தரிசனத்தை இழந்துவிட்டபடியால் தேவன் அவர்களை ஆசீர்வதிக்க வில்லை. நான் எனது அதிகாரத்தை அவர்களுக்குக் கொடுத்திருந்தேன். அவர்களோ என்னை விடத் தங்களையே ஜனங்கள் விரும்புவதாகத் தவறாக எண்ணினர். ஆனால் ஜனங்கள், என்னையோ அவர்களையோ அல்ல, கர்த்தரையேப் பின்பற்றினார்கள்.

அதிலிருந்து ஊழியம் செய்யவேண்டுமென்று விரும்பும் விசுவாசி களுக்குச் சில ஏற்பாடுகளைச் செய்யத் தொடங்கினேன். ஜெபக்குழுவை நடத்தும் ஒரு விசுவாசி முழு நேர ஊழியராக மாறவிரும்பினால், அவர்களை, வேதாகமப் பயிற்சிப் பள்ளியில் படிப்பதற்கு பண உதவி செய்வேன். ஆனால் பயிற்சி பெற்றுத் திரும்பியபின் மூன்று ஆண்டுகள் எங்களது சபையில் முழு நேர ஊழியராகப் பணியாற்றவேண்டும் என்ற மூன்று உறுதிமொழியை வாங்கிக்கொள்வேன். மூன்று ஆண்டுகளுக்குப்பின் தனியாக சபை ஆரம்பிக்க வேண்டுமென்று விரும்பினால் வேறெங்காவது ஒரு இடத்தில் ஊழியம் ஆரம்பிக்கத் தேவையான எல்லா உதவிகளையும் செய்து ஒவ்வொரு மாதமும் சம்பளமும் தருவேன். ஆனால் அந்த சபை புதிய ஆத்துமாக்களை இரட்சிப்பிற்குள் கொண்டு வரும் சபையாக இருக்க வேண்டுமேயல்லாமல், என்னுடைய சபை விசுவாசிகளைத் திருடிக் கொண்டுபோகும் சபையாக இருக்கக்கூடாது. இந்த முறையில் இதுவரை எழுபத்தைந்து சபைகளும்,

மிஷனெரி தளங்களும் எங்களது சபை விசுவாசிகளைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. உலகில் பல பகுதிகளிலும் குறிப்பாக ஜப்பான், ஆஸ்திரேலியா, அமெரிக்கா, ஐரோப்பா போன்ற இடங்களில் எங்களது சபைகள் உள்ளன.

அத்தியாயம் 5

ஜெபக்குழுக்களின் பாதுகாப்பு!

இன்றைய சமுதாயத்தின் பெரும் பிரச்சனைகளில் ஒன்று மனிதர்களின் தனிமை உணர்வாகும். ஜனத்தொகை பெருகும்போது ஒவ்வொருவருக்கும் பெரிய சமுத்திரத்தில் ஒரு துளி தண்ணீரைப்போல சாதாரணமாக மாறிவிடுகிறார்கள். தனிமை உணர்வைப் போக்குவதைக் குறித்துப் பல புத்தகங்கள் எழுதப்பட்டுள்ளன. ஆனாலும் மனிதர்கள் ஒருவருக்கொருவர் அந்நியர்களாகவும், தனிமையுள்ளவர்களாகவும், வாழ்க்கையில் குறிக்கோள் எதுவும் இல்லாதவர்களாகவும் காணப்படுகின்றனர்.

இந்தப் பிரச்சனை சமுதாயத்தை மட்டுமல்ல, சபையையும் தாக்கியிருக்கிறது. குறிப்பாக பெரிய சபைகளை அதிகமாகப் பாதிக்கிறது. பெரிய சபைகள் ஒரு தனி மனிதனின் அபிஷேகம் பெற்ற வல்லமையான பிரசங்கத்தின் மீது கட்டப்பட்டதாகவே இருக்கின்றன. அந்த சபையின் விசுவாசிகள் தங்கள் போதகரிடமிருந்தே போதனைகளையும், ஆலோசனை களையும் எதிர்பார்க்கின்றனர். தேவன் என்னை ஒரு சாதாரண மனிதனாக நினைக்காமல் ஒரு முக்கியமானவனாக நினைக்கிறார் என்ற நிச்சயத்தை தேவனுடைய வார்த்தையிலிருந்து பெற வேண்டுமென ஜனங்கள் விரும்புகிறார்கள். ஆனாலும் பிரசங்க பீடத்திலிருந்து உற்சாக வார்த்தை களைக் கேட்கும்போது சமுதாய வாழ்க்கையில் எப்படி ஒரு பார்வையாளராக இருக்கிறார்களோ அதேபோலவே சபையிலும் வெறும் பார்வையாளராகவே இருக்கிறார்கள்.

பெரிய சபைகளில் குறைந்த எண்ணிக்கையுள்ள அங்கத்தினர்கள் வேதபாட வகுப்பு. ஜெபக்கூட்டங்கள் ஆகியவற்றில் பங்கெடுக்கின்றனர். ஆனாலும் வெகு சிலரே. அதில் பங்கேற்க முடிகிறது. அதிலும் வேதபாட வகுப்பில் தனிப்பட்ட முறையில் பங்கேற்க எல்லோருக்கும் சந்தர்ப்பம் கிடைப்பதில்லை. அதனால் புதிய கிறிஸ்தவர்களின் உற்சாகம் குறைந்து, பிற்காலத்தில் ஞாயிற்றுக் கிழமை கிறிஸ்தவர்களாக மாறி விடுகிறார்கள்.

ஆனால் வீட்டு ஜெபக்குழுக்கள் தங்கள் சபை உறுப்பினர்களுக்குப் பயனுள்ள வழிகளில் பங்கேற்க சந்தர்ப்பமளிக்கின்றன. ஒரு பெரிய சபையில்

எல்லோரும் மூப்பர்களாயிருக்க முடியாது. ஒவ்வொருநாள் பள்ளி நடத்தவோ அல்லது ஆலோசகர்களாகப் பணியாற்றவோ முடியாது. ஆனால் வீட்டு ஜெபக்குழுக்களில் எல்லோரும் பங்கெடுக்க வாய்ப்பு உண்டு.

பூரண சுவிசேஷ மத்திய சபைதான் உலகத்திலேயே மிகவும் சிறிய சபை; அதே நேரத்தில் உலகத்திலேயே மிகவும் பெரிய சபை என்று நான் குறிப்பிட விரும்புகிறேன். இந்தப் புத்தகத்தை எழுதும்போது எங்கள் சபையில் 1,50,000 விசுவாசிகளுக்கும் அதிகமானோர் உள்ளனர் (தற்பொழுது 6,50,000 பேர்). எனவே உலகத்தின் மிகப்பெரிய சபை இதுதான். அதே நேரத்தில் எங்களது சபை உறுப்பினர்கள் அனைவரும் ஒரு வீட்டு ஜெபக்குழுவின் அங்கத்தினரா யிருக்கின்றனர். பதினைந்து அல்லது அதற்குக் குறைவான குடும்பங்களே அடங்கிய ஒரு சிறிய வீட்டு சபையில் அவர்கள் உள்ளனர்.

ஒவ்வொரு வாரமும் தங்களுக்கு அருகேயுள்ள ஜெபக்குழுவில் இவர்கள் பங்கெடுத்து தேவனை ஆராதிக்கவும், சேர்ந்து ஜெபிக்கவும், தேவனுடைய வார்த்தையிலிருந்து கற்றுக்கொள்ளவும், பரிசுத்த ஆவியானவரின் வரங்களை பெற்று அனுபவிக்கவும், அற்புதங்களையும், சுகமாகுதலையும் காணவும், மற்ற கிறிஸ்தவர்களோடு ஐக்கியம் பாராட்டவும் சந்தர்ப்பத்தைப் பெறுகிறார்கள். ஜெபக் குழுக்களில் கூட்டத்தில் ஒரு மனிதராக வந்து போய்விட முடியாது. அவர்கள் மனிதர்களாக மதிக்கப்படுகிறார்கள். ஜெபக்குழுவின் தலைவர் ஒரு போதகராகவே மாறி தன்னுடைய ஜெபக்குழு உறுப்பினர்களின் வாழ்க்கையின் நல்ல காரியங்களையும், கெட்ட காரியங்களையும் தனிப்பட்ட முறையில் அறிந்து அவர்களது குடும்பத்தில் ஒருவராக மாறி விடுகிறார். பெரிய போதர்கள் இதைச் செய்ய முடியாது.

எங்களது சபையின் ஞாயிறு ஆராதனை ஒரு அமைப்பிற்குட்பட்டது. ஒவ்வொரு ஆராதனையிலும் ஏறத்தாழ 15,000 விசுவாசிகள் கூடி பாடல்கள் பாடி, தேவனைத் துதித்து, தேவனுடைய வார்த்தையிலிருந்து சில ஆலோசனைகள் பெற்று, தேவனுக்குக் காணிக்கை கொடுப்பதுடன் முடிந்து விடும். ஆனால் வீட்டு ஜெபக்குழுக்களில் ஒருவர் தேவனால் உபயோகப் படுத்தப்பட்டு, மற்றவர்களுக்கு ஊழியம் செய்ய வாய்ப்புகள் உண்டு. ஆவியானவர் தமது சித்தத்தின்படி வரங்களைப் பகிர்ந்தளிக்கிறார் (1 கொரி.12:11). எங்கள் ஜெபக்குழுக்களில் அதன் தலைவர்கள் நான் கொடுக்கும் பிரசங்கக் குறிப்புகளின் அடிப்படையில் பிரசங்கம் செய்தாலும், தீர்க்கதரிசனம் கூறவும், அந்நிய பாஷையில் பேசவும், அதை வியாக்கியானப் படுத்தவும், ஞானத்தைப் போதிக்கும் வசனம் அல்லது அறிவை உணர்த்தும்

வசனத்தை வெளிப்படுத்தவும் மற்றவர்களுக்கு வாய்ப்பு உண்டு. மேலும் வியாதியாயிருப்பவர்களுக்காக ஜெபிக்க எல்லா உறுப்பினர்களுக்கும் வாய்ப்பு உண்டு.

எல்லாவற்றிற்கும் மேலாக தன்னைச் சுற்றியுள்ள ஜனங்கள் மத்தியில் எழுப்புதலை உண்டாக்குவதில் எல்லா விசுவாசிகளுக்கும் பங்குண்டு. இதுபற்றி அடுத்த அதிகாரத்தில் விளக்கமாகக் கூறுகிறேன். தங்கள் வீடுகளுக்கு அருகே குடியிருப்போருக்கு தேவ அன்பைப் பகிர்ந்தளிப்பதை மிக்க பலனுள்ளதாக எங்கள் விசுவாசிகள் கண்டனர். வீட்டு ஜெபக் குழுக்களுக்கு வரும்படி அழைத்தபோது அவர்கள் மகிழ்ச்சியுடன் வந்து கலந்து கொண்டனர். இப்படியாக எங்கள் சபையின் விசுவாசிகள் ஒவ்வொருவரும் ஒரு மிஷனெரியாக மாறி தாங்கள் குடியிருக்கும் பகுதிகளில் எழுப்புதலை உண்டாக்குகின்றனர். அவர்கள் மிக உற்சாகமுள்ளவர்கள். ஒரு வருடத்தின் 365 நாட்களிலும் எழுப்புதலை அனுபவிக்கின்றனர். ஒவ்வொரு சபையிலும் இப்படிப்பட்ட எழுப்புதல் தேவை. எங்கள் சபை விசுவாசிகள் அதில் தீவிரமாக ஈடுபடுவதால் பெரிதும் எழுப்புதலை அனுபவிக்கின்றனர்.

எந்த எழுப்புதலும் தனி மனிதனால் வருவதாக இருக்கக்கூடாது. எங்களது சபையின் எழுப்புதலுக்கு நான் காரணமானவனல்ல. நான் சபையில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் எழுப்புதல் இருந்துகொண்டேயிருக்கிறது. வருடத்தில் ஆறு மாதங்கள் நான் கொரியாவிலிருப்பதில்லை. பரிசுத்த ஆவியானவர் வீட்டு ஜெபக்குழுக்கள் மூலம் எல்லா விசுவாசிகளையும் உபயோகிப்பதால் சபை எப்போதும் எழுப்புதலைச் சந்தித்துக் கொண்டேயிருக்கிறது. என் வாழ்க்கை முடிந்தாலும் எழுப்புதல் முடியப் போவதில்லை. பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலுக்குக் கீழ்ப்படிந்து ஜெபக்குழுக்கள் ஒழுங்காக நடத்தப்படும் வரையில் எழுப்புதல் இருந்து கொண்டேயிருக்கும்.

ஜெபக்குழுக்களில் உறுப்பினர்களுக்கு அதிக பாதுகாப்பு உண்டு. ஒவ்வொருவரும் ஜெபக்குழுவிலிருக்கும் மற்றவர்களின் குடும்பத்தில் ஒரு அங்கமாகவே மாறி விடுவதால் மற்றவர்களிடம் தன்னுடைய பிரச்சனைகளைக் கூறி ஆலோசனை பெறவும், ஜெபிக்கவும் அதிக வாய்ப்புகள் உண்டு. வெறும் ஆலோசனைகளுக்கு மேலாக ஒருவர் மீது ஒருவர் உண்மையான அக்கறையுடன் உதவி செய்கின்றனர். ஒரே ஒரு உதாரணம் எங்களது ஜெபக்குழு உறுப்பினர்கள் மற்றவர்கள் மீது எவ்வளவு அக்கறை காட்டுகிறார்கள் என்பது உங்களுக்கு விளங்கும்.

ஒரு குடும்பத்தில் கணவனுக்கு நீண்ட காலமாக வேலையில்லை. எனவே ஜெபக்குழுவின் மற்ற உறுப்பினர்கள் தங்கள் வீடுகளிலிருந்து அக்குடும்பத்தின் உணவுக்காகவும், உடைக்காகவும் உதவி செய்தனர். மேலும் அக்குடும்பத்தின் பிள்ளைகளில் ஒருவனைக் கல்லூரிக்கு அனுப்பத் தேவையான பணத்தைத் தாங்களே சேகரித்துக் கொடுத்தனர்.

மேலும் ஒரு பெண் வியாதிப்பட்டிருந்தால் ஜெபக்குழுவின் மற்ற உறுப்பினர்கள் அந்த வீட்டிற்குச் சென்று அப்பெண் செய்ய வேண்டிய வேலைகளைச் செய்து வீட்டைச் சுத்தப்படுத்திவிட்டு வருவார்கள். மருத்துவ மனைகளுக்குச் சென்று வியாதியஸ்தர்களைச் சந்தித்து ஜெபித்து அதன் மூலம் அற்புதமான விடுதலையை பெற்று தந்திருக்கின்றனர். ஜெபக்குழுவின் ஒரு அங்கத்தினரது குடும்பத்தில் யாராவது மரணமடைந்தால் ஜெபக் குழுவில் உள்ள எல்லா அங்கத்தினரது குடும்பத்திலும் மரணம் உண்டான தைப்போல் எல்லோரும் துக்கவீட்டிற்குச் சென்று செய்ய வேண்டிய காரியங்களைச் செய்வதுடன் உடனடி உதவிகளையும் செய்வார்கள்.

இது ஒரு இனிமையான சமுதாய வாழ்க்கை. ஒவ்வொருவரும் மற்றவர்களுக்கு உதவுகின்றனர். ஒருவர் புதிதாக ஜெபக்குழு அங்கத்தின ராகும்போது தன்னை அன்புடன் அரவணைக்க ஆட்கள் இருக்கிறார்கள் என்பதை அறிந்துகொள்கிறார். ஆனால் பெரிய சபைகளில் இப்படிப்பட்ட அன்பின் அரவணைப்பு கிடைப்பதில்லை.

எங்களுடைய ஜெபக்குழுவில் இருப்போர் பெரும்பாலும் பக்கத்து வீட்டுக்காரர்களாகவே இருப்பதால் பாதுகாப்பு வளர்கிறது. பெரும்பாலான ஜெபக்குழுக்களில் ஆண்கள் வேலைக்குச் சென்றிருக்கும் பகல் நேரத்தில் பெண்கள் கூடி ஜெபிக்கின்றனர். ஆண்கள் பெரும்பாலும் பகலில் வேலை செய்துவிட்டு இரவில் களைப்புடன் வீடு திரும்புவதால் வார நாட்களில் நாங்கள் ஆண்களுக்கான ஜெபக்கூட்டங்களை வைக்காமல் விடுமுறை நாளான சனிக்கிழமைகளில் வைக்கிறோம். அதே நேரத்தில் மற்ற ஆண்கள் கலந்து கொள்ளக்கூடாதென்று கட்டாயமும் இல்லை. விரும்பினால், நேரம் கிடைத்தால் அவர்கள் வார நாள் கூட்டத்திலும் கலந்துகொள்ளலாம்.

வீட்டு ஜெபக்குழுக்களில் வாலிபர்களுக்கென்றும், சிறுவர்களுக்கென்றும் தனி கூட்டங்களும் உண்டு. மேலும் அலுவலகங்களிலும், தொழிற் சாலைகளிலும் வேலை செய்வோருக்காக மதிய உணவு வேளையில் மையமான ஒரு இடத்தில் ஜெபக்கூட்டங்கள் நடத்தப்படுகின்றன. சேர்ந்து ஜெபிக்கவும், வேத வசனத்தைக் கேட்கவும் எல்லாவற்றிற்கும் மேலாக உடன்

வேலை செய்வோரைக் கிறிஸ்துவுக்குள் கொண்டு வரவும் இது நல்ல தருணமாகப் பயன்படுகிறது.

சீயோல் நகரத்தில் இன்னொரு பகுதியில் இருக்கும் ஒரு பெரிய சாக்லேட் தயாரிக்கும் தொழிற்சாலையில் வேலை செய்வோர் மதிய உணவு வேளையில் ஜெபக்கூட்டம் நடத்தத் தீர்மானித்தனர். தொழிற்சாலையின் நிர்வாகிகளிடம் அனுமதி கேட்டபோது அவர்கள் அனுமதிக்கத் தயங்கினர். ஆனாலும் தொழிலாளர்கள் விடாமல் ஜெபித்து நிர்வாகியை அணுகி ஒரு திட்டத்தைக் கூறினார்கள். வாரத்தில் ஒரு நாள் மட்டும் மதிய உணவு இடைவேளையோடு ஒரு மணி நேரம் அதிகமாக ஓய்வு கொடுங்கள். அன்று மாலையே நாங்கள் கூடுதலாக ஒரு மணிநேரம் வேலை செய்து விடுகிறோம். அதனால் உற்பத்தி குறையாது என்று கூறியபோது தொழிற்சாலை நிர்வாகி தயங்கினாலும், தற்காலிகமாக ஒப்புக்கொண்டார். ஒரு சில வாரங்களுக்குப் பின் அவரே ஆச்சரியப்படும் வகையில் காரியங்கள் நடைபெற்றன. பூரண சுவிசேஷ மத்திய சபையினர் தங்கள் வார்த்தையைக் கடைப்பிடித்ததுடன் மற்ற தொழிலாளிகள் உற்பத்தி செய்யும் சாக்லேட் எண்ணிக்கையைவிட அதிகமாக உற்பத்தி செய்தனர். அவர் மிகுந்த மகிழ்ச்சியடைந்து என்னோடு தொடர்புகொண்டு, “பாஸ்டர் சோ அவர்களே, உங்கள் சபையினரின் உற்சாகம் பாராட்டிற்குரியது எங்கள் தொழிற்சாலையின் சிறந்த தொழிலாளர்கள் உங்கள் சபையைச் சேர்ந்தவர்களே. வேறு யாராவது இருந்தால் வேலைக்கு அனுப்புங்கள்” என்று கூறினார். எங்கள் சபை விசுவாசிகளின் ஆர்வத்திற்கு இது ஒரு சான்று.

அத்தியாயம் 6

வீட்டு ஜெபக்குழுக்களும் சுவிசேஷம் அறிவித்தலும்!

மனுஷனுக்கு வளர்ச்சி தேவை! போஷாக்கு தேவை! இல்லாவிட்டால் அவனது சரீரம் செத்துவிடும்! அதைப்போலவே கிறிஸ்துவின் சரீரமாகிய சபையும் வளராவிட்டால் அழிந்துவிடும்.

ஒரு சபை வளர்வதற்கு அடிப்படை காரணம் சுவிசேஷம் அறிவிக்கப் படுவதாகும்! புது ஆத்துமாக்கள் சந்திக்கப்பட வேண்டும். ஒரு சபை சுவிசேஷத்தைத் தீவிரமாக அறிவிக்காவிட்டால் அது வளர்ச்சியில்லாத தேக்க நிலையில் காணப்படும், அல்லது செத்துவிடும்.

நமது அருமை ஆண்டவரும்கூட, "உலகம் முழுவதிலும் சுவிசேஷத்தை அறிவித்து சகல ஜாதிகளையும் சீஷராக்க வேண்டுமென்று" நமக்கு கட்டளையிட்டிருக்கிறாரே!

இயேசு தமது சீஷர்களிடம் "பரிசுத்த ஆவி உங்கள் மீது வரும்போது நீங்கள் பெலனடைந்து எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்" என்றார். முதலாவதாக, அவர்களது சொந்த ஊராகிய எருசலேமில் சாட்சியாயிருக்க வேண்டும். எருசலேமில் சுவிசேஷத்தை அறிவித்து முடித்த பின்பே, யூதேயாவிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசி பரியந்தமும் அவர்கள் சுவிசேஷத்தை அறிவிக்கச் சென்றனர். நம்முடைய சபைகளும் அப்படியே சுவிசேஷத்தை அறிவிக்கப் பிரயாசப்பட வேண்டும். கர்த்தர் நம்மை வைத்திருக்கும் இடத்தில் அதைச் சுற்றியுள்ள நகரங்களிலும், கிராமங்களிலும் முதலில் சுவிசேஷத்தை அறிவிக்க வேண்டும். சீயோல் நகரத்திலுள்ள எங்களது பூரண சுவிசேஷ மத்திய சபையில் இதைத்தான் நாங்கள் செய்கிறோம்.

எங்களது சபையில் மற்ற சபைகளில் வழக்கமாகக் கடைப்பிடிக்கப்படும் வீடு வீடாக ஏறி சுவிசேஷம் அறிவிக்கும் முறை கடைப்பிடிக்கப்படுவதில்லை. அப்படி முயற்சித்து நாங்கள் தோல்வியடைந்தோம். அதனால் குழப்பங்களும், எதிர்ப்புகளுமே உண்டானது. ஒருவேளை அப்படிப்பட்ட ஊழியத்தின் மூலம் அநேகர் இரட்சிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று நீங்கள் சொல்லலாம். அதை நான் மறுக்கவில்லை. பரிசுத்த ஆவியானவர் ஏற்கெனவே அவிசுவாசிகளின்

இருதயத்தைப் பக்குவப்படுத்தியுள்ள இடங்களில் இப்படிப்பட்ட ஊழியங்களைச் செய்யும்படி அவர் கிறிஸ்தவர்களை அனுப்புகிறார். ஆனால் பொதுவாக எதிர்பார்க்கும் பலன் அதனால் கிடைப்பதில்லை, அதனால் ஊழியத்தில் சிலர் சோர்ந்துபோக நேரிடுகிறது.

எங்களது சபை வீட்டு ஜெபக்குழுக்கள் மூலமாகவே சுவிசேஷத்தை உலகிற்கு அறிவிக்கிறது. ஒவ்வொரு ஜெபக்குழுவும் ஒரு எழுப்புதலின் பிறப்பிடமாக அந்தப் பகுதிக்கு அமைந்திருக்கிறது. ஜெபக்குழுவானது தன்னைச் சுற்றியுள்ள மக்களின் அன்றாட வாழ்க்கையுடன் தன்னை இணைத்துக்கொள்கிறது.

ஒரு வீட்டு ஜெபக்கூட்டம் ஜீவனுள்ளதாயிருக்கும்போது, தேவன் தங்களுக்குச் செய்த நன்மைகளை மகிழ்ச்சியுடன் பகிர்ந்துகொள்ளும். சாட்சிகளைக் கேட்கும்போது மற்றவர்கள் அங்கே கவர்ந்திழுக்கப் படுகிறார்கள். அவிசுவாசிகளுக்குள்ளும் ஒருவித ஆவல் உண்டாகிறது. இந்தக் கிறிஸ்தவர்கள் இவ்வளவு சந்தோஷமாயிருப்பதற்குக் காரணமென்ன என்று அறிந்துகொள்ள விரும்புகின்றனர்.

ஜெபக்குழுக்கள் மற்றவர்களைக் கவர்ந்திழுக்கும் காந்தங்களாக இருந்தாலும் எங்களது சபையின் விசுவாசிகள் சுவிசேஷத்தை அறிவிப்பதில் முழு முயற்சி செய்கிறார்கள். அவிசுவாசிகள் எப்போதாவது ஒருமுறை என்ன நடைபெறுகிறதென வேடிக்கை பார்க்கும்படி கூட்டங்களுக்கு வருவார்கள். அவர்களில் இரட்சிக்கப்படக்கூடியவர்கள் யார் என்று கண்டு அவர்களைத் தேடிச் சென்று சந்திப்பது விசுவாசிகளது கடமை. விசுவாசிகள் மற்றவர்கள்மீது அக்கறையுள்ள சுவிசேஷகர்களாக மாற நாங்கள் அவர்களைப் பயிற்றுவிக்கிறோம்.

அவற்றுள் ஒரு வழி ''ஒட்டுக்கேட்குதல்'' ஆகும். ஆச்சரியமாக இருக்கிறதா? ஆம், அது பரிசுத்த ஒட்டுக் கேட்குதல் ஆகும்! எங்களது ஜெபக்குழுத் தலைவர்கள் மற்ற விசுவாசிகளிடம் பிரச்சனைகளோடு வாழும் மனிதர்களைக் கண்டுபிடித்துக்கொண்டு வரும்படி கூறுகிறார்கள். இரண்டு பேர் பேசிக்கொண்டிருக்கும்போது உரையாடலின் நடுவே தனிப்பட்ட வாழ்க்கையிலிருக்கும் பிரச்சனைகளைக் குறித்து ஒரு வார்த்தை வெளிப்பட்டாலும் உடனடியாக ''பரிசுத்த ஆவியானவரே, இந்த மனிதனுக்கு இயேசு கிறிஸ்துவைப்பற்றிக் கூற ஒரு வாய்ப்பைத் தாரும். அதன்மூலம் இந்த மனிதன் உண்மையான விடுதலையைப் பெற்றுக்கொள்ள வழி செய்யும்'' என்று ஜெபிப்பார்கள். கிடைக்கும் சந்தர்ப்பத்தை முழுவதுமாக பயன்படுத்திக் கொள்ளுவார்கள்.

எங்களது சபையைச் சேர்ந்த ஒரு பெண் சூப்பர் மார்க்கெட்டிற்குப் போயிருந்தபோது அங்கே இரண்டு பெண்கள் பேசிக்கொண்டிருந்ததைக் கேட்க வேண்டியதாயிற்று. ஒரு பெண் மற்றவளிடம் தனது திருமண வாழ்க்கையிலிருக்கும் பிரச்சனைகளைக் கூறிக் கொண்டிருந்தாள். விவாகரத்து செய்ய வேண்டிய நிலைக்கு குடும்பப் பிரச்சனைகள் வளர்ந்து விட்டன என்றாள். இதைக்கேட்ட எங்கள் விசுவாசி சூப்பர் மார்க்கெட்டிலிருந்து வெளியே வரும்போது, மெதுவாக அந்தப் பெண்ணுடன் தனியாகப் பேசி, “நீங்கள் பேசிக்கொண்டிருந்தது என் காதுகளில் விழுந்தது. என்னுடைய வாழ்க்கையிலும் இதே போன்ற பிரச்சனை இருந்தது. அது எப்படி தீர்ந்தது என்பதை உங்களுக்குச் சொல்லி உங்களுக்கு உதவி செய்ய விரும்புகிறேன். தேநீர் அருந்த என்னோடு வருகிறீர்களா?” என்று கேட்ட போது அந்தப் பெண் ஆச்சரியமாக ஒப்புக்கொண்டாள்.

தேநீர் அருந்தும்போது, “நானும் என் கணவரும் விவாகரத்து செய்யும் நிலைக்கு வந்து விட்டோம். ஆனால் இயேசுகிறிஸ்து எங்கள் இருவரையும் மாற்றினார். இப்போது நாங்கள் சந்தோஷமாய் வாழ்கிறோம்” என்று விபரமாக விளக்கிக் கூறினாள். உடனடியாக இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளும்படி கட்டாயப்படுத்தாமல், அருகிலுள்ள ஜெபக் குழுவைப் பற்றி அறிமுகம் செய்து, அங்கே அநேகம் பெண்கள் வருகிறார்கள். அவர்கள் உங்களுக்கு இன்னும் பல ஆலோசனைகளைக் கூறுவார்கள் என்று கூறி, அந்த ஜெபக்குழுக் கூட்டத்திற்கு வரும்படி அழைத்தாள். அந்தப் பெண்ணும் அடுத்த வாரம் நடைபெற்ற ஜெபக்குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டாள். உற்சாகமாகப் பாடப்பட்ட பாடல்களும், கைதட்டுதலும் அவளுக்குப் பிடிக்காவிட்டாலும் தன்னைப்போன்ற பல பெண்கள் சந்தோஷமாயிருப்பதைக் கண்டபோது, இப்படிப்பட்ட சந்தோஷம் தன்னுடைய வாழ்விலும் கிடைக்காதா என்று ஏங்கினாள். தொடர்ந்து சில கூட்டங்களில் கலந்துகொண்டபோது தன்னை இயேசு கிறிஸ்துவுக்கு முற்றிலுமாய் அர்ப்பணித்து சபையின் அங்கத்தினரானாள். அதன்பின் அவளது கணவனும் சபைக்கு வந்து இரட்சிக்கப்பட்டு அவர்களது குடும்ப வாழ்க்கை ஆசீர்வாதமாக மாறிற்று.

இந்த சம்பவம் பெண்கள் மத்தியில் பெண்கள் செய்யும் ஊழியத்தின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்துகிறது. அநேக சபைகளில் ஆண்களைவிட பெண்கள் அதிகமிருப்பதைப்போலவே எங்களது சபையிலும் பெண்கள் அதிகமாயிருக்கிறார்கள். ஆனால் அதற்காக பெண்கள் ஊழியத்திற்கு நாங்கள் முக்கியத்துவம் கொடுக்கவில்லை. ஒரு பெண் இரட்சிக்கப்பட்டு சபையில் சேர்க்கப்படும்போது அவளது பிள்ளைகளும் சபைக்கு வருகிறார்கள்.

பெண்கள் ஆவிக்குரிய கூட்டங்களுக்குப் போகும்போது, தங்கள் பிள்ளைகளையும் அழைத்துப் போகிறார்கள். மேலும் ஆண்கள் ஆவிக்குரிய வாழ்க்கையில் அக்கறையாயிருப்பதைவிடப் பெண்களே அதிக அக்கறை உள்ளவர்களாயிருக்கிறார்கள். பெண்கள் உடனடியாக சுவிசேஷத்தை ஏற்றுக்கொண்டு தங்களை கிறிஸ்துவுக்கு அர்ப்பணிக்கிறார்கள். ஆண்கள் மெதுவாகவே வருகிறார்கள். மனைவியும், பிள்ளைகளும் சபைக்குச் சென்று அதனால் அவர்களது வாழ்க்கையில் உண்டான மாற்றங்களைக் கண்ட பின்பே, என்ன நடக்கிறதென்று பார்க்கலாம் என்று ஆண்கள் வருகிறார்கள். அவர்களும் இரட்சிக்கப்பட்டுவிட்டால், குடும்பத்திலுள்ள மற்றவர்களைப் போலவே உற்சாகமுள்ள கிறிஸ்தவர்களாக மாறுகிறார்கள்.

இன்றைய சபையின் இன்றியமையாத தேவை நம்முடைய நகரங்களைச் சுவிசேஷத்தால் நிரப்புவதே. பெரிய நகரங்களில் நாகரீகத்தால் சபைகள் வளராமல் மடிந்து விடும் என்பது உண்மையல்ல. நகரங்களில் உலக ஆசை அநேகரை இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொள்வதற்கும் சபைக்குச் செல்வதற்கும் தடை செய்கிறதென்பதை நான் மறுக்கவில்லை. ஆனால் உலகத்தின் பெரிய நகரங்களில் ஒன்றாகிய சீயோலில் எங்கள் சபை வெற்றிகரமாக ஊழியம் செய்து வளர்ந்திருக்கிறது. சீயோலில் எண்பது லட்சத்திற்கும் அதிகமான மக்கள் வாழ்கின்றனர். ஆனாலும் கடந்த ஏழு ஆண்டுகளில் 1,40,000 ஆத்துமாக்களைச் சம்பாதித்திருக்கிறோம். மேலும் பல ஆயிரம் ஆத்துமாக்களை கிறிஸ்துவுக்குள் கொண்டுவந்து மற்ற சபைகளுக்கு அனுப்பியிருக்கிறோம். 1973–ஆம் ஆண்டில் இருந்ததைப்போல் பதினைந்து மடங்காக எங்கள் சபை வளர்ந்திருக்கிறது!

பெரிய நகரங்களில் சுவிசேஷத்தை அறிவிப்பதில் இருக்கக்கூடிய எல்லாப் பிரச்சனைகளும் எங்களுக்கும் இருக்கின்றன. பலமாடிக்கட்டிடங்கள் ஏராளமாக உருவாகியிருப்பதால் அங்கு குடியிருக்கும் ஜனங்களைச் சென்று சந்திப்பது கடினம். நாம் போய் மூடியிருக்கும் கதவைத் தட்டி சுவிசேஷம் கூற வந்திருக்கிறோம் என்று கூற முடியாது (அது எங்கள் சபை கடைப்பிடிக்கும் வழியல்ல).

இப்படிப்பட்ட இடங்களிலும் சுவிசேஷத்தை அறிவிக்க எங்கள் ஜெபக்குழு ஒன்றின் தலைவி ஒரு வழியைக் கண்டுபிடித்தார். ஒவ்வொரு சனிக்கிழமை யன்றும் தான் குடியிருக்கும் பலமாடிக் கட்டிடத்தின் படிகளில் பலமுறை ஏறி இறங்குவார். அப்படிப்பட்ட நேரங்களில் குழந்தையைத் தூக்க முடியாமல் சிரமத்தோடு படிகளில் ஏறும் பெண்ணையோ, அல்லது மளிகைப் பொருட்கள்

உள்ள கூடையைச் சிரமப்பட்டுத் தூக்கிச் செல்லும் முதியவர்களையோ கண்டு அவர்களுக்கு உதவி செய்து, அவர்களுடைய பாரத்தைப் பகிர்ந்து கொண்டு அவர்களது வீட்டில் கொண்டுபோய் விடுவார். இப்படியாகச் செய்யும்போது படிப்படியாக அந்தப் பலமாடிக் கட்டிடத்தில் குடியிருப்போரில் அநேகருடன் நல்ல அறிமுகம் கிடைத்துவிடும். அவர்களோடு பேசும்போதே அவர்களது தொலைபேசி எண்ணைப் பக்குவமாகக் கேட்டுத் தெரிந்து கொண்டு ஜெபக்குழுக் கூடும் நாட்களில் நம்முடைய கட்டிடத்திலேயே இந்தக் குறிப்பிட்ட வீட்டில் ஒரு கூட்டம் இருக்கிறது. வாருங்கள் என்று தொலைபேசி மூலமாக அழைக்கும்போது அவர்கள் கூட்டங்களுக்கு வந்து இரட்சிக்கப்படுவார்கள். இம்முறை மிக வெற்றிகரமானதாயிருந்ததால், இன்று எங்களது சபையைச் சுற்றியிருக்கும் எந்த பலமாடிக் கட்டிடத்திற்கும் நீங்கள் சனிக்கிழமையன்று போய்ப் பார்த்தால் எங்களது சபையின் ஜெபக்குழுத் தலைவர்கள் மாடிப்படிகளில் ஏறிக்கொண்டும் இறங்கிக் கொண்டும் மற்றவர்களுக்கு உதவி செய்து கொண்டிருப்பதைக் காணலாம்.

மளிகைப் பொருட்களை எடுத்துச் செல்வதில் நான் உங்களுக்கு உதவட்டுமா? உங்கள் வீட்டுக் குழாயில் தண்ணீர் கசிகிறதே, எனக்குத் தெரிந்த ஒருவரை அனுப்பி வைக்கட்டுமா? என்று இப்படியாகப் பேசி ஜெபக்குழுக்களுக்கான விதைகள் ஜெபத்துடன் இரகசியமாக விதைக்கப் படுகின்றன.

இப்படிப்பட்ட ஊழியத்தில் எங்களது சபையார் மிக உற்சாகமாக இருப்பதால் சீயோல் நகரத்தைவிட்டு வேறு நகரத்திற்குச் சென்றாலும் கூட எங்களது சபையையோ அல்லது ஜெபக்குழுவையோ விட மனதில்லா திருக்கிறார்கள். நான்கு ஆண்டுகளுக்கு முன்பு ஒரு கணவனும், மனைவியும் சீயோலிலிருந்து இருபது மைல் தொலைவிலிருக்கும் இன்சோன் என்னும் நகரத்திற்குச் சென்றார்கள். அந்தக் குடும்பத்தாருடன் பேசிக்கொண்டிருந்த போது, “இனி நீங்கள் இன்சோன் நகரத்திலிருக்கும் ஒரு நல்ல ஆவிக்குரிய சபைக்குப் போங்கள்” என்று கூறினேன். ஆனால் அந்தப் பெண், “இல்லை பாஸ்டர், நாங்கள் அங்கு ஒரு வீட்டு ஜெபக்குழுவை ஆரம்பிப்போம். ஞாயிற்றுக்கிழமை எல்லோரையும் அழைத்துக்கொண்டு நம்முடைய சபைக்கே வருவோம்” என்றாள். அவள் ஏற்கெனவே இன்சோன் நகரத்தில் ஒரு வெற்றிகரமான ஜெபக்குழுவை உருவாக்கப்போகிறோம் என்ற தரிசனத்தை உடையவளாயிருந்தாள். “நல்லது, அது உங்கள் விருப்பம்” என்று கூறி நான் அவர்களை ஆசீர்வதித்தேன்.

இன்சோனுக்குக் குடியேறியபின்பு அவர்கள் சென்று திட்டமிட்டபடியே செய்தார்கள். மிகக் குறுகிய காலத்திற்குள் அருமையான வீட்டு ஜெபக்குழு அங்கே உருவாயிற்று. ஞாயிற்றுக்கிழமை எல்லா ஜெபக்குழு உறுப்பினர் களையும், அழைத்துக்கொண்டு வாடகைக்கு ஏற்பாடு செய்யப்பட்ட பஸ் மூலமாக சபைக்கு வருவார்கள். இது நான்கு ஆண்டுகளுக்கு முன்பு நடந்தது. இப்போது அந்த ஒரு ஜெபக்குழுவின் மூலமாக 2000 அங்கத்தினர்களைக் கொண்ட 130 ஜெபக்குழுக்கள் எங்களுக்கு இன்சோன் நகரத்தில் உருவாகியுள்ளன. ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் பஸ்களை வாடகைக்குப் பிடித்து எல்லோரும் எங்கள் சபைக்கு வருகின்றனர். ஒரே ஒரு ஜெபக்குழுவின் ஊழியத்தின் மூலமாக இன்று இன்சோன் ஒரு ஜெபக்குழுக்களின் வட்டமாகப் பிரிக்கப்பட்டு, ஒரு முழு நேர ஊழியர் அந்த 130 ஜெபக்குழுக்களையும் கண்காணிக்கும்படி நியமிக்கப்பட்டிருக்கிறார்.

ஒரு பெரிய நற்செய்திப் பெருவிழாவோ, எழுப்புதல் கூட்டமோ, விளம்பரமோ இல்லாமல் ஒரே ஒரு கணவன், மனைவியின் உற்சாகத்தின் மூலமாக இன்சோன் நகரத்தில் எங்கள் சபைக்கு 2000 விசுவாசிகள் கிடைத்திருக் கின்றனர். நான் ஒரு முறைகூட இன்சோன் நகரத்திற்கு போவதில்லை. ஆனால் ஒரு தம்பதியினர் மூலமாக இரட்சிக்கப்பட்ட 2000 ஆண்களும், பெண்களும் குழந்தைகளுமாக என்னுடைய பிரசங்கத்தைக் கேட்க சீயோல் நகரத்திற்கு வருகின்றனர்.

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் எங்களது சபைக்கு நூற்றுக்கும் மேற்பட்ட பஸ்கள் வருகின்றன. சீயோலுக்குப் புதிதாக வரக்கூடியவர்கள் "யாங்கிச் சோ ஏராளமான பஸ்கள் வைத்திருக்கிறார். அதன் மூலம் ஆட்களைக் கொண்டு வருகிறார். அதனால்தான் சபைக்கு ஏராளமானோர் வருகிறார்கள்" என்று நினைப்பார்கள். ஆனால் உண்மையில் ஜெபக் குழுக்களே தங்களது சொந்த செலவில் பஸ்களை ஏற்பாடு செய்து வருகிறார்கள். அதற்கும் சபைக்கும் எவ்விதத்தொடர்பும் இல்லை. ஆனால் இதெல்லாம் நடப்பதற்காக நான் மகிழ்ச்சியடைகிறேன். அவ்வளவுதான்.

இதுதான் ஊழியம். இதுதான் சபை வளர்ச்சி. 1980 ஆம் ஆண்டின் இறுதியில் எங்களுக்கு பத்தாயிரம் ஜெபக்குழுக்கள் இருந்தன. வீட்டு ஜெபக்குழுத் திட்டத்தைச் செயல்படுத்தும் எந்தச் சபையும் வளரும் என்று நான் உறுதியாக விசுவாசிக்கிறேன். ஒரு சபை வளர்ந்த சபையாக இருக்குமானால், குறிப்பாக இரண்டாயிரம் விசுவாசிகளுக்கு அதிகமான அங்கத்தினர்கள் உள்ள சபையானால் அவர்கள் ஜெபக்குழுத் திட்டத்தைக் கட்டாயமாக செயல்படுத்த வேண்டும். இல்லாவிட்டால் எல்லா விசுவாசி

களின் பாரங்களையும் சுமக்க முயற்சிப்பதால் அந்த சபையின் போதகர் தளர்ச்சி அடைந்து விடுவார்.

ஜெபக்குழு திட்டமில்லாமல் தனிப்பட்ட முறையில் என்னால் 500 அங்கத்தினர்கள் உள்ள சபையைக்கூட நடத்த முடியுமா என்பது சந்தேகமே. நான் இப்போது ஜெபக்குழுத் தலைவர்களைக் கண்காணிக்கும் ஒரு சிறு கூட்டம் தலைவர்களையே கவனித்துக் கொண்டிருக்கிறேன். எங்களது சபையின் ஊழியத்தின் பெரும்பகுதியை ஜெபக்குழுத் தலைவர்களே செய்கின்றனர்.

பூரண சுவிசேஷ மத்திய சபையானது சிறு சிறு வீடுகளிலும், பலமாடிக் கட்டிடங்களின் வீடுகளிலும், சீயோல் நகரத்திலும் அதைச் சுற்றியுமுள்ள அலுவலகங்களிலும், தொழிற்சாலைகளிலும்தான் இருக்கிறது. அங்கேதான் ஊழியம் நடைபெறுகிறது. தேவனை ஆராதிக்கவும், பக்தி விருத்தியையும், வேத பாடத்லதயும் பெறவுமே சபைக் கட்டிடத்தில் கூடுகிறோம்.

எங்களது சபை ஒரு மனித சரீரத்திற்கு ஒப்பானது. ஒரு சரீரத்தில் அணுக்கள் வளர்கின்றன. பின்பு சிதறிப் பெருகுகின்றன. அதைப்போலவே எங்களது ஜெபக்குழுக்களும் சபையின் அணுக்களாயிருந்து வளர்கின்றன. பின்பு, பிரிக்கப்படுகின்றன. மாறாக இரண்டு, நான்கு, எட்டு என்று பெருகுகின்றன. அதைப் போலவே எங்களது ஜெபக்குழுக்களும் பதினைந்து குடும்பங்களுக்கு அதிகமான அங்கத்தினர்கள் வரும்போது இரண்டாகப் பிரிக்கப்பட்டு இரண்டு ஜெபக் குழுக்களும் வளர்ந்து பதினைந்து குடும்பங்களுக்கு அதிகமானோர் வரும்போது நான்காகப் பிரிகின்றன.

நான் ஏற்கெனவே கூறியபடி ஆரம்ப காலத்தில் ஒரு ஜெபக் குழுவிலிருந்து பிரிந்து இன்னொரு ஜெபக்குழுவிற்குப் போக அநேகர் தயங்கினர். அவர்களைக் கட்டாயப்படுத்தி வேறு ஜெபக்குழுவிற்கு அனுப்ப வேண்டியிருந்தது. இப்போதும் சில நேரங்களில் அப்படி நடைபெற்றாலும் பெரும்பாலான விசுவாசிகள் ஜெபக்குழுக்கள் பிரிக்கப்படுவதில்தான் சபை மற்றும் ஜெபக்குழுவின் உயிர்நாடியே இருக்கிறது என்பதை அறிந்திருக்கிறார்கள். ஒரு ஜெபக்குழு வளர்ந்தவுடன் யாருடைய கட்டாயமுமில்லாமல் தாங்களாகவே இரண்டாகப் பிரிகிறார்கள். பிரிக்கத் தயங்கினால் ஒரு போதகர் அவர்களைச் சந்தித்து உற்சாகப்படுத்தி ஜெபக்குழுவை பிரிக்க ஏற்பாடு செய்வார். இது எங்கள் சபையின் சட்டம். எவ்வித முறுமுறுப்புமில்லாமல் பெரும்பகுதி விசுவாசிகள் இந்த சட்டத்திற்குக் கீழ்ப்படிக்கின்றனர்.

ஜெபக்குழுக்கள் பிரிக்கப்படும்போது நண்பர்களாகப் பழகியவர்கள் கண்ணீரோடு பிரிகிறார்கள். ஆனாலும் போக முடியாதென்று பிடிவாதம் செய்வதில்லை. மேலும் ஜெபக்குழுக்கள் பெரும்பாலும் அவரவர்கள் குடியிருக்கும் பகுதியிலேயே இருப்பதால் நண்பர்களை ஜெபக்குழுவில் சந்திக்க முடியாவிட்டாலும், மற்ற நாட்களில் சாதாரணமாக நண்பர்கள் சந்திப்பதைப்போல சந்திக்கிறார்கள். மேலும் அவ்வப்போது ஒரு குறிப்பிட்ட வட்டாரத்திலுள்ள எல்லா ஜெபக் குழுக்களும் இணைந்து ஜெபக்கூட்டம் அல்லது பிக்னிக் போன்றவற்றை நடத்துவதால் அங்கும் சந்திக்கும் வாய்ப்புகள் உண்டு.

சுவிசேஷ ஊழியத்தைக் குறித்து இன்னொரு காரியத்தையும் நான் கூற வேண்டும். பல சபைகளில் சுவிசேஷக் கூட்டங்களின் மூலம் புறஜாதியார் இரட்சிக்கப்பட்டு சபையில் சேருகிறார்கள். அதே நேரத்தில் ஏற்கெனவே சபையில் இருப்பவர்களில் சிலர் பின்மாற்றமடைந்து சபைக்கு வராமல் போகிறார்கள். எனவே சபையில் புதிய ஆத்துமாக்கள் சேர்ந்தாலும் சபையில் வளர்ச்சி காணப்படவில்லை. ஆனால் எங்களுடைய சபைக்கு வருபவர்கள் பின்மாற்றமடைவதற்கு வழியே இல்லை. ஏனென்றால் ஒவ்வொரு ஜெபக்குழுவும் ஒரு குடும்பத்தைப்போல இயங்குகிறது. ஜெபக்குழுவின் தலைவர் தனது அங்கத்தினர்களைக் கோழி தனது குஞ்சுகளைப் பாதுகாப்பதைப்போல் பாதுகாக்கிறார். எனவே தங்கள்மீது அன்பும் அக்கறையும் உள்ளவர்கள் சபையில் இருக்கிறார்கள் என்ற உணர்வு விசுவாசிகளுக்கு உண்டாகிறது. எனவே அவர்கள் பின்மாற்றம் அடைவதில்லை. அதே நேரத்தில் ஒரு விசுவாசி ஜெபக்கூட்டத்திற்கு வராவிட்டால், அடுத்த நாளே ஜெபக்குழுவின் தலைவர் அவரது வீட்டிற்குச் சென்று வியாதி அல்லது வேறு பிரச்சனைகள் காரணமாக வரமுடியாமற் போயிற்றோ என்பதை அறிந்து அவருடன் ஜெபிக்கிறார். அல்லது அந்த விசுவாசி பின்மாற்றத்திற்குள் போய்க்கொண்டிருந்தால் அதற்கான காரணங்களை அவருடன் பேசுவதன் மூலம் அறிந்து தீர்க்க முயற்சிக்கிறார்.

எனவே வீட்டு ஜெபக்குழுவின் மூலம் ஒரு மனிதர் சபைக்கு வந்து விட்டால், அவர் சபையிலிருந்து தப்பிக்கவே முடியாது. அவரைப் பின் தொடர்ந்து கவனித்து அவருக்கு உதவி செய்வதற்கு யாராவது ஒருவர் இருந்து கொண்டேயிருப்பார்.

ஒரு நாள் ஒரு கணவனும் மனைவியும் என்னுடைய அலுவலகத்திற்கு வந்து தாங்கள் சபையின் புதிய அங்கத்தினர்கள் என்று அறிமுகப்படுத்திக்

கொண்டனர். பின்பு அந்த கணவன் தலையை அசைத்துக் கொண்டும், சிரித்துக் கொண்டும் என்னைப் பார்த்து, "இந்த சபையிலிருந்து தப்புவது முடியாத காரியம்" என்று கூறினார். "நீங்கள் சொல்வது எனக்குப் புரியவில்லையே, விளக்கமாகக் கூறுங்கள்" என்று நான் கேட்டபோது, அவர் சபைக்கு வந்த விதத்தைக் கூறினார்.

"எங்களுடைய மகன் ஹிப்பியாக மாறி துன்மார்க்கமாக வாழ்ந்து கொண்டிருந்தான். அவனைப் பற்றி நாங்கள் அதிகமாய்க் கவலைப்பட்டுக் கொண்டு இருந்தோம். அந்த நேரத்தில்தான் உங்களது சபையைச் சேர்ந்த, எங்கள் பக்கத்து வீட்டில் வசித்த ஒரு தாய் என் மகனுக்கு இயேசு கிறிஸ்துவைக் குறித்துக் கூறி அவனோடு சேர்ந்து ஜெபித்தார்கள். சில நாட்களில் எங்கள் மகனது வாழ்க்கை முற்றிலும் மாறிவிட்டது. நாங்கள் உண்மையிலேயே மிகவும் சந்தோஷப்பட்டோம். அதன்பின் அந்த அம்மாள், "எங்கள் வீட்டில் ஒவ்வொரு வாரமும் ஒரு அருமையான கூட்டம் நடை பெறுகிறது. தேநீர் மற்றும் பிஸ்கட் அங்கு விநியோகிக்கப்படுகிறது. அங்கு கிறிஸ்துவைக் குறித்து நாங்கள் பேசுகிறோம். நல்ல நண்பர்களை அங்கே சந்திக்க முடியும். நீங்கள் அங்கு வாருங்கள்" என்று அழைத்தார்கள்.

அந்த அம்மாள் எங்களுக்குச் செய்த உதவியின் காரணமாக வேறு வழியில்லாமல் அங்கு சென்றோம். கூட்டம் இனிமையாயிருந்தது. பாடல்களும், சாட்சிகளும் பரவசமூட்டுவதாயிருந்தது. செய்தியும் அருமையா யிருந்தது. அங்கு வந்திருந்த அனைவரும் எங்களுக்காகவும், எங்களது மகனுக்காகவும் பாரத்தோடு ஜெபித்தது எங்களை அதிகமாய்க் கவர்ந்தது. கூட்டம் முடிந்த பிறகு இனிய நண்பர்களுடன் ஒரு மாலைப் பொழுதை இனிமையாகக் கழித்தோம் என்ற உணர்வுதான் எங்களுக்கு ஏற்பட்டது.

அடுத்த வாரமும் அதே நாளில் அந்த அம்மையார் எங்களை ஜெபக் கூட்டத்திற்கு வரும்படி அழைத்தார்கள். முதல்முறை சென்றபோது கூட்டம் நன்றாயிருந்ததால் மறுபடியும் சென்றோம். ஆனால் தொடர்ந்து ஜெபக் குழுவில் பங்கெடுக்கவோ, கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளவோ நாங்கள் தயாராயில்லை.

பின்பு சனிக்கிழமையன்று அந்த அம்மாள் தொலைபேசியில், "நாளை ஞாயிற்றுக் கிழமையாயிற்றே! எங்களோடு எங்களது தலைமைச் சபைக்கு வாருங்களேன். எங்களுக்கு ஒரு அருமையான போதகர் இருக்கிறார். நன்றாக பிரசங்கம் செய்வார் நாம் போகலாம்" என்று கூறி தொலைபேசியை வைத்துவிட்டார்கள். அடுத்த நாள் காலையில் காரில் எங்கள் வீட்டிற்கு

வந்து, வரும்படி அழைத்ததால் வேறு வழியின்றி ஆராதனைக்குச் சென்றோம். சபையைப் பார்த்தபோது உண்மையாகவே அதிர்ச்சி அடைந்தோம். ஏராளமான ஜனங்கள் நிரம்பியிருக்கும் இவ்வளவு பெரிய இடத்தை நாங்கள் கண்டதேயில்லை. அங்கு ஜனங்கள் சத்தமாய் ஜெபிப்பதினாலும், பாடுவதினாலும், கைகளைத் தட்டுவதினாலும் உண்டான சத்தம் எங்களை இன்னும் அதிர்ச்சியடையச் செய்தது.

ஆராதனை முடிந்து வீட்டிற்குத் திரும்பியவுடன் நான் என் மனைவியிடம், "அது நல்ல சபைதான். ஆனால் அவர்கள் போடும் சத்தத்தை என்னால் சகிக்க முடியவில்லை. பலர் வெறிபிடித்தவர்களைப் போலிருக்கிறார்கள். இனி நாம் அந்த சபைக்குப் போகக்கூடாதென்று" கூறினேன்.

ஆனால் ஜெபக்குழுத் திட்டம் என்னும் தூண்டிலில் நாங்கள் ஏற்கெனவே அகப்பட்டு விட்டதை அறியாதிருந்தோம். அடுத்த வாரமும் ஜெபக்குழுவின் தலைவி ஜெபக்கூட்டத்திற்கு அழைத்தார்கள். மேலும் ஞாயிற்றுக்கிழமை தனது காரில் ஆலயத்திற்கு அழைத்துச் செல்வதாகவும் கூறினார்கள். நாங்கள் எத்தனையோ சாக்குகளைக் கூறினாலும் அவர்கள் விடவில்லை. இப்படியாகத் தொடர்ந்து வேறு வழியில்லாமல் ஜெபக்கூட்டத்திற்கும், சபை ஆராதனைக்கும் வந்து கொண்டிருந்தாலும் இதிலிருந்து எப்படியாவது தப்பிக்க வேண்டுமென்று விரும்பினோம். எனவே வீட்டையே விற்று விட்டு எங்காவது ஓடிவிடலாம் என்று முடிவெடுத்து, வீட்டை விற்றுவிட்டு, அந்த ஜெபக்குழுவின் தலைவிக்கு தெரிவிக்காமலேயே நகரத்தின் வேறொரு பகுதியில் ஒரு வீட்டை வாங்கி அங்கு குடியேறினோம். நான் என் மனைவியிடம், "அப்பாடா! ஒரு வழியாக அந்த அம்மாளிடமிருந்து தப்பி விட்டோம், இனி நிம்மதியாயிருக்கலாம்" என்று கூறினேன்.

அடுத்த வாரம் அந்த அம்மாள் எங்களது பழைய வீட்டிற்குச் சென்றபோது அது காலியாயிருந்தது. ஆனாலும் அந்த அம்மாள் சோர்ந்துபோகவில்லை. நகர அலுவலகத்திற்குச் சென்று எப்படியோ எங்களது புதிய முகவரியைக் கண்டுபிடித்து, அதைச் சபையின் அலுவலகத்தில் கொடுக்க, சபையின் அலுவலர்கள் அந்த முகவரியை அந்தப் பகுதியில் இயங்கும் ஜெபக்குழுவின் தலைவருக்கு அனுப்பி வைத்தனர்.

ஒரு வெள்ளிக்கிழமை மாலை வீட்டில் நிம்மதியாய் இருந்தபோது திடீரென்று கதவு தட்டப்படும் சத்தம் கேட்டது. கதவைத் திறந்தபோது, ஒரு பெண், "நான் பூரண சுவிசேஷ மத்திய சபையின் இந்தப் பகுதியின் ஜெபக்குழுவின் தலைவி. எங்கள் பகுதிக்கு குடிவந்திருக்கும் உங்களை

அன்புடன் வரவேற்கிறோம். இன்றிரவு உங்கள் வீட்டிலேயே ஒரு ஸ்தோத்திரக் கூட்டம் வைக்கப்போகிறோம்'' என்று கூறியபோது நான் என்ன சொல்வதென்றே தெரியாமல் திகைத்துப்போனேன்.

எனவே அன்றிரவு எங்கள் வீட்டில் ஜெபக்கூட்டம் நடைபெற்றது. மறுபடியும் நாங்கள் பாடவும், ஜெபிக்கவும் வேண்டியதாயிற்று. வந்திருந்தவர்கள் எங்களுக்காகவும், எங்களது புதிய வீட்டிற்காகவும் ஜெபித்தார்கள். கூட்டம் முடிந்து எல்லோரும் போன பின்பு நான் என் மனைவியிடம், ''தப்பிக்க வேண்டுமானால் ஒன்று அமெரிக்காவிற்கு செல்ல வேண்டும் இல்லை யென்றால் மோட்சத்திற்குப் போய்விடவேண்டும்!'' என்றேன்.

அப்போது என் மனைவி, ''அப்படியானால் இந்த சபையாரிடமிருந்து தப்பிக்க முடியாவிட்டால் இந்த சபையிலேயே சேர்ந்துவிடுவது நல்லது'' என்று கூறினாள். எனவே அடுத்த வாரம் சபைக்கு வந்து மற்றவர்களைப் போலவே கைகளைத் தட்டி, சத்தமிட்டு ஜெபிக்கத் தொடங்கினோம். இரட்சிப்பையும், பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தையும் பெற்றுக் கொண்டோம். இப்போது சபையின் பூரண அங்கத்தினர்களாகி விட்டோம்'' என்று கூறினார்.

ஜெபக்குழுத் தலைவர்களின் இடைவிடா முயற்சியினாலேயே இத்தனை காரியங்களும் நடைபெறுகின்றன. அதே நேரத்தில் இதெல்லாம் மிகவும் அன்புடனும், பக்குவமாகவும் செய்யப்படுவதால் எவ்விதத்திலும் அவர்கள் பாதிக்கப்படாதபடி நடந்தது. மேலும் இந்தத் தம்பதியினர் பரிசுத்த ஆவியானவரால் உணர்த்தப்பட்டிருக்க வேண்டும். அவர்கள் எங்கள் சபையையோ அல்லது ஜெபக்குழுவையோ விட்டுத் தப்பிக்க முயற்சிக்க வில்லை. தேவனை விட்டே தப்பிக்க முயற்சித்தார்கள். முடியாமற் போகவே தங்களை அர்ப்பணித்தார்கள்.

எங்களது சபையின் எல்லா ஜெபக்குழுவின் தலைவர்களும் இப்படிப்பட்ட விடாமுயற்சி எடுக்கவில்லை என்பது உண்மையே. மேலும் அவிசுவாசிகளை கூட்டத்திற்கு அழைத்துவரச் செய்யப்படும் முயற்சிகள் எல்லாருக்கும் வெற்றிகரமாக அமைவதில்லை என்பதும் உண்மையே. ஆனால் எங்கள் சபை வளருவதற்குப் போதுமான அளவு வெற்றி கிடைத்திருக்கிறது. அல்லேலூயா!

நம்முடைய சபைகளுக்கு வரும் புறஜாதியார் இயேசு கிறிஸ்துவைச் சந்திக்க நாம் முயற்சிக்க வேண்டும். அவர்கள் இரட்சிக்கப்பட வேண்டும். பின்பு ஒருநாளும் அவர்கள் பின்மாற்றமடைய விடக்கூடாது. வேறு நகரத்திற்கு மாற்றலாகிச் செல்லும் காரணத்தால் அல்லது மரித்து அடக்கம்

பண்ணப்பட்ட காரணத்தாலன்றி, வேறு எக்காரணம் கொண்டும் ஒரு விசுவாசி எங்களது சபையை விட்டுப்போக முடியாது.

எங்களுடைய சபையில் இருக்கும் 1,50,000 விசுவாசிகளுடனும் நேரடித் தொடர்பு வைத்துக்கொள்ள என்னால் முடிவதில்லை. ஆனால் ஜெபக்குழுத் தலைவர்கள் மூலமாக மறைமுகத் தொடர்பு எனக்கிருக்கிறது. எங்களுடைய விசுவாசிகள் நன்றாய்க் கவனிக்கப்படுகிறார்கள்; சீஷர்களாக்கப் படுகிறார்கள்; போஷிக்கப்படுகிறார்கள்; தேவைப்படும்போது திருத்தப் படுகிறார்கள் என்ற நிச்சயம் எனக்குண்டு.

அதனால்தான் எங்களது சபையில் உண்மையான சுவிசேஷ ஊழியம் நடைபெறுகிறது. எங்களது உற்சாகமான தலைவர்கள் இரட்சிக்கப் படாதவர்களைக் கொண்டு வருகிறார்கள். கொண்டு வந்தபின்பு அவர்களில் வெகு சிலரைத்தவிர பெரும்பாலானோர் வெளியேறி விடாதபடி அவர்களைப் பராமரித்துப் பாதுகாக்கிறார்கள்.

அத்தியாயம் 7

புது வகையான மிஷெனரி!

பூரண சுவிசேஷ மத்திய சபையின் வீட்டு ஜெபக்குழுத் திட்டம் எங்கும் வெற்றியைக் கொண்டுவரும் என்பதை இதற்குள் நீங்கள் உணர்ந்திருப்பீர்களென நம்புகிறேன். உண்மையில் எல்லா இடங்களிலும் அது வெற்றிகரமாகச் செயல்படுகிறது. கொரியாவிலும், வெளிநாடுகளிலும் எங்கள் சபையிலிருந்து மிஷனெரிகளாகச் சென்று சபைகளை ஆரம்பித்து வீட்டுஜெபக்குழுத் திட்டத்தைக் கடைப்பிடிக்கும் ஒவ்வொரு சபையிலும் அமோக வளர்ச்சி இருக்கிறது.

வீட்டு ஜெபக்குழுத் திட்டத்தைச் செயல்படுத்தியதின் மூலம் எங்களது பூரண சுவிசேஷ மத்திய சபை மாபெரும் வளர்ச்சியைக் கண்டது. இதனால் உலகம் முழுவதிலும் பல சபையார் மாநாடுகளிலும், கருத்தரங்கிலும் பேசுவதற்காக என்னை அழைக்கிறார்கள். உலகம் முழுவதிலும் ஏராளமான சபைகளில் விசுவாசிகளின் எண்ணிக்கை குறைந்து கொண்டேயிருக்கிறது. அல்லது பெருகாமல் ஒரே நிலையில் இருக்கிறது. இந்த நிலையை மாற்றுவது எப்படி என்று எல்லோரும் அறிய விரும்புகின்றனர்.

சில வருடங்களுக்கு முன்பாக சபை வளர்ச்சியைக் குறித்துப் பேசும்படியாக ஆஸ்திரேலியாவிலிருக்கும் தேவ சங்க சபைகளால் அழைக்கப்பட்டிருந்தேன். நான் விமானத்திலிருந்து இறங்கினவுடனேயே ஸ்தாபனத்தின் முக்கிய தலைவர்கள் என்னிடம், "பெரிய கூட்டம் வரும் என்று எதிர்பார்க்கவேண்டாம்" என்று கூறினார்கள். ஆஸ்திரேலியர்கள் உலகத்திற்குள் இருக்கிறார்கள். சபைக்குப் போவதை விரும்புவதில்லை. அதிக கஷ்டமில்லாமலேயே ஏராளமான செல்வத்தைச் சம்பாதிக்க முடிவதால் தேவனுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல், உலக ஆசைகளுக்கே அதிக முக்கியத்துவம் கொடுக்கிறார்கள்; எனவே உங்கள் கூட்டங்களுக்கு அதிகமான மக்கள் வருவார்கள் என்று எதிர்பார்க்க வேண்டாம்" என்று அவர்கள் என்னிடம் விளக்கினார்கள்.

விமான நிலையத்திலிருந்து வரும் வழியில் நான் கண்ட காட்சிகள் அவர்கள் சொல்வது உண்மையே என்று நிரூபிப்பதாயிருந்தது. அமெரிக்க

தேசத்திலிருப்பவர்களைவிட, ஆஸ்திரேலியர்கள் செழிப்பாயிருக்கிறார்கள். அங்கு காணுமிடமெல்லாம் பொருளாதாரச் செழுமை இருந்தது. எனவே சபை வளர்ச்சி பற்றி என்னுடைய திட்டங்கள் அவர்களது நாட்டில் செயல் படாது என்று அவர்கள் நினைத்தாலும் நான் பேசுவதைக் கேட்க விரும்பினார்கள்.

நான் தங்குவதற்கு ஆஸ்திரேலிய சபைகள் ஏற்பாடு செய்திருந்த இடத்தைப் பார்த்தவுடனேயே ஆஸ்திரேலியர்களின் விசுவாசத்தை அதிகரிக்கச் செய்ய நான் ஏதாவது செய்ய வேண்டுமென உணர்ந்தேன். நான் பிரயாணம் செய்த கார் பெரிய பெரிய ஹோட்டல்களையெல்லாம் கடந்து இறுதியாக YWCA-வுக்குச் சென்று நின்றது. என் கண்களை என்னாலேயே நம்ப முடியவில்லை. அங்கு தங்கியிருந்தவர்களில் நான் ஒருவன் மட்டுமே ஆண். மற்ற அனைவரும் பெண்கள். அவர்கள் என்னை ஒரு மிருகக்காட்சி சாலையில் ஒரு விநோத மிருகத்தைப் பார்ப்பதைப்போலப் பார்த்தனர். உணவு விடுதியிலும் நான் ஒருவன் மட்டுமே ஆண். செலவைக் குறைப்பதற்காக சபையின் தலைவர்கள் என்னை YWCA-யில் தங்க வைத்திருந்தனர். அவர்கள் பிரசங்கம் செய்தும், ஜெபித்தும், சுவிசேஷக் கூட்டங்கள் நடத்தியும், சபைகள் வளராததற்கு அவர்களது பெலவீனமான விசுவாசமே காரணம் என்பதை இதன்மூலம் தெரிந்துகொண்டேன்.

கொரியாவிலுள்ள என்னுடைய மனைவியுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டபோது, "நீங்கள் எங்கே தங்கியிருக்கிறீர்கள்? நான் எப்படி உங்களுடன் தொடர்புகொண்டு பேசுவது?" என்று கேட்டாள். "நான் YWCA சமையலறையிலிருந்து பேசுகிறேன். எப்போதும் பெண்கள்தான் என்னைச் சுற்றி இருந்து கொண்டிருக்கிறார்கள். நீ என்னுடன் பேசுவது முடியாத காரியம்" என்றேன். அதற்கு அவள், "உடனடியாக அறையைக் காலி செய்து விட்டு வசதியான வேறு ஹோட்டலில் போய்த் தங்குங்கள்" என்றாள். "அப்படிச் செய்தால் என்னை அழைத்து இங்கு தங்க வைத்திருப்பவர்களின் மனம் புண்படுமே" என்றேன்.

அன்றிரவிலிருந்தே விசுவாசத்தைக் குறித்தும், சபை வளர்ச்சியைக் குறித்தும் ஆஸ்திரேலியக் கிறிஸ்தவத் தலைவர்களுக்குப் போதித்தேன். எங்களுடைய சபை அனுபவங்களைக் கூறி வீட்டு ஜெபக்குழுக்கள் அமைப்பதையும், ஊழியத்தில் இலக்குகளை நிர்ணயித்து அதன் அடிப்படையில் செயல்படுவதன் அவசியத்தையும் வலியுறுத்தினேன்.

ஒரு ஊழியர் என்னிடம், "கடந்த பத்து ஆண்டுகளில் ஆஸ்திரேலியாவில்

இருக்கும் தேவ சங்க சபைகள் இரண்டு சதவிகித வளர்ச்சியையே அடைந்திருக்கின்றன. அப்படியிருக்க நீங்கள் சொல்லுகிறபடி இலக்குகளை நிர்ணயிப்பது எவ்வளவு பலனைக் கொண்டு வர முடியும்?'' என்று கேட்டார்.

பெருகி வரும் மக்கள் தொகையுடன் ஒப்பிடும்போது இரண்டு சதவிகிதம் என்பது வளர்ச்சியே அல்ல. அது வளர்ச்சிக்கு குறைவேயாகும். எனவே நான் அவர்களிடம், ''இலக்குகளை நிர்ணயித்து, சபை வளர்ச்சிப் பிரமாணங்களை செயல்படுத்தி, வீட்டு ஜெபக்குழுக்களை ஆரம்பிக்காவிட்டால் ஆஸ்திரேலியாவில் தேவ சங்க சபை அழிந்து விடும்'' என்று கூறினேன். எல்லா ஊழியர்களையும் கருத்தரங்கின்போதே தங்கள் சபைகளில் இருக்கவேண்டிய விசுவாசிகளின் எண்ணிக்கையைக் குறித்த இலக்குகளை நிர்ணயிக்க கேட்டுக்கொண்டேன். வீட்டு ஜெபக்குழுக்களை ஆரம்பித்து விசுவாசத்துடன் செயல்படும்படி கூறினேன்.

நான் கூறிய விதிமுறைகளைக் கடைபிடித்ததினால் அந்த ஊழியர்கள் வெற்றி பெற்றிருக்கின்றனர். இன்று ஆஸ்திரேலிய சபைகள் மூன்று ஆண்டுகளுக்குள் நூறு சதவிகித வளர்ச்சியைக் கண்டிருக்கின்றன. தங்களது பாரம்பரிய ஊழிய முறைகளைக் கொண்டு பத்து ஆண்டுகளில் அவர்களால் இரண்டு சதவிகிதம் மட்டுமே வளர முடிந்தது. ஆனால் எங்களது சபை வளர்ச்சித் திட்டத்தைச் செயல்படுத்தியபோது மூன்று வருடங்களுக்குள் சபைகள் இரு மடங்காகப் பெருகியது அவர்களை வியப்பில் ஆழ்த்தியது. இன்று ஆஸ்திரேலியாவில் தேவசங்க சபைகள் காட்டுத்தீயைப் போன்று வேகமாக வளர்ந்து வருகின்றன.

தற்போது என்னுடைய அறுபது சதவிகித நேரத்தையும் கவனத்தையும் ஜப்பான் மீது நான் பயன்படுத்திக் கொண்டிருக்கிறேன். சபைகளும், மிஷனெரிகளும் ஜப்பானில் ஊழியம் செத்து விட்டது என்று கருதுகிறார்கள். ஜப்பானிலிருக்கும் போதர்கள் மிகவும் சோர்ந்திருக்கிறார்கள். ஒரு சபையில் முப்பது அல்லது நாற்பது விசுவாசிகள் இருந்தால் அந்த சபையின் போதகர் ஒரு பெரிய ஊழியராகக் காணப்படுகிறார். சில ஊழியர்கள் தங்கள் வாழ்நாள் முழுவதிலும் இருபது விசுவாசிகளுக்குமேல் கண்டதில்லை. அவர்கள் தங்கள் குடும்பத்தை நடத்தப் போதுமான வருமானம் சபையிலிருந்து கிடைக்கக் கூடியதாயிருந்தால் அதில் திருப்தியடைந்து விடுகின்றனர். அதன்பின் சுவிசேஷத்தை அறிவிக்க அவர்கள் போராடுவதில்லை.

இரண்டு வருடங்களுக்கு முன்பாக நான் ஜப்பானில் ஒரு கருத்தரங்கை நடத்தி ஜப்பானிய ஊழியர்கள் தங்கள் ஊழியத்தில் இலக்குகளை

நிர்ணயித்து செயல்படும்படி கூறியபோது அவர்கள் "உங்கள் திட்டங்கள் அமெரிக்காவிலோ, ஆஸ்திரேலியாவிலோ அல்லது கொரியாவிலோ செயல்படலாம், ஆனால் ஜப்பானில் செயல்படாது. ஜப்பானில் நூற்றுக்கு அதிகமான விசுவாசிகளைக் கொண்ட சபைகள் வெகு சிலதே. ஐநூறுபேர் கொண்ட சபைதான் ஜப்பானிலேயே பெரிய சபையாகக் கருதப்படுகிறது" என்று கூறினார்கள். நான் என்ன சொன்னாலும் அதை அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை.

பொதுவாக ஜப்பானியர்கள் கொரியர்களை மதிக்க மாட்டார்கள். ஏனெனில் இரண்டாம் உலக யுத்தத்தின் போது முப்பத்தாறு ஆண்டுகளாக ஜப்பானியர்கள் கொரியாவை ஆண்டு வந்தனர். எனவே தங்களை உயர்ந்தவர்களாகவும், கொரியாவைச் சேர்ந்தவர்களைத் தாழ்ந்தவர் களாகவும் ஜப்பானியர்கள் நினைப்பது வழக்கம். எனவே கொரியாவைச் சேர்ந்த என்னுடைய வார்த்தைகளை அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. எனவே "ஜப்பானிலும் சபை வளர்ச்சித் திட்டம் வேலை செய்யும் என்பதை உங்களுக்கு நிரூபித்துக் காண்பிக்கிறேன்" என்று அவர்களிடம் சவாலாகக் கூறினேன்.

எனவே எங்கள் சபையைச் சேர்ந்த முழு நேர ஊழியர்களில் ஒரு சாதாரணப் பெண்ணைத் தெரிந்துகொண்டு, "உன்னை ஜப்பானுக்கு மிஷனெரியாக ஊழியம் செய்யும்படி அனுப்பப்போகிறேன்" என்று கூறியபோது "தேவன் என்னை ஜப்பானுக்குச் சென்று ஊழியம் செய்யும்படி அழைத்திருக்கிறார்" என்று அந்தப் பெண்ணும் கூறியது என்னை ஆச்சரியப்படச் செய்தது.

ஜப்பானியர்கள் மற்ற உலகின் பின் தங்கின நாடுகளில் நடைபெறுவதைப் போலவே பெண்களை ஆண்களுக்கு கீழானவர்களாக நடத்தினர். ஊழியத்தில் பெண்களுக்கு இடமே இல்லை. நான் அந்தப் பெண்ணிடம், "ஜப்பானியர்கள் கொரியர்களை மதிப்பதில்லை. மேலும் நீ பெண் என்பதனால் அதிகமாக உதாசீனம் செய்வார்கள். உனக்கு மிகுந்த சிரமங்கள் இருக்கும். ஆனாலும் ஜப்பானின் தலைநகரமாகிய டோக்கியோ நகரத்திற்கு உன்னை அனுப்புகிறேன். ஐந்து வருடங்களுக்குள் ஆயிரம் விசுவாசிகள் கொண்ட ஒரு சபையை அங்கு நீ உருவாக்க வேண்டும். நீ கற்றுக்கொண்ட சபை வளர்ச்சி விதிகளைக் கடைப்பிடித்து இதைச் சாதிக்க வேண்டும். அப்படிச் செய்யாவிட்டால் நீ கொரியாவிற்கே வரக்கூடாது" என்றும் திட்ட வட்டமாகக் கூறினேன்.

இது இரண்டு வருடங்களுக்கு முன்பாக நடந்தது. ஒரு வருடத்திற்குள் இருநூறு ஆத்துமாக்களைச் சம்பாதிப்பது என்ற இலக்குடன் அந்தப் பெண் ஜப்பானுக்குச் சென்றாள். தனது முதல் ஜெபக்குழுவை ஆரம்பித்து தேவையுள்ள ஜனங்களைத் தேடிச் செல்லத் தொடங்கினாள். நாங்கள் ஏற்கெனவே அறிந்திருந்ததைப்போல பெரும்பாலான ஜப்பானியர்கள் அவளைப் பார்த்துக் கேலியாகச் சிரித்தனர். அவளைப் பார்த்து, "கொரியாவைச் சேர்ந்த, அதுவும் ஒரு பெண் சொல்வதை யார் கேட்பார்கள்?" என்று கூறினார்கள்.

ஆனாலும் நாங்கள் விசுவாசத்துடன் ஜெபித்து வந்தோம். அந்தப் பெண்ணும் உபவாசித்து ஜெபித்தாள். முதல் ஆண்டு முடிந்தவுடன் அந்தப் பெண்ணைச் சந்திக்கும்படியாகவும், சில கூட்டங்கள் நடத்தும்படியாகவும் நான் ஜப்பானுக்குச் சென்றபோது நான் கண்ட காட்சி என்னை மகிழ்ச்சி யடையச் செய்தது. நிர்ணயித்திருந்த குறிக்கோளாகிய இருநூறு விசுவாசிகளுக்கு மேலாக இருநூற்றைம்பது ஜப்பானிய மற்றும் கொரிய விசுவாசிகள் அவளது சபையில் இருந்தனர்.

ஆறு மாதத்திற்கான உதவித்தொகை கொடுத்து நான் அவளை ஜப்பானுக்கு அனுப்பினேன். நான் ஜப்பானுக்குச் சென்றபோது அவள் எங்களது சபையின் கட்டிட நிதிக்காக அவளது சபையிலிருந்து இரண்டாயிரம் டாலர் பணம் கொடுத்தாள். வாடகைக்கு எடுக்கப்பட்டிருந்த ஒரு கட்டிடத்தில் அவள் ஞாயிற்றுக்கிழமைகளில் மூன்று ஆராதனைகள் நடத்தினாள். 1980 ஆம் ஆண்டின் இறுதியில் ஐநூறு ஆத்துமாக்களை எதிர்பார்த்தாள். ஐந்து ஆண்டுகளுக்குள் ஆயிரம் ஆத்துமாக்களைச் சம்பாதித்து விடுவாள் என்பதில் எனக்குச் சந்தேகமில்லை.

நான் அவளது சபையில் பிரசங்கிக்கச் சென்றபோது ஜப்பானிய வியாபாரிகள், பெண்கள், படித்தவர்கள், நாகரீகமானவர்களால் அந்த சபையின் மூன்று ஆராதனைகளும் நிரம்பி வழிந்ததைக் கண்டு மகிழ்ந்தேன். அவர்கள் அதிக உற்சாகமாயிருந்தனர். இப்போது ஜப்பானில் ஊழியர்கள் கருத்தரங்கில் கலந்துகொள்ளச் செல்லும்போது நெஞ்சை நிமிர்த்துக் கொண்டு தைரியமாக, "நீங்கள் இலக்குகளை நிர்ணயித்து செயல்படுவது கூடாத காரியம் என்று கூறிய அதே ஜப்பானில், ஒரே வருடத்தில் ஒரு பெண்ணால், அதுவும் கொரியாவைச் சேர்ந்த பெண்ணால் சாதிக்க முடிந்திருக்கிறது. டோக்கியோ நகரத்திலேயே ஒரு வருடத்திற்குள் இரு நூற்றைம்பது விசுவாசிகள் கொண்ட சபையை அவளால் கட்ட

ஏற்படுத்தியிருக்கின்றது. அது டீ. எல்லிங்டனின் (மிகப்) பெரிய சபைகளில் ஒன்றாக மாறியிருப்பதற்கு உங்களுக்கு வெகுமதி" என்று கூறினேன். நான் கூறியது உண்மையாகையால் அங்கிருந்தவர்களும் தலைகளைக் குனிந்து கொண்டனர்.

இப்போது எங்கள் சபையிலிருந்து சென்ற அந்தப் பெண் மிஷனெரியின் ஊழியத்தின் காரணமாக ஜப்பானிய சபைகளில் நெருப்பு பற்றியிருக்கிறது. பெண்கள் இப்படிப்பட்ட காரியங்களைச் செய்ய முடியுமானால், ஆண்களால் இன்னும் பெரிய காரியங்களைச் செய்ய முடியும் என்று ஜப்பானியர்கள் உணரத் தொடங்கினார்கள்.

நாம் உலகத்தின் எந்தப் பகுதிக்கும் மிஷனெரியை அனுப்பி வீட்டு ஜெபக்குழுத் திட்டத்தின் மூலமாக சபையை ஆரம்பிக்க முடியும். அந்த மிஷனெரி தேவையோடிருப்பவர்களைச் சந்தித்து அவர்கள்மீது அன்பு செலுத்தி அவர்களுக்கு நல்ல ஆலோசனைகள் கூறி ஜெபிப்பதன் மூலம் ஒரு ஜெபக்குழுவை ஆரம்பித்து, அந்த ஜெபக்குழு வளரும்போது அதைப்பிரித்து இப்படியாக சபையை ஸ்தாபித்து விடுவார்.

கொரியாவில் இந்தத் திட்டம் மிகச் சிறப்பாகச் செயல்படுகிறது. எங்களது சபையின் பத்தாயிரம் ஜெபக்குழுக்களுடன் கொரிய முழுவதிலும் எங்களது சபையிலிருந்து அனுப்பப்பட்ட மிஷனெரிகளால் ஐம்பத்தைந்து சபைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இப்போது அவைகள் தேவசங்க சபை ஸ்தாபனத்தின் சுயபூர்த்தியுள்ள சபைகளால் இயங்கி வருகின்றன. அந்த சபைகள் எல்லாம் வீட்டு ஜெபக்குழுத் திட்டத்தின் மூலமே வளர்ந்து வருகின்றன.

மேலும் உலகம் முழுவதிலும் எங்களது மிஷனெரிகளால் சபை ஆரம்பிக்கப்பட்டு வருகின்றன. கொரியாவிற்கு வெளியே ஏறத்தாழ ஐம்பது சபைகள் உருவாக்கப்பட்டுள்ளன. வட அமெரிக்காவிலும், தென் அமெரிக்கா விலும் மட்டுமே நாற்பதிற்கும் மேற்பட்ட சபைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. நியூயார்க் நகரத்திலுள்ள சபையில் ஐநூறுக்கும் அதிகமான விசுவாசிகள் உள்ளனர். ஐரோப்பாவில் பத்து சபைகளை ஆரம்பித்துள்ளோம்.

இந்த இடங்களிலெல்லாம் அங்கு குடியேறிய கொரியர்களின் தேவைகளுக்காகவே ஆரம்பத்தில் சபைகள் ஆரம்பிக்கப்பட்டன. அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும், ஐரோப்பாவிலும், தென் அமெரிக்காவிலும் குடியேறியிருக்கும் எங்களது சபையின் அங்கத்தினர்களது விருப்பத்தின்படி அவர்களுக்காகவே மிஷனெரிகள் அனுப்பப்பட்டு சபைகள் ஸ்தாபிக்கப் பட்டன. வேதாகமப் பள்ளியில் பயின்றுதேறிய, அபிஷேகம் பண்ணப்பட்ட

எங்களது சபையின் ஊழியர்களையே மிஷனெரிகளாக அனுப்பினோம். ஊழியங்களுக்கு அனுப்பப்படுவதற்கு முன்பாக குறைந்தது மூன்று ஆண்டு களாக ஊழியம் செய்து அனுபவம் பெற்று மிஷனெரியாக அழைக்கப் பட்டவர்களையே தெரிந்துகொண்டு, அவர்களுக்கு மாதாந்திர ஊதியம் அளித்து, அவர்களைச் சபைகளை உருவாக்க அனுப்புகிறோம். ஆறு மாதங்களுக்கு மட்டுமே ஊதியம் கொடுக்கிறோம்.

ஆறு மாதங்களுக்குள்ளாகவே அந்த மிஷனெரிகள் சுயபூர்த்தி யுள்ளவர்களாக மாறி விடுகிறார்கள். மேற்கத்திய சபைகளும், ஸ்தாபனங் களும் செய்வதைப்போல நாங்கள் முடிவில்லாமல் தொடர்ந்து பண உதவிசெய்ய வேண்டியிருப்பதில்லை. உள்ளூர் விசுவாசிகளே சபையின் எல்லாத் தேவைகளையும், மிஷனெரியின் தேவைகளையும் சந்திக்கிறார்கள்.

அற்புத சபை!

நான் ஏற்கெனவே தெளிவுபடுத்தியதைப் போலவே இலக்குகளை நிர்ணயித்துச் செயல்படுவதன் மூலமும், வீட்டு ஜெபக்குழுத் திட்டத்தின் மூலமாகவுமே எங்களது சபை வளர்ந்திருக்கிறது. நாங்கள் ஒவ்வொரு முறை இலக்குகளை நிர்ணயிக்கும்போது அதைவிட அதிகமான ஆத்துமாக் களையே பெற்றிருக்கிறோம். 1980 ஆம் ஆண்டின் துவக்கத்தில் எங்களது பூரண சுவிசேஷ மத்திய சபையில் ஒரு லட்சம் விசுவாசிகள் இருந்தனர். கொரியாவில் கிறிஸ்தவம் தொடங்கி நூறாண்டுகள் நிறைவாகும் 1984ஆம் ஆண்டிற்குள் ஐந்து லட்சம் விசுவாசிகளைப் பெறவேண்டுமென்ற குறிக் கோளை நான் நிர்ணயித்திருக்கிறேன்.

1984 ஆம் ஆண்டிற்குள் ஐந்து லட்சம் விசுவாசிகளைப் பெற வேண்டும் என்ற இலக்கை நான் நிர்ணயித்திருப்பதைக் கேள்விப்பட்ட பலர் என்னிடம், "மாபெரும் சுவிசேஷக் கூட்டங்களை நடத்தப்போகிறீர்களா? ஒவ்வொரு நகரத்திலும் ஆத்தும ஆதாயத்திட்டம் எதையாவது செயல்படுத்தப் போகிறீர்களா?" என்று கேட்டனர். முற்றிலும் வித்தியாசமான ஊழியத் திட்டம் என்னிடம் இருக்கும்போது மேலே சொல்லப்பட்ட எந்தத் திட்டத்தையும் செயல்படுத்த எனக்கு அவசியமே இல்லை. வேத வசனத்தின் படியான ஊழியத்தைப்பற்றி நான் அறியாதிருந்த நாட்களில் விசேஷித்த பிரசங்கியார்களைக் கொண்டு பெரிய கூட்டங்கள் நடத்துவதுதான் ஆத்துமாக்களைச் சம்பாதிக்கும் ஒரே வழி என்று நான் நினைத்தேன். ஆனால் வீட்டு ஜெபக்குழுத் திட்டத்தைத் தவிர இப்போது வேறெந்தத் திட்டமும் எங்களுக்குத் தேவையில்லை. ஒவ்வொருநாளும் எவ்விதக் கடின முயற்சியுமின்றி நாங்கள் எழுப்புதலைச் சந்தித்து வருகிறோம். அல்லேலூயா!

எங்கள் சபையில் உண்டாயிருக்கும் எழுப்புதலைப் பற்றி விளக்க 1980–ஆம் ஆண்டு ஜூன் மாதத்தை நான் நினைவுபடுத்திப் பார்க்கிறேன். அப்போது எங்கள் சபையில் ஒரு லட்சத்து இருபதாயிரம் விசுவாசிகளும் எட்டாயிரம் வீட்டு ஜெபக்குழுக்களும் இருந்தன. அதற்கு ஆறு மாதங்களுக்கு முன்பு தான் அந்த வருடத்தில் முப்பதாயிரம் ஆத்துமாக்கள் என்ற இலக்கை ஐம்பதினாயிரமாக உயர்த்தினோம்.

நான் எங்களது ஜெபக்குழுத் தலைவர்களிடம் மீதமுள்ள ஆறு மாதங்களில் ஒவ்வொரு ஜெபக்குழுவும் ஒரே ஒரு குடும்பத்தை கிறிஸ்துவுக்குள் கொண்டுவந்தால் போதும் என்று கூற வேண்டியதாயிற்று. எட்டாயிரம் ஜெபக்குழுக்களும் சராசரியாக நான்கு அங்கத்தினர்கள் கொண்ட ஒரு குடும்பத்தை ஆதாயம் செய்தாலும் முப்பத்து இரண்டாயிரம் புதிய விசுவாசிகள் சபைக்கு வந்து விடுவார்கள்.

இதுதான் எழுப்புதல், விளம்பரங்கள் இல்லாமல், கட்டாயமில்லாமல், ஆடம்பரம் எதுவுமில்லாமல் ஒரு வருடத்திற்குள் ஐம்பத்து இரண்டாயிரம் விசுவாசிகள் சபைக்கு கிடைத்தனர். ஜெபக்குழுத் தலைவர்களை நான் உற்சாகப்படுத்துகிறேன். அவ்வளவுதான். ஒவ்வொரு ஜெபக்குழுவும் ஒரே ஒரு குடும்பத்தைக் கிறிஸ்துவுக்குள் நடத்துவது மிக எளிது. ஒரு ஜெபக்குழுவிலிருக்கும் பத்து அல்லது பதினைந்து குடும்பங்களும் சேர்ந்து தங்களது பகுதியிலிருக்கும் ஒரு இரட்சிக்கப்படாத குடும்பத்தைத் தெரிந்து கொண்டு அவர்களுக்காக ஜெபிக்கிறார்கள். அவர்களுக்கு இயேசு கிறிஸ்துவைக் குறித்துக் கூறுகிறார்கள். பல ஜெபக்குழுக்கள் இரண்டு அல்லது மூன்று குடும்பங்களைக்கூட கிறிஸ்துவுக்குள் நடத்தி விடுகிறார்கள்.

1980 ஆம் ஆண்டின் இறுதியில் எவ்வாறு எங்கள் சபையில் பத்தாயிரம் ஜெபக்குழுக்களும், ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் விசுவாசிகளும் இருந்தார்கள் என்பதை எளிதாகப் புரிந்து கொண்டிருந்திருப்பீர்கள். இப்போது 1981-ஆம் ஆண்டில் ஒவ்வொரு ஜெபக்குழுவும் நான்கு குடும்பங்களைக் கிறிஸ்துவுக்குள் கொண்டுவர வேண்டுமென்ற இலக்கை நிர்ணயித்திருக்கிறேன். அதாவது முதல் ஆறு மாதங்களில் எண்பதாயிரம் ஆத்துமாக்களும் அடுத்த ஆறு மாதங்களில் எண்பதாயிரம் ஆத்துமாக்களுமாக ஒரு லட்சத்து அறுபதாயிரம் ஆத்துமாக்களைச் சம்பாதிக்கப் போகிறோம். எனவே இவ்வாண்டின் இறுதியில் மூன்று லட்சத்துப் பத்தாயிரம் விசுவாசிகள் எங்கள் சபையில் இருப்பார்கள். ஆகவே எந்தவிதக் கஷ்டமோ, தொலைக்காட்சி விளம்பரங்களோ, கைப்பிரதிகள் விநியோகிப்பதோ இல்லாமல் மனிதர்கள் மனிதர்களைச் சந்திப்பதின் மூலம் 1984 ஆம் ஆண்டிற்குள் மிக எளிதாக எங்களது சபையில் ஐந்துலட்சம் விசுவாசிகள் சேர்ந்து விடுவார்கள்.

இத்திட்டத்தின் மூலமாக சபையின் வளர்ச்சிக்கு அளவே இல்லை. இன்று அநேக சபைகள் ஐநூறு அல்லது ஆயிரம் ஆத்துமாக்கள் கிடைத்தவுடன் திருப்தியடைந்து விடுகிறார்கள். இனி இரட்சிப்பிற்குள் நடத்துவதற்கு ஆட்களே இல்லை என்பதினாலல்ல; இருக்கும் நிலையில் திருப்தியடைந்து

சுவிசேஷம் அறிவிக்கும் தரிசனத்தை இழந்து விடுவதே காரணமாகும். அப்போது பரிசுத்த ஆவியானவரின் கிரியை இல்லாமல் போய்விடுகிறது.

ஆனால் வீட்டு ஜெபக்குழுக்கள் மூலமாக எல்லாவிதப் பிரச்சனைகளையும் ஜெயித்து சபையானது தொடர்ந்து வளருகிறது. மத்திய கிழக்கு நாடுகளில் ஏற்பட்டிருக்கும் குழப்பங்கள் காரணமாக இப்போது எங்கள் நாட்டில் பெட்ரோல் பஞ்சம் உண்டாகியிருக்கிறது. ஓரிடத்தில் எரிபொருள் பஞ்சம் உண்டாகி, அதனால் போக்குவரத்து தடைப்படுமானால் சபைகள் அருகிலிருந்தாலன்றி தூர இடத்திலுள்ள சபைகளுக்கு விசுவாசிகள் வருவது மிகவும் குறையும். ஆனால் எங்களது சபையில் அப்படிப்பட்ட பாதிப்பு இராது. ஏனெனில் ஞாயிற்றுக்கிழமைகளில் சபைக்கு வர முடியாத அளவிற்கு போக்குவரத்து வசதிகள் பாதிக்கப்பட்டாலும் வார நாட்களில் தங்களது வீட்டிற்கு அருகிலேயே இருக்கும் ஜெபக்குழுவில் சபையில் அவர்கள் பெறக்கூடிய எல்லா ஆசீர்வாதங்களையும் பெற முடியும். அல்லது ஒரு குறிப்பிட்ட வட்டாரத்திலுள்ள ஜெபக்குழுக்கள் எல்லாம் ஒன்று கூடி வட்டாரக் கண்காணிப்புப் போதகரைக்கொண்டு ஆராதனை நடத்த முடியும். அங்கு அவர்கள் காணிக்கை எடுத்து தலைமைச் சபைக்கு அனுப்பி வைப்பார்கள். எரிபொருள் பற்றாக்குறை வெகுகாலத்திற்கு நீடித்தாலும் என்னுடைய செய்திகளை வீடியோ எடுத்து வட்டார ஆராதனைக் கூட்டங்களில் காண்பிக்கப்பட முடியும்.

கொரியாவில் எப்போதாவது யுத்தம் உண்டாகி கம்யூனிஸ்ட்டுகள் நாட்டைக் கைப்பற்றினால் அவர்கள் செய்யக்கூடிய முதலாவது காரியம் சபைகளை மூடி பாஸ்டர்களைக் கொலை செய்வதாகத்தான் இருக்கும். நான் என்னையே அஸ்திபாரமாக வைத்து என்னுடைய சபையைக் கட்டியிருந்தால், எங்கள் தேசம் அதிகாரத்தை இழந்துவிடும். அந்த நிமிடமே, என்னுடைய சபையும் அழிந்து விடும். ஆனால் எங்களது சபையின் அமைப்பு வித்தியாசமானதால் எங்களது சபையை கம்யூனிஸ்ட்டுகள் ஒரு நாளும் அழிக்க முடியாது. ஒருவேளை கம்யூனிஸ்ட்டுகள் என்னைக்கொன்று சபையை இடித்து தகர்த்து விட்டாலும், அல்லது சில நூறு ஜெபக்குழுத் தலைவர்களைத் தேடிக்கண்டுபிடித்து கொலை செய்துவிட்டாலும், பத்தாயிரம் ஜெபக்குழுத் தலைவர்களையும் அவர்களால் கண்டுபிடிப்பது முடியாத காரியம். எனவே, சபை இரகசியமாகக் கூடும். ஒரு நாளும் அது அழியாது.

சீனாவிலிருக்கும் சபை இவ்விதமாகவே இன்றுவரை நிலைத்திருக்கிறது. என்னுடைய வானொலி ஊழியத்தின் காரணமாக சீனாவைப் பற்றிய அதிக

விவரங்கள் எனக்குக் கிடைத்துள்ளன. சீனாவில் ஒரு சில அங்கீகாரம் பெற்ற சபைகளே இருக்கின்றன. அவைகளும் கம்யூனிஸ்ட் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிற்குள் இருக்கின்றன. அந்த சபைகளில் போதகர்கள் பூரணமான சத்தியத்தைப் பிரசங்கிக்க முடியாது. ஆனால் உண்மையில் சீன சபைகளுக்கு கண்களுக்குக் காணப்படும் கட்டிடங்களில்லை.

சீனதேசம் முழுவதிலும் ஆயிரக்கணக்கான வீட்டு ஜெபக்குழு சபைகள் இயங்கி வருகின்றன. எங்களது சபையின் ஜெபக்குழுக்களைப் போன்றே அவைகளும் இயங்குகின்றன. நீங்கள் அந்த ஜெபக் குழுக்களின் உறுப்பினர் களைச் சாதாரணமாகக் கண்டுபிடித்துவிட முடியாது. அறிமுகமில்லாத புதியவர்களுக்கு தங்களைச் சாதாரணமாக அவர்கள் வெளிப்படுத்திக் கொள்ளமாட்டார்கள். மத்தியஸ்தர்கள் மூலமாகவே அவர்களோடு தொடர்பு கொள்ள முடியும். ஆனால் உங்களை அறிந்து கொண்டபின் உங்களை அன்புடன் வரவேற்பார்கள். ஜெபக்குழுக்கள் இருப்பதை நானறிவேன். சில ஜெபக்குழுக்களில் ஐநூறுக்கும் அதிகமானோர் இருக்கிறார்கள்.

நான் ஹாங்காங்கில் முதன்முதலாக சீனக் கிறிஸ்தவர்களைச் சந்தித்த போது அவர்கள் வேதாகமம் மற்றும் ஒலிநாடாக்கள், டேப்ரெக்கார்டர்கள் வேண்டுமெனக் கேட்டார்கள். பின்பு என்னிடம் "நாங்கள், சீனாவில் அனுபவிப்பதைப் போன்ற பரிசுத்த ஆவியானவரின் பூரண ஆசீர்வாதங்களை உலகின் மற்ற இடங்களிலுள்ள கிறிஸ்தவர்கள் அனுபவிக்கின்றனரா?" என்று கேட்டார்கள்.

பெரும்பாலான சீன சபைகள் முற்றிலும் பரிசுத்த ஆவியானவராலேயே ஆரம்பிக்கப்பட்டவை. கம்யூனிஸ்ட் அரசாங்கம் தனது முப்பத்தைந்து வருட ஆட்சியில் கிறிஸ்தவத்தை பொது வாழ்விலிருந்து அகற்றி விட்டபடியால் ஒரு மிஷனெரியையும் சீனக்கிறிஸ்தவர்கள் பார்த்ததோ அல்லது அவர்களது பிரசங்கங்களைக் கேட்டதோ இல்லை. பெரும்பாலான கிறிஸ்தவர்கள் முப்பத்தைந்து வயதிற்குட்பட்டவர்கள்.

சீன ஜெபக்குழு சபைகளைப் பற்றி நான் அறிந்துகொண்ட இன்னொரு காரியம் என்னவென்றால் 99 சதவிகித ஜெபக்குழுத் தலைவர்கள் பெண்களே என்பதாகும். ஆண்கள் தங்களைக் கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக் கொள்ளவே பயப்படும் நிலையிலிருப்பதால், பெண்களே துணிவாக தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொள்கின்றனர்.

சீன சபைகள் ஒரு தலைமைச் சபையோ அல்லது ஒரு பயிற்சி பெற்ற ஊழியர்களோ, மிஷனெரிகளோ, ஸ்தாபனங்களோ இல்லாமல் வெற்றி

கரமாக வளர்ந்துகொண்டிருக்கிறது. ஒரு ஜெபக்குழுவிலிருந்து இன்னொரு ஜெபக்குழுவிற்கு உயிரளிக்கப்படுகிறது. இந்தக் கடைசி நாட்களில் வீட்டு ஜெபக்குழுக்களே சபைகளுக்கு ஒரே வழி என்பதை சீன சபையாரின் அனுபவம் விளக்குகிறது.

பொருளாதார நெருக்கடியான இக்காலத்தில் பூரண சுவிசேஷ மத்திய சபை போன்ற பெரிய சபையால் ஏழை விசுவாசிகளை எவ்வாறு கவனிக்க முடியும்? இதற்கும் ஜெபக்குழுக்களே பதில். ஜெபக் குழுக்களில் விசுவாசிகள் ஒருவரை ஒருவர் சகோதரர்களாகவே நினைக்கிறார்கள். யாராவது ஒருவர் வேலையில்லாதிருந்தால் மற்றவர்கள் அவரது பொருளாதாரத் தேவைகளைச் சந்திக்கிறார்கள். எங்களது ஜெபக்குழு உறுப்பினர்கள் வார்த்தைகளில் மட்டும் அன்பைக் காண்பிக்காமல் செயலிலும் காட்டுகிறார்கள். கஷ்டப்படும் ஒரு சகோதரன் அல்லது சகோதரியின் தேவையைச் சந்திக்கத் தங்கள் தேவைகளையும் தியாகம் செய்கிறார்கள். அப்போஸ்தலர் காலச் சபையில் தங்களது ஆஸ்திகளைப் பகிர்ந்து கொண்டதைப் போலவே தங்களது பொருட்களை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்கின்றனர்.

எங்களது ஜெபக்குழுக்களில் உறுப்பினர்கள் ஒருவர் மீது மற்றவர்கள் செலுத்தும் அன்பையும், அக்கறையையும் காணும் புறஜாதிகள் ஜெபக்குழுக்களுக்கு கவர்ந்திழுக்கப்படுகின்றனர். ஜெபக் குழுக்களில் தங்களுக்கு அதிகமான அன்பும், அரவணைப்பும் கிடைப்பதால் அதை விட்டு வெளியேற ஒருவரும் ஒரு போதும் விரும்புவதில்லை.

நான் ஏற்கெனவே சொன்னதுபோல வீட்டு ஜெபக்குழுத் திட்டமானது எந்தத் தனி மனிதனையும் சார்ந்திருக்கவில்லை. எங்களது சபையில் அது என்னைச் சார்ந்திருக்கவில்லை. பரிசுத்த ஆவியானவரே ஜெபக்குழுத் தலைவர்களுக்கு வேண்டிய பெலனைக் கொடுப்பதால் அவரையே இத்திட்டம் முழுவதும் சார்ந்திருக்கிறது. ஒருவேளை நான் இந்தச் சபையிலிருந்து பிரிந்து தனியாகப் போனாலும் ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் விசுவாசிகளில் மூவாயிரம் விசுவாசிகள்கூட என்னோடு வருவார்களா என்பது சந்தேகமே. விசுவாசிகள் என்னையல்ல, பரிசுத்த ஆவியானவரையும், சக விசுவாசிகளையுமே சார்ந்திருக்கிறார்கள்.

பணவீக்கமோ, எரிபொருள் தட்டுப்பாடோ அல்லது உபத்திரவமோ எதுவும் என்னுடைய சபையைப் பாதிக்க முடியாது. நான் காண்பித்த விதிமுறைகளை என்னுடைய சபையார் கடைப்பிடிக்குமளவும் என்னுடைய சபையானது வளர்ந்து கொண்டேயிருக்கும்.

அத்தியாயம் 9

அன்புடன் இணைந்த அதிகாரம்!

நான் சபையை ஆரம்பித்தபோது கொரியாவிலுள்ள தேவ சங்க சபையின் (Assembly of God Church) ஒரு சபையாகவே ஒரு சிறு கூடாரத்தில் ஆரம்பித்தேன். இன்று உலகத்தின் மிகப்பெரிய சபையாக எங்களது சபை வளர்ந்திருக்கிறது. தேவ சங்க சபை என்னும் ஸ்தாபனத்தின் சட்ட திட்டங்களுக்குட்பட்டே நாங்கள் இந்த அளவிற்கு வளர்ந்திருக்கிறோம்.

என்னுடைய சபையைக் குறித்து இங்கும், மற்ற இடங்களிலும் நான் கொடுத்திருக்கும் விவரங்களிலிருந்து நானாக ஒரு ஸ்தாபனத்தை உருவாக்க முயற்சிக்கிறேனோ என்றோ அல்லது என்னுடையத் திட்டங்கள் நான் இருக்கும் ஸ்தாபனத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது தானோ என்ற சந்தேகம் சிலருக்கு உண்டாகலாம். ஆனால் எங்களுக்குள் பிரிவோ அல்லது ஏற்றுக்கொள்ளாத நிலையோ இல்லை என்பதை மகிழ்ச்சியுடன் கூறிக்கொள்கிறேன். என்னுடைய வீட்டு ஜெபக்குழுத் திட்டம் தனிப்பட்ட சபையிலும், பெரிய ஸ்தாபனங்களிலும் பலனளிக்கும் என்பதைத் தெளிவு படுத்துகிறேன்.

கடந்த காலங்களில் சபைகள் மற்றும் ஸ்தாபனங்களின் கட்டுப் பாட்டிற்குள் இல்லாத பல ஜெபக்குழுக்கள் உருவாயின. கடந்த இருப தாண்டுகளாகப் பரிசுத்த ஆவியானவரது அசைவாடுதலால் சபைகளில் உண்டான எழுப்புதல் காரணமாக பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றுக் கொண்டவர்கள் தங்களது சொந்த சபையிலேயே தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டால், அப்படிப்பட்டவர்கள் பெந்தெகொஸ்தே சபைகளுடனும், இப்படிப்பட்ட ஜெபக்குழுக்களுடனும் ஐக்கியம் கொள்ளத்துவங்கினர்.

இப்படிப்பட்ட ஜெபக்குழுக்களில் சில தங்களது தலைமைச் சபைகளின் அதிகாரத்திற்குக் கீழ்ப்படியாமல் சபைகளுடன் மோதத்தொடங்கின. தங்கள் சொந்த சபையின் போதகர்களுக்குக் கீழ்ப்படிவதைவிட ஜெபக்குழுக்களின் தலைவர்களுக்கே கீழ்ப்படிந்தனர். இப்படியாக மேய்ப்பர்கள், விசுவாசிகள் போராட்டம் உருவாகத் தொடங்கிற்று. சில இடங்களில் இப்படிப்பட்ட சுயாதீன ஜெபக்குழுக்கள் தங்களது உறுப்பினர்களை அடிமைகளாக நடத்தின. அந்த ஜெபக்குழுக்களின் தலைவர்கள் அனுமதியின்றி எந்தத்

தீர்மானமும் எடுக்க முடியாது. யாரைத் திருமணம் செய்ய வேண்டும், அவிசுவாசிகளாகிய பெற்றோருடன் தொடர்பு வைத்துக் கொள்ளலாமா, கூடாதா என்பதிலிருந்து தனிப்பட்ட வாழ்க்கையின் எல்லாப் பகுதிகளிலும் தங்கள் ஜெபக்குழுவினரைக் கட்டுப்படுத்தத் தொடங்கினர். அதனால் பரிசுத்த ஆவியானவருக்குச் செவி கொடுத்து அவரது ஆலோசனைப்படி நடக்க விசுவாசிகளுக்கு வாய்ப்பில்லாமல் போயிற்று. சில ஜெபக்குழுக்கள் தவறான உபதேசங்களைப் போதிக்குமிடங்களாகவும் மாறின. இதனால் பலரது வாழ்க்கையும் உறவும் பாழாயிற்று. சுயாதீனமான ஜெபக்குழுக்கள் எல்லாம் இப்படித்தான் இருக்கும் என்று நான் கூறவில்லை. பல ஜெபக்குழுக்கள் சுயாதீனமாக இயங்கினாலும், தங்களது சபையின் சட்ட திட்டங்களுக்குக் கீழ்ப்படிந்து நல்ல ஐக்கியத்தை வளர்த்து வந்திருக்கின்றன என்பதை நான் அறிந்திருக்கிறேன். சில சுயாதீன ஜெபக்குழுக்கள் பிற்காலத்தில் நல்ல ஆவிக்குரிய சபைகளாக மாறியிருக்கின்றன. ஒரு சில ஜெபக்குழுக்களோ சிதறிப் போயின.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் கள்ள உபதேசங்களைத் தடுப்பது எப்படி என்பது எனக்குத் தெரியவில்லை. வேதமே கள்ள உபதேசங்களைத் தடுப்பதைப் பற்றி எதுவும் கூறவில்லை. ஏனெனில் அப்போஸ்தலனாகிய பவுலின் காலத்திலேயே பல கள்ள உபதேசங்கள் போதிக்கப்பட்டுள்ளன. ஜெபக்குழுவின் தலைவரையும், சூழ்நிலைகளையும் பொறுத்தே இவைகள் ஏற்படுகின்றன. தவறான ஐக்கியம் சபையில் குழப்பத்தைக் கொண்டு வந்துவிடும். எனவேதான் அதிகாரத்திலிருக்கும் தலைவர்கள் ஒரு ஸ்தாபனம் அல்லது தங்களது சபைக்கு வெளியேயுள்ள மற்ற சபைகளின் போதகர்களின் ஐக்கியத்தின் அதிகாரத்திற்குக் கீழ்ப்படிகிறவர்களாயிருக்க வேண்டும்.

எனது வீட்டு ஜெபக்குழுத் திட்டமும், பூரண சுவிசேஷ மத்திய சபையும், தேவ சங்க சபையின் அதிகாரத்திற்குக் கட்டுப்பட்டே இயங்குகின்றன. நான் இப்பொழுதும் கொரியாவில் தேவ சங்க சபை பொது மேற்பார்வையாளரின் கட்டுப்பாட்டிற்குள் இருக்கிறேன். எங்களுக்குள் கருத்து வேற்றுமைகள் இருந்தாலும் எங்களுக்குள் நல்ல உறவு இருக்கிறது. ஒருவரை ஒருவர் கனம் பண்ணக்கூடிய ஐக்கியத்தை உடையவர்களாகவே இருக்கிறோம். எங்களது குறிக்கோள் ஐக்கியமே. என்னிடம் பலர் தேவ சங்க சபையிலிருந்து வெளியேறி சுயாதீன சபையாக மாறும்படி அவ்வப்போது கூறிவந்திருக்கின்றனர். ஸ்தாபனத்திலிருந்து விலகிவிட்டால் எவ்வித கட்டுப்பாடுமின்றி சுதந்திரமாக ஊழியம் செய்யலாம் என்ற ஆலோசனை பலரிடமிருந்து

எனக்கு வந்திருக்கிறது. ஆனால் ஐக்கியத்தின் அவசியத்தை நான் உணர்ந்திருக்கிறபடியால் பிரிந்துபோகும் எண்ணத்திற்கு என் மனதில் கடுகளவும் இடங்கொடுத்ததே இல்லை. கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் ஐக்கியம் வளர வேண்டும். சபையைப் பிரிக்க முயற்சிக்கும் எந்தவித சக்திக்கும் நாம் சிறிதும் இடங்கொடுக்கக்கூடாது என்பதே என்னுடைய விசுவாசம்.

ஒரு உள்ளூர் சபை தனது ஸ்தாபனத்திலிருந்து பிரியும்போது அது சபையாருக்கு முன்பாகவும், உலக ஜனங்களுக்கு முன்பாகவும், தவறான மாதிரியை உருவாக்குகிறது. அப்படிச் செய்யும்போது நாம் பிரசங்கிக்கும் அன்பை நாம் கடைப்பிடிப்பதில்லை என்று உலகத்தார் எண்ணும் நிலை உருவாகிறது. இதையெல்லாம் எண்ணியே நான் என்னைத் தாழ்த்துகிறேன். ஸ்தாபனத்தில் எனக்குரிய மரியாதை எனக்குக் கிடைக்க வேண்டும். அவர்களது அன்பும், அன்பான கடிந்துகொள்ளுதலும் எனக்குத் தேவை. நானும் எனது சபையும், எனது சபையின் பொருளாதார வரவுசெலவுக் கணக்குகளும் அவர்களது ஆய்வுக்குட்பட்டிருக்க வேண்டும். சந்தேக முண்டாக்கும்படியான இரகசியமான காரியம் எதுவும் எனது சபையில் கிடையாது. எனவே என்னுடைய ஸ்தானத்தில் நான் தைரியமா யிருக்கிறேன்.

எனவே சபை மூப்பர்கள் மற்றும் ஸ்தாபன நிர்வாகிகளது ஒப்புதலுடன் எல்லா ஸ்தாபனங்களின், எல்லா சபைகளிலும், வீட்டு ஜெபக்குழுக்கள் அமைக்கப்பட வேண்டும். வீட்டு ஜெபக்குழுக்கள் சபையின் முழு கட்டுப் பாட்டிற்குள் சபையின் ஊழியத்தின் ஒரு பகுதியாகவே இயங்க வேண்டும். நாம் நம்முடைய சபையின் அங்கத்தினர்களை சீஷர்களாக்க வேண்டு மேயன்றி மற்ற சபையின் அங்கத்தினர்களை சீஷர்களாக்க முயற்சிக்கக் கூடாது.

சுயாதீனமான வீட்டு ஜெபக்குழுக்கள் ஒருவிதத்தில் ஆடுகளைத் திருடும் வழியாக மாறிவிடுகிறது. எந்த தரமான போதகரும் இதை விரும்பமாட்டார். அது அநாகரீகமானது. எங்களது சபையின் விசுவாசிகள் வீட்டு ஜெபக்குழுக்களுக்கு மற்ற சபைகளின் விசுவாசிகளை அழைக்கக் கூடாது. சமாதானமின்றி பிரச்சனைகளுடன் தவிக்கும் அவிசுவாசிகளையே அழைக்க வேண்டுமென்று நான் கண்டிப்பாகக் கூறியிருக்கிறேன். ஒரு சபை அல்லது ஸ்தாபனத்திலிருந்து இன்னொரு சபைகளின் அல்லது ஸ்தாபனத்திற்கு விசுவாசிகளைக் கொண்டு வருவதை நான் விரும்புவ

தில்லை. ஆனால் தங்களது சபை ஆவிக்குரிய தேவைகளைச் சந்திக்க வில்லை என்று எண்ணித் தாங்களாகவே, எங்களது சபையை அல்லது எங்களது ஜெபக்குழுவைத் தேடி வருகிறவர்களை நாங்கள் தடுக்க முடியாது. கொரியாவில் மக்கள் தாங்கள் கிறிஸ்தவர்கள் என்று காண்பிப்பதற்காக தங்கள் வீட்டுக் கதவுகளில் சிவப்பு சிலுவை அடையாளம் வைத்திருப்பார்கள். எங்களது விசுவாசிகள் அப்படிப்பட்ட அடையாளத்தைக் காணும்போது அந்த வீட்டிலிருப்பவர்கள் வேறொரு சபையைச் சேர்ந்த தங்களது சகோதர, சகோதரிகளே என்றறிந்து அந்த வீட்டைக் கடந்து போகிறார்கள்.

கிறிஸ்தவத்தின் பெலன் உள்ளூர் சபைக்குள்தான் இருக்கிறது. வீட்டு ஜெபக்குழுக்கள் சபையின் பெலனுக்கு மேலும் வலுவூட்டுகின்றன. உள்ளூர் சபையின் பெலனைக் குறைக்க முயற்சிக்கும் எந்த சக்தியையும் நாம் தவிர்க்க வேண்டும். உள்ளூர் சபையின் பணத்தையும் ஆத்துமாக்களையும் எடுத்துக் கொள்ளும் இப்படிப்பட்ட சபைக்கு வெளியேயான ஊழியங்களை நாம் நிராகரிக்க வேண்டும். சபைக்கு வெளியே செய்யப்படும் ஊழியங்கள் சபையை பெலப்படுத்துவதாகவும், சபையின் வளர்ச்சிக்கு உதவுவதாகவும் இருந்தால் அதை தாங்க வேண்டும். ஆனால் சபைக்கு இடையூறாயிருந்தால் அதை நிராகரிக்க வேண்டும். உள்ளூர் சபையே கிறிஸ்தவத்தையும், விசுவாசத்தையும் பாதுகாக்க முடியும்.

எங்களது சபையில் நிர்வாக அமைப்புகள் சற்று கடுமையாக இருந்தாலும், எங்களது சபை விசுவாசிகள் பரிபூரண சுதந்தரத்துடன் இயங்குகிறார்கள். ஆனால் சுயாதீன ஜெபக்குழுக்களின் தலைவர்கள் தங்களது அங்கத்தினர்கள் மீது அளவுக்கு அதிகமான கட்டுப்பாடுகளை விதிக்கிறார்கள். அது தவறு. எங்களது ஜெபக்குழுத் தலைவர்கள் தங்கள் உறுப்பினர்களின் ஆவிக்குரிய வளர்ச்சிக்கு உதவவும், அதைக் கண்காணித்து ஊழியத்தில் அவர்களை உற்சாகப்படுத்தவும் மட்டுமே பணியாற்றுகிறார்கள். ஆனால் உறுப்பினர்களது தனிப்பட்ட வாழ்க்கையில் குறுக்கிட்டு அவர்களைக் கட்டுப்படுத்த ஜெபக்குழுத் தலைவர்களுக்கு ஒருபோதும் நான் அனுமதி கொடுப்பதில்லை. அது சபையின் வேலையல்ல.

பரிசுத்த ஆவியானவரைச் சார்ந்து விசுவாச வாழ்க்கை வாழ கற்றுக்கொடுப்பதும், ஊக்குவிப்பதுமே சபையின் கடமை. எங்களது சபையின் விசுவாசிகள் தங்களது தனிப்பட்ட வாழ்க்கையில் ஜெபக்குழுத் தலைவர்களின் அதிகாரத்திற்குக் கீழ்ப்படிய நான் ஒருபோதும் அனுமதிக்கவில்லை. அப்படிச் செய்தால் கம்யூனிஸ்ட்டுகளாக நாம் மாறி விடுவோம். தனிப்பட்ட

மனிதனின் சுதந்திரம் மற்றும் கடமைகளில் தலையிடுகிற எதுவும் பிசாசின் வேலையாகவே இருக்கும். தேவன் நம்மைப் பொம்மைகளாகப் படைக்கவில்லை. அவரோடு நெருங்கிய ஐக்கியமும், அன்புமுள்ள குமாரரும், குமாரத்திகளாகவும் இருக்கவே அவர் விரும்புகிறார். அப்படிப்பட்ட உறவை வளர்க்கும்படியாகவே எங்கள் ஜெபக்குழுக்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

எங்களது சபையில் நாங்கள் அன்புடன் கூடிய அதிகாரம் செலுத்துகிறோம். ஒரு போதகர் தன்னுடைய சபையாரை உண்மையாக நேசித்தால் அவரது அதிகாரத்திற்கு அவர்கள் கீழ்ப்படிந்து அவரது போதனைகளை ஏற்றுக்கொள்வார்கள். ஆனால் தன்னுடைய பதவியின் மேன்மை காரணமாக அவர் அதிகாரம் செலுத்தினால் ஜனங்கள் அவரை எதிர்ப்பார்கள். கீழ்ப்படிய மாட்டார்கள். அப்படிப்பட்ட போதகர் பல போராட்டங்களைச் சந்திக்க வேண்டியிருக்கும்.

பூரண சுவிசேஷ மத்திய சபையின் ஒவ்வொரு விசுவாசியையும் நான் உண்மையாக நேசிப்பதால் அவர்கள் எனக்குக் கீழ்ப்படிகிறார்கள். நான் ஒரு தவறு செய்தால் அதைப் பகிரங்கமாக அறிக்கையிட்டு, எனக்காக ஜெபிக்கும்படி அவர்களை வேண்டுகிறேன். இப்படிப்பட்ட திறந்த மனதோடு தனது விசுவாசிகளுடன் பழகும்போது அவர்கள் தங்கள் போதகரை மதிக்கிறார்கள். அவரது வார்த்தைக்குக் கீழ்ப்படிகிறார்கள். தேவன் தனது அன்பின் காரணமாகவே நம்மீது அதிகாரம் செலுத்துகிறார். அதைப் போலவே கிறிஸ்தவத்தில் சகல அதிகாரமும் அன்பின் அடிப்படையில் செயல்படுவதாகவே இருக்கவேண்டும்.

இன்று பல கிறிஸ்தவர்கள் தங்களது போதகர்களை மதிப்பதில்லை. அவர்களுக்குக் கீழ்ப்படிவதில்லை. அது தவறு. சபை என்னும் மந்தையை மேய்க்கும்படி தேவன் போதகரை அபிஷேகித்திருக்கிறார். ஆனால் போதகரும் இயேசுகிறிஸ்துவைப் போல மந்தை தன்னை முழுவதுமாய்ப் பின்பற்றாத நிலையிலும், மந்தையின் மீது அன்பு கூருகிறவராய் இருக்க வேண்டும்.

சமீபத்தில் நான் என்ன செய்தாலும் என்னுடைய விசுவாசிகள் ஏற்றுக் கொள்வார்கள் என்று எண்ணி அன்புக் குறைவாக நான் செயல்பட்டதால் ஒரு படிப்பினையை நான் கற்றுக்கொள்ள வேண்டியதாயிற்று. என்னுடைய சபையின் மூப்பர்களில் ஒருவர் இன்னொரு மூப்பரிடம், "பாஸ்டர் சோ செய்யும் எல்லா காரியங்களும் சரி என்று நான் ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் அவர் உண்மையாக என்னை நேசிக்கிறார். அவர் எது செய்தாலும் நம்முடைய

நன்மைக்காகவே இருக்கும். எனவே நான் அவர் செய்வதை ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது'' என்று கூறினராம்.

அவரது குற்றச்சாட்டு நியாயமாயிருந்தாலும், எந்தக் காரியத்தில் நான் செய்தது அவருக்குப் பிடிக்கவில்லை என்பது தெரியாததால் எனக்குச் சற்று மன வருத்தமாயிருந்தது. எனவே அவரை அழைத்துப் பேசியபோது அவர், "என்னை ஐரோப்பிய ஊழியங்கள் சம்பந்தமான கமிட்டிக்குத் தலைவராக நியமித்திருக்கிறீர்கள். ஆனால் அது விஷயமாக நீங்கள் என்னுடன் ஆலோசிக்கவில்லை. நான் அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்வேன் என்பது உங்களுக்குத் தெரியும். ஆனாலும் என்னிடம் ஒரு வார்த்தை கேட்டிருக்கலாம்'' என்று கூறினார். அவர் கூறியது சரி. நான் சொன்னால் அவர் செய்வார் என்று நானாகவே முடிவெடுத்தது தவறுதான். எனவே "உங்களது அன்பு மற்றும் கீழ்ப்படிதல் காரணமாக நானாகவே ஒரு முடிவெடுத்து விட்டேன். அது தவறுதான். மன்னித்துக்கொள்ளுங்கள்'' என்று கூறினேன்.

அவர் உடனடியாக அதை ஏற்றுக்கொண்டார். என் மீது அவர் வைத்திருந்த நம்பிக்கை அன்று முதல் இன்னும் அதிகரித்தது. நானும் அவருக்கு உரிய மதிப்பை அளித்ததால் எங்களது உறவு இன்னும் அதிகமாய் வளர்ந்திருக்கிறது. தங்கள் போதகர் தவறு செய்து விட்டால் அதை ஏற்றுக் கொள்ள அவர் தயங்கமாட்டார் என்பது விசுவாசிகளுக்குத் தெரிந்தால் அவர்கள் அவரிடம் உண்மையுடனும், அதிக மதிப்புடனும் நடந்து கொள்ளுவார்கள்.

அத்தியாயம் 10

அகில உலக சபை வளர்ச்சி இயக்கம்!

1964-ம் ஆண்டு மிசௌரியிலுள்ள ஸ்பிரிங்ஃபீல்டு என்னுமிடத்தில் நடைபெற்ற தேவ சங்க சபையின் பொதுக்குழுக் கூட்டத்தில் கலந்து கொள்ள அழைக்கப்பட்டதிலிருந்து இன்று வரை சபை வளர்ச்சித் திட்டத்தை மக்களுக்கு அறிவித்து வருகிறேன். என்னுடைய சரீர பெலவீனம் நீங்கியதால் அந்த வருடம்தான் நான் வெளிநாட்டுப் பிரயாணங்களை மேற்கொள்ள ஆரம்பித்தேன். 1964-க்கும் 1973-க்கும் இடைப்பட்ட வருடங்களில் வருடத்திற்கு குறைந்தது மூன்று முறை வெளிநாடுகளுக்கு, குறிப்பாக, ஜப்பான், பிலிப்பைன்ஸ், தாய்வான் போன்ற நாடுகளுக்குச் சென்று வீட்டு ஜெபக்குழு மற்றும் சபை வளர்ச்சி குறித்துப்பேசினேன்.

1973-ம் ஆண்டு நாங்கள் கொரியா யோய்டோ தீவிற்கு எங்களது சபையை மாற்றிய பின்பு எங்களது சபை பிரபலமாயிற்று. அந்த வருடத்தில் தான் பில்லிகிரஹாம் சீயோலில் மாபெரும் சுவிசேஷக் கூட்டத்தை நடத்தினார். மேலும் உலகப் பெந்தெகொஸ்தே சபைகளின் மாநாடும் அந்த வருடத்தில் எங்களது சபையில் நடைபெற்றது. அடுத்த ஆண்டில் "கேம்ஸ் க்ருசேட்" என்னும் இயக்கம் சார்பாக சீயோலில் பெரிய மாநாடு நடைபெற்றது. இவ்வாறு பல கிறிஸ்தவ நிகழ்ச்சிகள் சீயோலில் நடைபெற்றதால் எங்களது சபையின் வளர்ச்சி முழு உலகத்தின் கவனத்தையும் ஈர்த்தது. அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஐரோப்பா மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளில் சபை வளர்ச்சி பற்றிப் பேசும்படி அழைப்புகள் குவிந்தன.

1973 ஆம் ஆண்டிலிருந்து ஒரு வருடத்திற்கு ஆறு மாதங்கள் வரை நான் கொரியாவிற்கு வெளியே பயணம் செய்து கொண்டிருக்கிறேன். ஐரோப்பா விலிருந்தே அதிகமான அழைப்புகள் வந்திருந்தன. மேற்கு ஜெர்மனி, பிரான்ஸ், சுவிட்சர்லாந்து, நார்வே, டென்மார்க், ஸ்வீடன், இங்கிலாந்து, இத்தாலி மற்றும் போர்ச்சுக்கல் ஆகிய நாடுகளிலிருந்து அழைக்கப்பட்டேன். நான் எழுதிய புத்தகங்கள் ஜெர்மனி, ஸ்வீடன், பின்லாந்து ஆகிய நாடுகளில் அதிகமாக விற்பனையாயின. அமெரிக்காவை விட ஐரோப்பாவில் நான் அதிக பிரபலமடைந்தேன்.

1976 ஆம் ஆண்டு ஜெர்மனியில் ஒரு தொடர் கூட்டத்தை நடத்தினேன்.

கருத்தரங்குகளில் ஏராளமானோர் பங்கு பெற்றனர். பரிசுத்த ஆவியானவர் மிக அருமையாகக் கூட்டங்களை நடத்தி தந்தார். ஜெர்மனியிலிருந்து விமானத்தில் திரும்புகையில் தேவனை துதித்துக் கொண்டிருந்தேன். அப்போது என்னுடைய இருதயத்தில் தேவன் தீர்க்கதரிசனமாகப் பேச ஆரம்பித்தார். "நீ வீட்டிற்கு திரும்பிச் சென்றபின் அகில உலக சபை வளர்ச்சி நிலையம் ஒன்றைத் தொடங்கி, உலகம் முழுவதிலுமிருந்து சபைப் போதகர்களை வரவழைத்து, நீ இப்போது மிக அருமையாகக் கருத்தரங்குகளில் போதித்துக் கொண்டிருக்கும் சத்தியங்களை கற்றுக்கொடு. சபை வளர்ச்சி பற்றிய பிரமாணங்களை இன்னும் ஏராளமான போதர்கள் அறிந்துகொள்ள வேண்டுமென நான் விரும்புகிறேன். அவர்கள் சீயோல் நகரத்திற்கு வந்து நேரடியாகவே, இங்கு நடைபெறும் காரியங்களைக் காணட்டும். ஒரு பயிற்சி நிலையத்தை உருவாக்கு. அவர்கள் வந்து உன்னிடமிருந்தும், உன்னுடைய சபையிலிருந்தும் நேரடியாகக் கற்றுக் கொள்ளட்டும்" என்று பரிசுத்த ஆவியானவர் என்னோடுப் பேசினார்.

நான் மிகவும் அதிர்ச்சியடைந்தேன். "ஆண்டவரே, மூன்றாம் உலக நாடுகளில் ஒன்றைச் சேர்ந்த என்னால் எவ்வாறு இத்தனை பெரிய பயிற்சி நிலையத்தை உருவாக்க முடியும்? எங்களுடைய நாடு மேலைநாட்டுக் கிறிஸ்தவர்களால் ஒரு ஊழிய தளமாகவே கருதப்படுகிறது. அமெரிக்காவிலோ அல்லது ஐரோப்பாவிலோ தான் இப்படிப்பட்ட பயிற்சி நிலையம் அமைக்க முடியும்" என்று தேவனிடம் கூறினேன்.

ஆனாலும் அந்த எண்ணம் என்னைவிட்டு நீங்கவில்லை. கொரியா திரும்பும்வரை அந்த எண்ணமே என்னை ஆட்கொண்டதால் நான் ஆண்டவரை சோதிக்கும்படியாக ஒரு அடையாளம் கேட்டேன். "ஆண்டவரே, ஒரு பயிற்சி நிலையத்தை நான் ஆரம்பிப்பது உமக்குச் சித்தமானால் அதற்காக ஒரே ஒரு ஆராதனையில் பத்து லட்சம் டாலர் காணிக்கை கிடைக்கவேண்டும். அப்படிக் கிடைத்தால் இந்தப் பயிற்சி நிலையம் ஆரம்பிப்பது உம்முடைய சித்தம் என்று நான் அதற்கான காரியங்களைச் செய்வேன்" என்றேன்.

சபையின் மூப்பர்களுடன் இதுபற்றி பேசி ஒரு குறிப்பிட்ட ஞாயிறு ஆராதனையில் அகில உலக சபை வளர்ச்சி பயிற்சி நிலையம் கட்டுவதற்காக பத்து லட்சம் டாலர் பணம் ரொக்கமாகவோ அல்லது உறுதிமொழியாகவோ தரும்படி சபையாரிடம் கேட்பது என்ற முடிவெடுத்தோம். அன்றை சூழ் நிலையில் என்னால் அந்த அளவுக்கு விசுவாசிக்க முடியவில்லை. ஜனங்கள்

அவ்வளவு பெரிய தொகையைக் கொடுக்க மாட்டார்கள் என்று நான் பயந்து கவலைப்பட்டேன்.

இறுதியாக "ஆண்டவரே, உமக்குச் சித்தமானால் இந்த ஞாயிற்றுக் கிழமை பத்து லட்சம் டாலர் பணம் காணிக்கையாகக் கிடைக்கவேண்டும். அப்படிக் கிடைக்காவிட்டால் அகில உலக சபை வளர்ச்சி பயிற்சி நிலையம் ஆரம்பிக்கும் திட்டத்திற்கு முற்றுப்புள்ளி வைத்து விடுவேன்" என்றேன்.

அடுத்த ஞாயிறு ஆராதனையில் இதற்காக காணிக்கையும், உறுதி மொழிகளும் சேகரிக்கப்பட்டபோது சரியாக பத்து லட்சம் டாலர் பணம் அதில் இருந்தது. உடனடியாக பூரண சுவிசேஷ மத்திய சபை கட்டிடத்திற்கு அருகே உலக ஊழிய மையத்திற்கான ஏற்பாடுகளைச் செய்தோம். இந்த ஊழியத்தை பொறுப்பேற்றுச் செய்யும்படியாக ஒரு நிர்வாக அமைப்பையும் ஏற்படுத்தினோம்.

இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த நான் செயல்பட்டபோது இது என்னால் தனிமையாகச் செயல்படுத்த முடியாத மாபெரும் திட்டம் என்பதை அறிந்துகொண்டேன். நான் சபையை முழுவதுமாகக் கவனிக்க வேண்டி யிருந்தது. அகில உலக சபை வளர்ச்சி நிலையத்தைக் கவனிப்பதற்கும் முழுநேர நிர்வாகி ஒருவர் தேவையாயிருந்தது. என்னால் இரண்டு பொறுப்புகளையும் ஏற்றுக்கொள்ள முடியாது. வேறு யாரை அந்தப் பணிக்கு நியமிக்கலாம் என்று எண்ணியபோது ஜான் ஹர்ஸ்டனின் பெயர் என் நினைவிற்கு வந்தது. ஜான் ஹர்ஸ்டன் சியோல் நகரத்தின் குடிசைப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட என்னுடைய சபையில் என்னோடு உழைத்ததோடு இப்போதுள்ள சபையை உருவாக்குவதிலும் பெரிதும் பங்கு பெற்றவர். பத்து ஆண்டுகள் என்னோடு சேர்ந்து ஊழியம் செய்தபின் 1969–ஆம் ஆண்டு வியட்நாமில் ஊழியம் செய்யும்படி புறப்பட்டுப்போனார். கடந்த ஐந்து வருடங்களாக நான் அவரைப் பார்க்கவே இல்லை. வியட்நாம் யுத்தத்தின் மத்தியிலும் அங்கு பல சபைகளை உருவாக்கிய பின் 1975 ஆம் ஆண்டு கம்யூனிஸ்ட்டுகள் தெற்கு வியட்நாமைப் பிடித்ததினால் அங்கிருந்து வெளியேறினார். நான் அவரைத்தேடி அமெரிக்காவிலுள்ள கலிபோர்னி யாவில் பாசடேனு என்னுமிடத்தில் கண்டுபிடித்தேன். மாரடைப்பினால் பாதிக்கப்பட்டு அப்போதுதான் தேறிக்கொண்டிருந்தார். ஆனாலும் மிகவும் சோர்ந்திருந்தார். ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு நான் பார்த்ததைவிட மிகவும் தளர்ந்து வயதானவர்போல காணப்பட்டார்.

"ஆறு ஆண்டுகள் அரும்பாடுபட்டு பல சபைகளை வியட்நாமில் உருவாக்கிய பின்பு அங்கிருந்து வெளியேறுவது எனக்கு மிகவும் வேதனையாய்

இருந்தது. நான் வெளியேற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டதால் கதறி அழுதபடியே வியட்நாமிலிருந்து வெளியேறினேன்" என்று கூறினார்.

"ஜான், இனி என்ன செய்யப் போகிறீர்கள்?" என்று நான் கேட்டேன்.

"இன்னும் முடிவு செய்யவில்லை. தாய்லாந்திலுள்ள தேவ சங்க சபைகளின் மிஷனெரி இயக்குநராகப் பொறுப்பேற்கும்படி மிஷனெரிக் கமிட்டியினர் கூறியிருக்கிறார்கள். ஆனால் இந்தக் காரியத்தில் ஆண்டவரது வழிநடத்துதல் இல்லை. எனவே என்ன செய்வதென்று இன்னும் முடிவு செய்யவில்லை" என்று கூறினார்.

அதையே நல்ல சந்தர்ப்பமாக எண்ணி கர்த்தர் எனக்குக் கொடுத்த தரிசனத்தையும், அதற்கான பணத்தேவையை அவர் அற்புதமாகக் கொடுத்ததையும் எடுத்துக் கூறினேன். "அகில உலக சபை வளர்ச்சி நிலையத்தை நிர்வகிக்க ஒரு தலைவர் தேவைப்படுவதால் நீங்களே அதற்குத் தகுதியான மனிதர்" என்று கூறினேன். அவருக்கும் அது நல்லதாகக் காணப்பட்டதால் இருவருமாக இணைந்து ஜெபித்தோம். "நான் செய்யும் படி தேவன் வைத்திருக்கும் நல்ல பணி இதுதான் என்று நினைக்கிறேன். ஆனால் அந்தப் பணியைச் செய்ய வேண்டுமானால் என்னுடைய இருதய பெலவீனத்திலிருந்து தேவன் சுகம் கொடுக்க வேண்டுமே" என்றார்.

அதற்கடுத்த மாதத்தில் என்னுடைய மாமியார் டாக்டர். ஜெஸில் சோய் அம்மையார் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரத்தில் கூட்டங்கள் நடத்தி அதில் கலந்து கொண்ட ஜான் ஹர்ஸ்டன் தலையில் கைகளை வைத்து ஜெபித்தபோது ஜான் பூரண சுகமடைந்து அதன்பின் கொரியாவிற்குத் திரும்பி வந்தார்.

அகில உலக சபை வளர்ச்சி நிலையத்திற்கு உறுதியான அஸ்திபார மிடும்படி இன்னொரு காரியத்தையும் நான் செய்யும்படி தேவன் விரும்பினார். எங்களது ஊழியம் அனைவருக்கும் பயனுள்ளதாயிருக்கும்படி எங்களுக்கு ஆலோசனை கூற அகில உலகிலிருந்தும் உறுப்பினர்களைத் தெரிந்து ஒரு ஆலோசனை கமிட்டியை நியமிக்கும்படி நான் ஏவப்பட்டேன். 1976 நவம்பர் மாதம் உலக ஊழிய மையம் கட்டி முடிக்கப்பட்டவுடன் நான் அமெரிக்கா விலுள்ள வடக்கு ஹாலிவுட்டில் உள்ள ஒரு ஹோட்டலில் வளர்ந்து வரும் அமெரிக்க சபைகளின் போதகர்கள் இருபத்து நான்கு பேரை அழைத்து அவர்களுடன் சபை வளர்ச்சி பிரமாணங்களை, உலகம் முழுவதும் பரவச் செய்ய இந்த புதிய இயக்கத்தை ஆரம்பிக்கும்படி தேவன் கொடுத்த தரிசனத்தைப் பகிர்ந்து கொண்டேன். "நாம் பெற்றிருக்கும் அறிவை மூன்றாம் உலக நாடுகளிலுள்ள சபைகளும் அறிந்து கொள்ள செய்ய

வேண்டியது அவசியம். என நான் அதிகமாக உணருகிறேன். அப்படி செய்வதன் மூலம் அந்த நாடுகளிலுள்ள சபைகளும் வளர்ந்து, அகில உலகமும் சுவிசேஷம் பரவ நாம் உதவி செய்ய முடியும்'' என்று அவர்களிடம் கூறினேன்.

கூட்டத்திற்கு வந்திருந்த அனைவருமே, இந்தத் தரிசனத்தை உற்சாகத்துடன் ஏற்றுக்கொண்டனர். வந்திருந்தவர்களில் ஒருவரை இந்த ஊழியத்தின் தலைவராகத் தேர்ந்தெடுக்கும்படி நான் கூறியபோது அனைவரும் ஒரே குரலில், "கர்த்தர் இந்தத் தரிசனத்தை உங்களுக்கே தந்திருக்கிறார். நீங்கள் அழைத்திருக்காவிட்டால் இந்தத் திட்டத்தைப்பற்றி எங்களுக்கு எதுவும் தெரிந்திருக்காது. எனவே நீங்கள்தான் தலைவராக இருக்கவேண்டுமெனக்'' கூறினர்.

எனவே என்னைத் தலைவராக ஒருமனதாகத் தெரிந்தெடுத்து கொரியாவிலும், அமெரிக்காவிலும், உலகின் மற்ற நாடுகளிலும் சபை வளர்ச்சி கூட்டங்களை நடத்துவதில் என்னுடன் ஒத்துழைக்க அவர்கள் உறுதியளித்தனர்.

இன்று அகில உலக சபை நிலையம் இந்நூற்றாண்டு சபைகளின் தேவையை உண்மையாகவே சந்தித்து வருகிறது என்று நான் நிச்சயமாக உணருகிறேன். 1960 ஆம் வருடத்திலிருந்து பத்தாண்டுகள் சரீர சுகமளிக்கும் அற்புதங்கள் சபையில் எழுப்புதலை உண்டாக்கின. 1970 முதல் அடுத்த பத்தாண்டுகள் பரிசுத்த ஆவியானவரது சகாப்தமாயிருந்தது. 1980 முதல் சபை வளர்ச்சியின் சகாப்தமாக உள்ளது. சரீர சுகமளித்தலும், ஆவிக்குரிய எழுப்புதலும் சபையின் வளர்ச்சிக்கு உதவாவிட்டால் அதனால் எவ்வித பயனுமில்லை. உண்மையில் ஆவியானவரது வரங்கள் கொடுக்கப் பட்டிருப்பதன் முக்கிய நோக்கம் சபையின் வளர்ச்சியே. ஆவிக்குரிய உற்சாகத்தைக் கொடுப்பதற்கு மட்டுமல்ல, சபையின் எண்ணிக்கையைப் பெருக்குவதற்கும் வரங்கள் உபயோகப்பட வேண்டும்.

கிறிஸ்துவின் சரீரமாகிய சபையின் எதிர்காலம் நன்றாயிருக்க வேண்டு மென்று நான் உண்மையில் விரும்பினால், இப்போது சபையின் வளர்ச்சியில் நாம் அதிக கவனம் செலுத்த வேண்டும். சபை வளர்ச்சி என்பது ஒரு தத்துவமல்ல. சபையை உருவாக்கவே இயேசு இவ்வுலகத்திற்கு வந்தார். அந்த சபை இதுவரை உறங்கிக் கொண்டிருந்தது. இப்போதுதான் தூக்கத்தி லிருந்து விழித்திருக்கிறது. விழித்தெழுந்த எல்லா சபைகளும் வளரப் போகின்றன.

கொரியாவில் நாங்கள் பெற்று வருகிற வளர்ச்சியை எல்லா சபைகளும் பெறமுடியும். கர்த்தர் பட்சபாதமில்லாதவர். சபை வளர்ச்சி என்பது கொரியாவிற்கு மட்டுமே பொருந்தும்; அமெரிக்காவிலோ அல்லது ஐரோப்பாவிலோ இது பொருந்தாதென சிலர் நினைக்கின்றனர். ஆனால் சபை வளர்ச்சிப் பிரமாணங்கள் நன்கு சோதிக்கப்பட்ட நிரூபிக்கப்பட்ட உண்மைகள். எங்களது சபையில் அது விளக்கிக் காண்பிக்கப்படுகிறது அவ்வளவே.

எங்களது சபையைப் போல் மற்ற சபைகள் வளர முடியாது என்பதற்கு எவ்வித காரணமும் இல்லை. இந்தப் பிரமாணங்கள் ஆஸ்திரேலியாவிலோ, கொரியாவிலோ அல்லது உலகின் வேறு எந்தப் பகுதியிலும் செயல்படக் கூடிய பொதுவான உண்மைகள் ஆகும்!

நாம் ஆதாமின் பிள்ளைகள் என்றழைக்கப்படுகிறோம். நாம் வித்தியாசமான உணவைப் புசிக்கிறோம். ஆனாலும் ஒரேவிதமான இரத்தத்தையே உடையவர்களாக இருக்கிறோம். நாமெல்லோருமே இயேசுகிறிஸ்துவினால் இரட்சிக்கப்படவேண்டிய பாவிகளே. நாமெல்லோருமே பரிசுத்த ஆவியானவரின் பெலனைப் பெற வேண்டியவர்களே. ஒரு சபை பரிசுத்த ஆவியானவரின் பெலத்துடன் தேவனுடைய வார்த்தையாகிய சுவிசேஷத்தை அறிவித்தால் அந்த சபை நிச்சயம் வளரும். மேலும் சபை வளர்ச்சிப் பிரமாணங்களை உபயோகித்து வீட்டு ஜெபக்குழுக்களை ஆரம்பித்தால் பெலமுள்ள, அதிக வளர்ச்சியுள்ள சபையாக மாறும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

இந்தப் பிரமாணங்கள் உலகின் எந்த மூலையிலும் கிரியை நடப்பிக்கும். தேவன் ஓரிடத்தில் ஒரு விதமாகவும், இன்னோரிடத்தில் வேறு விதமாகவும் கிரியை செய்வார் என்று நினைப்பது தவறு; ஆபத்தும்கூட! கொரியாவில் தேவன் வல்லமையுள்ளவர்; மற்ற நாடுகளில் அவர் வல்லமையுள்ளவரல்ல என்று நினைப்பதற்கு அது ஒப்பாகும். அது உண்மை அல்ல. எங்களது சபையைப் போன்றே வீட்டு ஜெபக்குழுக்களை ஆரம்பித்து நான் சொல்லியுள்ள எல்லா விதிகளையும், கடைப்பிடிக்கும் எந்த சபையும் நிச்சயம் வளரவே செய்யும்.

ஆஸ்திரேலியாவிலிருக்கும் சபைகள் இந்தப் போதனைகளால் புரட்சிகரமான மாறுதலைப் பெற்றிருக்கின்றன. நான் ஏற்கெனவே கூறியதைப்போல பத்து ஆண்டுகளில் இரண்டு சதவிகித வளாச்சியையே பெற்றிருந்த ஆஸ்திரேலிய சபைகள் மூன்றே ஆண்டுகளில் இரண்டு

மடங்காகப் பெருகின. இப்போது ஆஸ்திரேலியாவிலுள்ள அடிலெய்டு, பிரிஸ்பேன் என்னும் இரண்டு இடங்களில் இரண்டாயிரத்திற்கும் அதிகமான விசுவாசிகளுள்ள இரண்டு தேவ சங்க சபைகள் உள்ளன. என்னுடைய சபை வளர்ச்சி விதிகளைக் கடைப்பிடிக்கும் வரை ஆஸ்திரேலிய சபைகள் ஜப்பானிலுள்ள சபைகளைப் போலவே நாற்பது அல்லது ஐம்பது விசுவாசிகளையே உடையவையாயிருந்தன.

ஐரோப்பாவில் ஒரு லுத்தரன் சபையில் ஒவ்வொரு ஞாயிறும் பதினைந்து விசுவாசிகளே கூடி வந்தார்கள். அந்த சபையின் போதகர் என்னுடைய கருத்தரங்கு ஒன்றில் கலந்து கொண்டார். கற்றுக்கொண்ட விதிகளைத் தனது சபையில் செயல்படுத்தினார். அன்றிலிருந்து இன்று வரை அந்த சபை தொடர்ந்து வளர்ந்து இன்று அந்த சபையில் ஐநூறு விசுவாசிகள் இருக்கின்றனர். மேலும் அந்த சபையார் தங்களிடம் பரிசுத்த ஆவியானவரின் பெலன் இல்லையென்று உணர்ந்து பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றுக்கொண்டிருக்கின்றனர். இப்போது அந்த சபை ஜீவனுள்ள சபையாக மாறியிருக்கிறது.

இப்போது நான் ஜப்பான் மீது அதிக கவனம் செலுத்தி வருகிறேன். டோக்கியோவில் ஐநூறு விசுவாசிகளைப் பெறுவதைக் குறிக்கோளாகக் கொண்டு செயல்படும் பெண்ணின் ஊழியம் ஒரு துவக்கமே. பத்து ஆண்டுகளுக்குள் ஒரு கோடி ஜப்பானியர்களை கிறிஸ்துவுக்குள் கொண்டு வர பரிசுத்த ஆவியானவரால் முடியும் என்று நாங்கள் விசுவாசித்து அவருடன் இணைந்து செயல்பட்டு சபை வளர்ச்சி விதிகளின் மூலம் அவர்களை சபைக்குக் கொண்டு வர நாங்கள் உழைத்து வருகிறோம்.

அகில உலக சபை வளர்ச்சி நிலையம் பரிசுத்த ஆவியானரால் ஆரம்பிக்கப் பட்டது என்பதை அதனால் உண்டாயிருக்கும் பலன்களால் நாங்கள் தெளிவாக அறிந்திருக்கிறோம்.

அத்தியாயம் 11

வீட்டு ஜெபக்குழுக்கள் ஆரம்பிப்பது எப்படி?

ஒரு சபையில் வீட்டு ஜெபக்குழுக்கள் பயனுள்ளதாய் இருக்க வேண்டுமானால், ஒரே ஒரு வழியுண்டு. வீட்டு ஜெபக்குழுக்கள் சுவிசேஷத்தை அறிவிக்கும் கருவிகளாய் உபயோகிக்கப்பட வேண்டும். சபையின் போதகரே ஜெபக்குழுக்களில் முக்கிய இடத்தைப் பெற வேண்டும். போதகர்கள் முக்கிய இடத்தைப் பெறாத ஜெபக்குழுக்களால் எவ்விதப் பயனுமில்லை. எந்த ஒரு கருவியையும் இயக்குவதற்கு ஒருவர் வேண்டும். வீட்டு ஜெபக்குழு என்னும் கருவியை இயக்குபவர் சபையின் போதகரே இருக்கவேண்டும்.

இந்தப் புத்தகத்தை வாசிக்கும் நீங்கள் ஒரு சபையின் போதகராயில்லாமல், விசுவாசியாயிருந்தால் நான் உங்களுக்கு சொல்லும் ஆலோசனை என்னவென்றால், உடனடியாக இப்புத்தகத்தை உங்கள் சபையின் போதகருக்குக் கொடுத்து அவர் இதை படிக்கும்படியாகவும், இந்த தரிசனத்தைப் பெற்றுக்கொள்ளும்படியாகவும் அவருக்காக ஜெபியுங்கள். அவரில்லாமல் நீங்களாக எதுவும் செய்ய முடியாது. இந்தப் புத்தகத்தை படித்து இதில் சொல்லப்பட்டுள்ள சபை வளர்ச்சிக்கான வழிகளைக் கண்டுபிடித்து ஜெபக்குழுக்களை உருவாக்கும்படி தூண்டப்பட்டு ஜெபக் குழுக்களை ஆரம்பிக்கும்போது அது பயனுள்ளதாயிருக்கும். இப்புத்தகத்தை அவர் படித்துவிட்டார் என்பதை அறிந்த பின் அவரை ஒரு நாள் காலை உணவிற்கோ அல்லது மதிய உணவிற்கோ உங்கள் வீட்டிற்கு அழைத்து சபையின் எழுப்புதலுக்காகவும், சுவிசேஷத்தை அறிவிப்பதற்காகவும், வீட்டு ஜெபக் குழுக்கள் ஆரம்பிப்பதைப் பற்றி அவருடன் பேசுங்கள்.

அதன் பின்பு சபையாருக்கு எழுப்புதலைக் குறித்தும், சுவிசேஷம் அறிவிப்பதைக் குறித்தும், வீட்டு ஜெபக்குழுக்கள் ஆரம்பிப்பதைக் குறித்தும் வலியுறுத்தி ஜெபக்குழுக்களை ஆரம்பிக்கச் செய்வது அந்த போதகரைப் பொருத்தது. நீங்கள் அவருக்கு உதவி செய்வதிலும், உங்கள் பகுதியில் வீட்டு ஜெபக்குழுக்களை ஆரம்பிப்பதிலும், அவரோடு இணைந்து அவரைத் தாங்கலாம்.

கூடுமானால் உங்கள் சபையின் சார்பில் பொருளாதார உதவி செய்து

உங்கள் போதகரை எங்களது அகில உலக சபை வளர்ச்சி கருத்தரங்கிற்கு அனுப்பலாம். உலகத்தின் பல பகுதிகளில் இக்கருத்தரங்குகளை நாங்கள் நடத்துகிறோம். சீயோலில் நடைபெறும் கருத்தரங்கில் கலந்து கொள்வது மிகச் சிறந்தது. ஏனெனில் எங்களது பூரண சுவிசேஷ மத்திய சபையில் சபை வளர்ச்சி பிரமாணங்களை செயல்படுவதைக் கண்கூடாகக் காணலாம்.

சபை போதகரை முதலிடத்தில் வைக்காமல் பல சபைகளின் சார்பாக வீட்டு ஜெபக்குழுக்கள் ஆரம்பிக்கப்படுவதை நான் கண்டிருக்கிறேன். அப்படிப்பட்ட ஜெபக்குழுக்கள் வெற்றி பெறுவதில்லை. அமெரிக்க ஐக்கிய நாட்டிலுள்ள ஒரு பெரிய சபையின் போதகர் எங்களது சபை வளர்ச்சிக் கருத்தரங்கு ஒன்றில் கலந்து கொண்டார். வீட்டு ஜெபக் குழுக்களின் பயனை அறிந்துகொண்ட அவர் நாடு திரும்பிய பின் தானே பொறுப்பேற்று செய்யாமல் தனது உதவி ஊழியரைக் கண்காணிப்பாளராக நியமித்து ஜெபக்குழுக்களை ஆரம்பிக்கச் செய்தார். உதவி ஊழியர் வீட்டு ஜெபக் குழுக்கள் ஆரம்பிக்க எல்லா ஏற்பாடுகளையும் செய்தார். ஆனால் அந்த ஜெபக்குழுக்கள் வளரவில்லை. சுவிசேஷம் அறிவிக்கும் ஒரு ஊழியமாக ஜெபக்குழுக்கள் செயல்படவில்லை. ஏன்? வீட்டு ஜெபம் என்பது அந்த சபையின் நடைமுறைகளில் ஒன்றாக மாறிவிட்டது. ஜெபக்குழுக்களில் கலந்து கொள்வோரின் எண்ணிக்கை மிகக் குறைவாகவே இருந்தது. சபையின் போதகர் நேரடியாக இதில் பங்கெடுத்து ஆர்வமாகச் செயல் படாததால் ஜெபக் குழுக்களை முக்கியமானவைகளாக விசுவாசிகள் கருதவில்லை.

வீட்டு ஜெபக்குழுக்களின் முக்கியத்துவத்தை ஒரு போதகர் அறிந்திருந்துச் சபையின் வாழ்வோ, மரணமோ, வீட்டு ஜெபக்குழுக்களைப் பொறுத்தே இருக்கிறது என்ற உறுதியுடன் செயல்பட்டாலொழிய வீட்டு ஜெபக்குழுக்களால் ஒரு பயனுமிராது.

வீட்டு ஜெபக்குழுத் திட்டத்தை ஆரம்பிக்கும் முன் அதற்கு அஸ்திபாரமாக பல காரியங்கள் செய்யப்பட்ட வேண்டியதிருக்கிறது. அதற்கு சபையின் போதகர் தனது அந்தஸ்தையும், சக்தியையும் பயன்படுத்திச் செயல்பட வேண்டும். இத்திட்டம் வெற்றிகரமாகச் செயல்படத் தொடங்கிய பின்பும் போதகரே, பிரதானத் தலைவராக இருந்து ஜெபக்குழுத் தலைவர்களை பயிற்றுவித்து, அவர்களுக்கென்று நியமிக்கப்பட்டிருக்கின்ற ஆத்துமாக்களின் இலக்கை அவர்கள் அடையும்படி அவர்களை உற்சாகப் படுத்தவேண்டும்.

மற்ற பணிகள் உதவி ஊழியர்களிடம் பகிர்ந்து கொடுக்கப்பட்டாலும்,

ஜெபக்குழுக்கள் சபைப் போதகரின் கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டிற்குள் இருக்க வேண்டியது அவசியம். ஜெபக்குழுத் தலைவர்களுடன் சபையின் போதகருக்கு நெருங்கிய தொடர்பு இருக்கவேண்டும்.

ஒரு ஊழியர் தனது முழு பெலத்தையும் அதில் செலவிட்டால் மட்டுமே வீட்டு ஜெபக்குழுத்திட்டம் வெற்றி பெறும் என்று மறுபடியும் கூறுகிறேன். இல்லாவிட்டால் இது வெறும் விளம்பரம் என்று ஜனங்கள் எண்ணி விடுவார்கள். இன்று சபையார் வெறும் விளம்பரங்களை வெறுக்கிறார்கள். எந்தத் திட்டமும் விளம்பரத்திற்காக மட்டும் செயல்படுமானால் தோல்வி யடைவது நிச்சயம். ஆனால் வீட்டு ஜெபக்குழுக்கள் திட்டம் ஒரு விளம்பரத் திட்டமல்ல.

எங்களுடைய சபையின் போதகர் வீட்டு ஜெபக்குழுக்கள் மீது அக்கறை உள்ளவராயிருக்கிறார் என்ற எண்ணம் விசுவாசிகளுக்கு உண்டாகா விட்டால் இந்த மூன்று காரியங்களில் ஒன்று நடைபெறும்.

1. ஜெபக்குழுக்கள் அனலிழந்து வளராத நிலையில் காணப்படும். கடமைக்காக ஜெபக்குழு கூடுமேயன்றி உண்மையான ஆவிக்குரிய வளர்ச்சியோ, அல்லது சுவிசேஷம் அறிவித்தலோ இராது. ஜெபக்குழு கூடுவதையே நிறுத்த வேண்டிய நிலையும் உருவாகலாம்.

2. ஜெபக்கூட்டங்கள் ஒரு வழக்கமான சடங்காக மாறும். அல்லது தனி மனிதர்களின் ஆளுகைக்கு அடிமைப்படும். இப்படியாக உபயோக மில்லாததும், தேவையற்றதும், சபைக்குத் தலைவலியாகவும் மாறும்.

3. ஜெபக்குழுவின் தலைவர்கள் தங்களது போதகரை அவ்வப்போது சந்தித்து ஜெபக்குழுக்களின் வளர்ச்சி குறித்து அறிக்கை கொடுக்க வேண்டியதில்லை என்ற நிலை உருவாகுமானால், ஜெபக்குழுக்கள் சபையை அழிக்கும் புற்று நோயாக மாறிவிடும்.

கொரியாவிலும்கூட எங்களது சபையின் ஜெபக்குழுக்கள் வெற்றி கரமாகச் செயல்படுவதைக் கண்டு பல சபைகள் வீட்டு ஜெபக்குழுக்களை ஆரம்பித்தனர். ஆனால் சபையின் போதகர் அதன் தலைவராயிருந்து கவனிக்காததால் அவை வெற்றி பெறவில்லை. வருடத்தில் ஆறுமாதங்கள் நான் வெளிநாட்டிலிருப்பதால் ஜெபக் குழுக்களுக்குத் தேவையான ஆலோசனைகளை நான் கொடுக்க முடியாது எனப் பலர் கருதுகிறார்கள். ஆனால் நான் பிரயாணம் செய்யும்போது ஜெபக்குழுத் தலைவர்களுடன் பேச வேண்டியவற்றை ஒளி நாடாக்களில் பதிவு செய்து அவர்களுக்கு அனுப்புகிறேன். ஜெபக் குழுத் தலைவர்கள் தாங்கள் சபையின் முக்கியமானவர்கள் என்ற

உணர்வு அவர்களுக்கு உண்டானால் மட்டுமே உற்சாகத்துடனும், பொறுப்புடனும் செயல்படுவார்கள். நான் அவர்கள் மீது தனி கவனம் செலுத்தாவிட்டால் அவர்களால் உற்சாகமாய் செயல்பட முடியாது.

வீட்டு ஜெபக்குழுக்களை ஆரம்பிக்க விரும்பும் போதகர் முதலில் அதைப்பற்றி கவனமாக படிக்கவேண்டும். இல்லாவிட்டால் அவர் தோல்வி யடைவார். ஒரு முறை தோற்றுப்போனால் இனி ஒருபோதும் அவர் ஜெபக்குழு ஆரம்பிப்பதைப் பற்றி நினைக்க மாட்டார். எனவே ஏற்கெனவே வெற்றிகரமாக வீட்டு ஜெபக்குழுத் திட்டத்தைச் செயல்படுத்தும் ஒரு சபைக்குச் சென்று அது பற்றி நன்கு அறிவது மிக அவசியம்.

வீட்டு ஜெபக்குழுக்கள் ஆரம்பிக்கும்போது சில முக்கியமான காரியங்களைக் கவனிக்க வேண்டும். நான் சிபாரிசு செய்யும் சில காரியங்கள் உங்களுக்குப் பயனுள்ளதாயிருக்குமென எண்ணுகிறேன்.

முதலாவது சிறியதாய் ஆரம்பியுங்கள். பத்து அல்லது பன்னிரண்டு பேரைத் தெரிந்துகொண்டு அவர்களுக்கு பயிற்சி கொடுத்து தங்களது இல்லங்களில் ஜெபக்குழுக்களை ஆரம்பிக்கச் செய்யுங்கள். ஆறு முதல் எட்டு மாதங்கள் கவனமாக அந்த ஜெபக்குழுக்களைக் கண்காணித்து அவைகள் கனிகொடுக்கத் தொடங்கிய பின்பு இன்னும் அதிகமான ஜெபக் குழுக்களைத் தொடங்கலாம்.

ஜெபக்குழுத் தலைவர்களாயிருக்க சரியான தலைவர்களைத் தெரிந் தெடுப்பது அவசியம். வெற்றியோ அல்லது தோல்வியோ அவர்களைப் பொறுத்தே உள்ளது. பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற்ற ஆண்களையும், பெண்களையும் இதற்காகத் தெரிந்துகொள்வது அவசியம். ஜெபக்குழுத் தலைவர்கள் பரிசுத்த ஆவியானவரைச் சார்ந்து செயல்படாவிட்டால் பரிசுத்த ஆவியானவருக்கு விரோதமாகவே கிரியை செய்யத் தொடங்கி விடுவார்கள். ஜெபக்குழுத் தலைவர்களிடம் நான் எதிர்பார்க்கும் சில தகுதிகளை இங்கு தருகிறேன்.

1. உற்சாகம்:– புதிய கிறிஸ்தவர்கள் உண்மையில் நல்ல ஜெபக்குழுத் தலைவர்களாக இருக்கின்றனர். இயேசுவைப் புதிதாக ஏற்றுக்கொண் டிருப்பதால் அவர்கள் மிக உற்சாகமாக ஊழியத்தில் பங்கெடுக்கின்றனர். அவர்களது உற்சாகம் மற்றவர்களை விரைவாகச் செயல்படச் செய்யும். பழைய கிறிஸ்தவர்களைச் சரிப்படுத்தி, உற்சாகப்படுத்தி ஊழியம் செய்ய வேண்டியிருக்கும்.

2. சாட்சி:- தங்களுடைய வாழ்க்கையில் தேவனிடமிருந்து அற்புதங்களைப் பெற்றிருக்கும் தெளிவான, வல்லமையுள்ள சாட்சிகள் உள்ளவர்கள் அபிஷேகம் இன்றும் கிரியை செய்கிறது என்று நிரூபிக்கும் சாட்சிகளாயிருப்பார்கள். அப்படிப்பட்டவர்கள் இயேசுகிறிஸ்துவின் ஜீவனின் வல்லமையை வெளிப்படுத்தி மற்றவர்களைக் கவரக்கூடியவர்களாயிருப்பார்கள்.

3. அர்ப்பணிப்பு:- ஒரு விசுவாசி ஞாயிறு ஆராதனை மற்றும் மற்ற நாட்களில் நடைபெறும் கூட்டங்களில் தவறாது கலந்துகொள்கிறாரா என்பதை வைத்து அவர் கர்த்தருக்கும், சபைக்கும் தன்னை முழுவதும் அர்ப்பணித்திருக்கிறாரா என்பதை எளிதாகப் புரிந்துகொள்ள முடியும். மேலும் விசுவாச வாழ்க்கையின் முக்கிய பகுதியாகிய தசமபாகம் செலுத்துதல் விஷயத்தில் உண்மையாய் இருக்கிறாரா, சபையின் மற்ற விசுவாசிகளுடன் இணைந்து ஐக்கியமாய் இருக்கிறாரா என்பதையும் கவனிக்க வேண்டும். குற்றம் கண்டுபிடித்தல் மற்றும் சபையின் பெரும்பான்மையினரின் விருப்பத்திற்கு முரண்பாடாகச் செயல்படுதல் போன்ற குணமுடையோர் வீட்டு ஜெபக்குழுக்களை போதகரின் ஆலோசனைக்குக் கீழ்ப்படிந்து நடத்தமாட்டார்கள்.

4. பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம்:- ஒரு ஜெபக்குழுவை திறம்பட நடத்தப் பரிசுத்த ஆவியானவரின் வழி நடத்துதலைச் சார்ந்திருப்பது ஜெபக்குழுத் தலைவரது தலையாய கடமை. எங்களது சபையில் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் பெற்ற அந்நிய பாஷையில் பேசுபவர்களையே ஜெபக்குழுத் தலைவர்களாக நியமிக்கிறோம். மற்றவர்களைக் கிறிஸ்துவுக்குள் நடத்தவும், தேவைகளோடு வருபவர்களுக்காக வல்லமையாய் ஜெபிக்கவும், இப்படிப்பட்டவர்களே தகுதியுள்ளவர்கள். ஆவிக்குரிய மற்றும் சரீர சுகத்திற்காக வருபவர்களுக்காக ஜெபிக்க இந்தத் தகுதி மிக அவசியம்.

5. நேரமும் பணமும்:- ஒரு வேலை சீக்கிரமாய் முடிக்கப்பட வேண்டுமானால் சுறுசுறுப்பாக வேலை செய்பவர்களிடம் கொடுக்க வேண்டும் என்பது உலக நடைமுறை. ஆனால் ஆவிக்குரிய காரியங்களில் அது பொருந்தாது. இங்கும் அங்கும் ஓடி வேலை செய்துகொண்டிருப்பவர்களுக்கு பரிசுத்த ஆவியானவரது நடத்துதலைக் கவனிக்கவும், கற்றுக்கொள்ளவும் நேரம் இருப்பதில்லை. வீட்டிற்கு வெளியே சென்று வேலை செய்ய அவசியமில்லாதவர்களே ஜெபத்திற்கும், வேதவாசிப்பிற்கும் அதிக நேரம் செலவிட முடிவதால் அவர்களே நல்ல தலைவர்களாக மாறுகிறார்கள். அதைப்போலவே நாள் முழுவதும் வெளியே சென்று

உழைத்தால்தான் பணம் சம்பாதிக்க முடியும் என்ற நிலையிலிருப்பவர்களை விட ஓரளவிற்கு பண வசதியுள்ளவர்கள் அதிகமாய் ஜெபிப்பதற்கும், வேத வாசிப்பிற்கும் நேரம் செலவழிக்க முடியும். அதனால் ஏழைகளை ஜெபக்குழுத் தலைவர்களாக்கக் கூடாதென்று நான் கூறவில்லை. மற்ற தகுதிகள் இருந்தால் யாரையும் ஜெபக்குழுத் தலைவர்களாக நியமிக்கலாம். அப்படிப் பட்டவர்கள் தேவனுடைய ஊழியத்தைச் செய்யும்போது தேவன் அவர்களை ஏழைகளாக விட்டுவிட மாட்டார். அவர்களை ஆசீர்வதித்து அவர்களது தேவைகளைச் சந்திப்பார்.

தலைவர்களைத் தெரிந்தெடுத்தபின் ஜெபக்கூட்டங்கள் நடத்துவதற்கு அவர்களுக்குச் சரியான பயிற்சி கொடுக்கப்படவேண்டும். அவர்கள் தங்கள் ஜெபக்குழுக்களில் எதைப் போதிக்கப் போகிறார்களோ, அதை முதலாவது தங்கள் போதகரிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டும். சபையில் போதிக்கப் படும் சத்தியங்களுக்கு முரண்பாடான காரியங்கள் ஜெபக்குழுக்களில் போதிக்கப்படாதபடி கவனமாயிருக்கவேண்டும். ஞாயிற்றுக்கிழமைகளில் ஆராதனையின்போது போதகர் பிரசங்கிக்கும் உபதேசங்களைப் பற்றி விளக்கமான ஆலோசனைகள் ஜெபக்குழுக்களில் தரப்படுவது சிறந்தது.

நான் என்னுடைய ஜெபக்குழுத் தலைவர்களுக்கு ஒவ்வொரு வாரமும் அவர்கள் போதிக்க வேண்டிய பாடத்தை முன்னதாகவே தந்துவிடுகிறேன். எங்களுடைய சபையில் ஜெபக்குழுக்கள் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் சரியான ஆலோசனையில்லாததினால் உண்டான குழப்பங்களைப்பற்றி ஏற்கெனவே குறிப்பிட்டிருக்கின்றேன். ஒவ்வொரு வாரமும் அவர்கள் போதிக்க வேண்டிய பாடத்தை நான் எழுதிக்கொடுத்ததினால் அந்தப் பிரச்சனை தீர்ந்தது. இப்போது ஒவ்வொரு வாரமும் பாடங்களைத் தயார் செய்து கொடுக்க எனக்கு நேரமிருப்பதில்லை. ஆனாலும் ஞாயிறு பள்ளிகளுக்கு அல்லது விடுமுறை வேதாகமப் பள்ளிகளில் கற்றுக் கொடுப்பதற்கென்று முறையான பாடங்கள் இருப்பதைப் போன்று எங்களது வீட்டு ஜெபக்குழுக்களுக்கென்று வேதபாடத் திட்டங்கள் அச்சிட்டுக் கொடுக்கப்படுகின்றன.

இப்போது நான் வேதபாடங்களைத் தயாரித்துக் கொடுக்காவிட்டாலும் தலைவர்களை ஆயத்தப்படுத்துவதில் நான் முக்கிய கவனம் செலுத்துகிறேன். ஒவ்வொரு புதன்கிழமையும் மாலையில் அடுத்த வாரத்திற்கான பாடத்தைக் கற்றுக்கொள்ளும்படி நாங்கள் கூடுகிறோம். நான் நேரடியாகக் கலந்து கொள்ள முடியாவிட்டால் ஒலி நாடாக்கள் மூலமாகவும், இப்போது எங்களது

சபையில் நவீன கருவிகள் இருப்பதால் ஒளி நாடாக்கள் மூலமாகவும் நான் அவர்களுக்குப் போதிக்கிறேன். மேலும் அடுத்த வாரத்திற்கான வேதபாடத்தின் பொருளடக்கம் எங்களது சபையின் வாரச் சுற்றறிக்கையில் வெளியிடப்படுவதால் முன்னதாகவே எங்களது ஜெபக்குழுத் தலைவர்கள் பாடங்களை ஆயத்தம் செய்து கொள்ளமுடிகிறது.

தேவனுடைய வார்த்தையோடு பாடல்கள் மற்றும் பல்லவிகள் பாடித் தேவனை ஆராதிப்பதும், தலைவரும் மற்றவர்களும் ஸ்தோத்திரம், அறிக்கை, பரிந்து பேசுதல், விண்ணப்பம் போன்ற ஜெபங்களை ஏறெடுப்பதாலும் ஜெபக்குழுக்கள் தேவ பிரசன்னத்தால் நிறைந்ததாயிருக்கின்றன.

எங்களது ஜெபக்குழுக்களின் இன்னொரு அம்சம் ஒருவருக்கொருவர் ஊழியம் செய்வதாகும். ஒருவர் தனது தேவையைக் கூற மற்ற அனைவரும் சேர்ந்து ஜெபிப்பார்கள். ஒருவர் மற்றவருக்காக ஜெபிக்கும்போது அந்த இடத்திலேயே அற்புதமான சுகம் அநேகருக்குக் கிடைத்திருக்கிறது. இதன் மூலம் சபையில் பரிசுத்த ஆவியானவர் கிரியைச் செய்கிறார் என்பது அனைவருக்கும் தெளிவாகிறது.

இறுதியாக ஜெபக்கூட்டங்கள் சுவிசேஷக் கூட்டங்களாக இருக்க வேண்டும். சாட்சிகளும், வேதபாடமும் புதிதாய் வரக்கூடியவர்களைக் கிறிஸ்துவுக்குள் கொண்டு வருவதாக இருக்க வேண்டும். ஜெபக்குழு உறுப்பினர்கள் தங்கள் வீடுகளுக்குப் பக்கத்து வீடுகளிலிருக்கும் அவிசுவாசிகளை அழைத்துக்கொண்டுவர உற்சாகப்படுத்தப்படுகின்றனர். புதிதாய் வருவோரில் அநேகர் ஜெபக்கூட்டங்களிலேயே இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு தங்கள் வாழ்க்கையை அவருக்கு அர்ப்பணிக்கின்றனர். அதனால்தான் எங்களது சபை வேகமாக வளருகிறது. ஜெபக்குழுக்கள் சபைக்கு உயிர் கொடுப்பதாயிருக்கவேண்டுமானால் சுவிசேஷத்தை அறிவிக்கும் தளங்களாக இருக்க வேண்டும்.

முதலாவது ஆரம்பிக்கப்பட்ட ஜெபக்குழுக்கள் ஆறு அல்லது எட்டு மாதங்கள் கூடிய பிறகு அந்த ஜெபக்குழுக்கள் மூலமாகக் கிடைத்த ஆத்துமாக்களைச் சபையார் காணும்போது அவர்களுக்கு ஜெபக்குழுக்கள் மீது கவனம் திரும்பும். அப்போது சபையார் அனைவரையும் கூடிவரச் செய்து ஜெபக்குழுக்களின் அவசியத்தை எல்லா விசுவாசிகளுக்கும் விளக்கி புதிய ஜெபக்குழுக்களை ஆரம்பிக்கச் செய்யலாம்.

ஞாயிறு ஆராதனையில் ஜெபக்குழுத் தலைவர்களும், உறுப்பினர்களும் தங்களது ஜெபக்குழுக்களில் தேவன் செய்து வரும் அற்புதங்களைச்

சாட்சியாகக் கூறச் செய்யலாம். அது மிக அருமையான நேரமாயிருக்கும். ஜெபக்குழுத் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களது உற்சாகம் மற்றவர்களையும் உற்சாகப்படுத்தும். ஜெபக்குழுக்களில் தங்களுக்கு தேவன் விசேஷித்த ஆசீர்வாதங்களை வைத்திருக்கிறார் என்பதை ஜனங்கள் புரிந்து கொள்வார்கள்.

மேலும் ஜெபக்குழுக்களில் சுகம் பெற்றோர், மற்றும் தேவைகள் சந்திக்கப்பட்டோரின் விபரங்களைக் குறித்து வைக்கலாம். புதிதாக இரட்சிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையையும் குறித்து வைப்பது சிறந்தது.

ஒவ்வொரு போதகரும் தனது சபையாரை நன்கு அறிந்து அவர்களில் அதிகமானவர்களை இந்த ஊழியத்தில் ஈடுபடத் தூண்ட வேண்டும். எங்களது சபையில் ஒவ்வொருவரையும் ஒரு ஜெபக்குழுவிற்கு நான் அனுப்பினேன். ஆரம்பத்தில் சிலர் முறுமுறுத்தாலும் எல்லோரும் பங்கு பெற்றனர். இதுதான் நான் கடைப்பிடிக்கும் வழி. ஆனால் சில போதகர்கள் தாமாக முன்வந்து பங்கெடுத்தால்தான் உற்சாகத்துடன் செயல்படுவார்கள் என்று கூறுகிறார்கள். ஜெபக்குழுக்களை நடத்த முன்வருவோரை கைகளை உயர்த்த சொல்லியோ அல்லது எழுதித் தரச் சொல்லியோ தெரிந்து கொண்டு அவர்கள் மூலம் ஜெபக்குழுக்களை ஆரம்பிக்கிறார்கள். எப்படியானாலும் அதிகமான ஜெபக்குழுக்கள் ஆரம்பிக்கப்பட ஏற்பாடு செய்யவேண்டும்.

அமெரிக்காவில் ஒரு சபை இருக்கிறது. அதன் போதகர் எங்களது விதிமுறையின்படியல்லாமல் வித்தியாசமாய் ஜெபக்குழுக்களைத் தொடங்கினார். எங்களது முறை அமெரிக்காவில் பயன்படாதென அவர் எண்ணினார். எனவேமாதம் ஒருமுறை மட்டும் ஐக்கியத்திற்காக வீட்டுக் கூட்டங்கள் நடத்த அவர் முடிவு செய்து தனக்குக் கீழிருந்த ஆறு அல்லது ஏழு உதவிப் போதகர்களை மாதிரி ஜெபக் குழுக்கள் ஆரம்பிக்கச் செய்து அதைப் பின்பற்றும்படி மற்ற ஜெபக்குழுக்களுக்குக் கூறினார். விசுவாசிகள் தாமாகவே முன்வந்து இந்த ஊழியத்தைச் செய்யவேண்டும் என்று அவர் விரும்பியபடியால், எங்களது சபையில் செய்வதுபோல் பூகோள அமைப்பின் படி ஜெபக்குழுக்களைப் பிரிக்கவில்லை.

என்ன நடந்தது தெரியுமா? ஜெபக்கூட்டங்களுக்குச் சென்றவர்கள் அதன் ஆசீர்வாதத்தை அறிந்ததினால் கூடுவோரின் எண்ணிக்கை மிகவும் அதிகரித்தது. எனவே மாதம் ஒருமுறை என்பதற்குப் பதிலாக அடிக்கடி கூட ஆரம்பித்தனர். மேலும் ஜெபமும், வேதபாடமும்கூட இப்போது கூட்டங்களின் பகுதிகளாக மாறின.

இப்போது சபையில் புதிதாய்ச் சேருவோர் விரும்பினால், ஜெபக் குழுக்களை ஆரம்பிக்கலாம். பழைய விசுவாசிகளும் ஜெபக்குழுக்கள் ஆரம்பிக்க உற்சாகப்படுத்தப்படுகின்றனர். இப்போது ஜெபக்குழுக்கள் மாபெரும் சுவிசேஷம் அறிவிக்கும் கருவிகளாக மாறியதால் அந்தப் போதகர் பழைய சபைக்குள் ஒருபுதிய சபை உருவாகிறது. புதிய சபை, பழைய சபையை விட ஜீவனுள்ள சபையாய் இருக்கிறது என்று கூறினார்.

கலிபோர்னியாவில் இன்னொரு போதகர் தனது சபை வளர்ந்ததன் காரணமாக ஞாயிற்றுக்கிழமை எல்லா விசுவாசிகளும் கட்டிடத்திற்குள் உட்கார்ந்து தேவனை ஆராதிக்க முடியாத நிலையில் நான்கு அல்லது ஐந்து ஆராதனைகளை நடத்தி வந்தார். பின்பு சபையை நான்கு பிரிவுகளாகப் பிரித்து ஒரு பிரிவு, ஒரு ஞாயிற்றுக்கிழமையன்று எங்காவது, ஒரு விசுவாசியின் வீட்டில் கூடி தேவனை ஆராதிப்பது என்றும், மற்ற மூன்று பிரிவுகளும் சபையில் ஆராதிப்பது என்றும், அடுத்த வாரத்தில் இன்னொரு பிரிவு சபைக்கு வெளியே எங்காவது ஒரு வீட்டில் கூடுவது என்றும் முந்திய வாரம் வீட்டில் கூடி ஜெபித்தவர்கள் இந்த வாரம் சபை ஆராதயையில் கலந்துக் கொள்வதென்றும், இப்படியாக சபைக்கு வருவோரின் எண்ணிக்கையை முக்கால் பாகமாகக் குறைத்தார். ஒரு மாதத்தில் ஐந்து வாரங்கள் இருக்குமானால், ஐந்தாவது ஞாயிறன்று எல்லா விசுவாசிகளும் சபையில் கூடுவார்கள்.

சபையின் காற்பகுதியினர் வேறொரு வீட்டில் கூடினாலும் அவர்களை அந்தப் போதகர் தனது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருந்தார். அந்த ஆராதனையைப் பொறுப்பெடுத்து நடத்த தலைவர்களைப் பயிற்றுவித்தார். சபை ஆராதனையில் தான் போதிக்கும் பாடங்களோடு இணைந்த பாடங்களை உருவாக்கி அவர்களுக்குக் கொடுத்து அதையே விட்டு ஆராதனையில் பிரசங்கிக்கச் செய்தார். பொருளடக்கம் மற்றும் தனது பிரசங்கம் அடங்கிய ஒரு ஒலி நாடாவை அவர்களுக்கு ஒவ்வொரு வாரமும் கொடுப்பார்.

மாதம் ஒரு முறை முழு சபையாரும், வேத ஆராய்ச்சிக்காகக் கூடுவதுடன் கூடுதலாக ஒரு வேலைநாளில் அனைவரும் கூடி ஐக்கியமாக ஆராதிக் கின்றனர். அவ்வப்போது ஒவ்வொரு குழுவினரும் சுற்றுலா போன்ற ஐக்கியத்தை வளர்க்கும் காரியங்களில் ஈடுபடுகின்றனர்.

இப்படியாக இரண்டு போதகர்கள் தங்களது சபையினர் மத்தியில் எவ்வித குழப்பமுமின்றி வெற்றிகரமாக வீட்டு ஜெபக்குழுக்களை ஸ்தாபித்து

விட்டனர். அமெரிக்காவிலிருக்கும் கிறிஸ்தவர்கள் சபையில் அதிக நேரம் செலவழிக்க வேண்டியதிருக்கின்றதென்று முறுமுறுக்கின்றனர். ஆனால் இந்த இரண்டு போதகர்களும் தங்களது சபைகளை வீட்டு ஜெபக் குழுக்களாகப் பிரித்து சபை என்று தெரியாதபடி சபைக்கு வருவோரின் எண்ணிக்கையைப் பெருக்கியுள்ளனர்.

விசுவாசிகள் தங்கள் விருப்பதின்படி கூடி ஒருவரோடொருவர் ஐக்கியம் பாராட்டுவதை நாங்கள் தடுப்பதில்லை. ஆனால் ஜெபக்குழுக்கள் சுவிசேஷம் அறிவிக்குமிடங்களாகவும், எங்களது பூரண சுவிசேஷ மத்திய சபையில் நாங்கள் கண்டிருப்பதைப்போன்ற சபை வளர்ச்சியை உண்டாக்குவதாகவும் இருக்க வேண்டுமானால் சில ஒழுங்கு முறைகளை நாம் கடைப்பிடித்தே ஆகவேண்டும்.

சுவிசேஷம் அறிவிப்பதைத் தங்களது குறிக்கோளாகக் கொண்டிராமல் வெறும் ஐக்கியத்திற்காக மட்டும் கூடும் ஜெபக்குழுக்கள் சபை வளர்ச்சிக்கு ஒருபோதும் பிரயோஜனமாயிருப்பதில்லை.

நாங்கள் யோய்டோ தீவிலுள்ள புதிய சபைக்கு வந்தபோது எட்டாயிரம் விசுவாசிகளைப் பழைய சபையில் விட்டு விட்டு, பத்தாயிரம் விசுவாசிகளுடன் புதிய இடத்திற்கு வந்தோம். வேறொரு போதகர் அந்த சபையைப் பொறுப்பேற்றுக் கொண்டார். இன்று தேவ சங்க சபைகளின் வல்லமையான சபைகளில் ஒன்றாக அந்த சபை இருக்கிறது. ஆனால் அந்த சபையின் போதகர் வீட்டு ஜெபக்குழுக்கள் பற்றிய நாங்கள் கடைப்பிடிக்கும் விதிமுறைகளைக் கடைப்பிடிக்கவில்லை. சில வீட்டு ஜெபக்குழுக்கள் இருந்தாலும் அவைகள் சுவிசேஷம் அறிவிக்குமிடங்களாகச் செயல்பட வில்லை. இப்போது அந்த சபையின் விசுவாசிகளின் எண்ணிக்கை இரண்டா யிரமாகக் குறைந்துவிட்டது. நாங்கள் விட்டு வந்த எட்டாயிரம் விசுவாசிகளில் பெரும்பாலோர் நாங்கள் அழைக்காமலே தாங்களாகவே எங்களது சபைக்கு வந்து விட்டனர்.

ஒரு போதகர் எட்டாயிரம் விசுவாசிகளின் ஆவிக்குரிய தேவைகளைச் சந்திக்க முடியும் என்று நான் நம்பவில்லை. அதிகாரத்தைப் பகிர்ந்து கொடுத்து, ஜெபக்குழுக்கள் ஆரம்பிப்பது ஒன்றே விசுவாசிகளின் ஆவிக்குரிய தேவைகளைச் சந்திப்பதற்கு ஒரேவழி.

அத்தியாயம் 12

பரிசுத்தஆவியானவரது ஐக்கியத்தின் முக்கியத்துவம்!

முந்தின அதிகாரத்தில் ஒரு ஜெபக்குழுவின் தலைவருக்கு இருக்க வேண்டிய அடிப்படைத் தகுதிகளைக் குறித்து நான் ஏற்கெனவே குறிப்பிட்டிருக்கிறேன். ஆனால் ஒவ்வொரு ஜெபக்குழுவின் தலைவரும் பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்பட்டு அவரால் வழி நடத்தப்படவேண்டும் என்ற ஒரு குறிப்பைச் சற்று விளக்கமாகக்கூற விரும்புகிறேன். உண்மையாக பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்படுவதற்கும், அவரால் வழிநடத்தப்படுவதற்கும் மேலான இன்னொரு அனுபவம், அதாவது அவரோடு ஐக்கியம் கொள்ளும் அனுபவம் நமக்கு அவசியமாயிருக்கிறது.

இப்படிப்பட்ட ஐக்கியத்தின் முக்கியத்துவத்தை ஒரு போதகர் தனது விசுவாசிகளுக்கு உணர்த்த வேண்டுமானால் முதலாவது அவர் பரிசுத்த ஆவியானவரோடு நெருங்கிய ஐக்கியமுடையவராயிருக்க வேண்டும். ஒரு போதகர் பரிசுத்த ஆவியானவருடன் நெருங்கிய ஐக்கியமுடையவரா யிருக்காவிட்டால் அவரால் தனது ஜெபக்குழுத்தலைவர்கள் பரிசுத்த ஆவியானவரோடு நெருங்கி ஐக்கியம் கொள்வதற்கு உதவி செய்ய முடியாது.

என்னுடைய சொந்த அனுபவத்திலிருந்து இதை நான் விவரிக்க விரும்புகிறேன். நான் பரிசுத்த ஆவியானவரது ஐக்கியத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கிறேன். நான் எத்தனை மணி நேரம் உட்கார்ந்து என்னுடைய பிரசங்கத்தைத் தயார் செய்தாலும், பரிசுத்த ஆவியானவரது அபிஷேகம் என்மேல் இல்லாத நேரங்களில் என்னுடைய பிரசங்கங்களால் ஒரு பலனும் உண்டாவதில்லை. பலனைக் கொண்டுவராத பிரசங்கம் வீணான பிரசங்கமாகும்.

பரிசுத்த ஆவியானவரோடு ஐக்கியம் கொள்ளுதல் என்றால் என்ன என்பதே பலருக்குத் தெரிவதில்லை. “நான் இரட்சிக்கப்பட்டிருக்கிறேன். பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தை நான் பெற்றிருக்கிறேன்” என்று அவர்கள் கூறுகிறார்கள். “பரிசுத்த ஆவியானவரது வல்லமையை என்னுடைய ஊழியத்தில் அனுபவிக்கிறேன். இனி வேறென்ன செய்ய வேண்டும்?” என்று அவர்கள் கேட்கின்றனர்.

அது பெரிய தவறு. நானும் இப்படிப்பட்ட எண்ணத்துடன் வாழ்ந்து வந்தேன். ஒரு பிரசங்கியார் என்னென்ன தகுதிகள் பெற்றிருக்க வேண்டும் என்று எங்களது ஸ்தாபனம் கூறியிருந்ததோ, அந்தத் தகுதிகள் எல்லாம் நான் பெற்றிருந்தேன். மறுபடியும் பிறந்து, பரிசுத்த ஆவியானவரது அபிஷேகத்தைப் பெற்று, அந்நிய பாஷையில் பேசினேன். இது போதும் என்று எனக்குள் கூறிக்கொண்டேன்.

ஆனால் தேவன் என்னுடைய தவறான எண்ணத்தை மாற்றி பரிசுத்த ஆவியானவர் ஒரு மனிதனை மறுபிறப்படையச் செய்வதும், வல்லமையைத் தருவதுமன்றி அதற்கும் மேலான காரியங்களைச் செய்கிறார். அவர் ஒரு ஆள். அவர் எனக்குள் ஜீவிக்கிறார் என்பதை உணர்த்தினார். ஒரு மனிதனோடு வாழவேண்டுமானால் அவரோடு ஐக்கியம் கொண்டிருக்க வேண்டும். அதாவது ஒருவரை ஒருவர் அறிந்து ஒருவரோடு ஒருவர் பகிர்ந்து கொண்டு நெருங்கிப் பழகவேண்டும்.

இந்த சத்தியத்தை நான் அறிந்துகொள்வதற்கு முன் என்னுடைய ஊழியம் மேடுபள்ளங்களுள்ளதாயிருந்தது. சில நேரங்களில் என்னுடைய பிரசங்கங்கள் வல்லமையுள்ளதாயிருக்கும். அநேகர் இரட்சிக்கப்படுவார்கள். சில நேரங்களில் என்னுடைய பிரசங்கத்தினால் எவ்வித பலனும் இராது. கிரியைகளைக் காணும் நாட்களில் மிகவும் சந்தோஷமாய் வீடு திரும்புவேன். எவ்வித கிரியையுமில்லாத நாட்களில் மிகவும் சோர்வடைந்து "ஆண்டவரே, ஏன் எனக்கு உதவி செய்யவில்லை" என்று கதறுவேன்.

1960–ஆம் ஆண்டின் குளிர்காலத்தில் ஒருநாள் அதிகாலை ஜெபக் கூட்டத்தில் பிரசங்கித்தபின் தனிமையாக சபையில் ஜெபித்துக் கொண்டிருந்தபோது தேவன் என்னுடைய ஆவியில் பேச ஆரம்பித்தார்.

"என் மகனே, பரிசுத்த ஆவியானவரோடு இன்னும் ஆழமான ஐக்கியம் உனக்கிருக்குமானால் உன்னுடைய ஊழியம் அதிக வல்லமையுள்ளதாயும் அதிகமாகப் பெருகக்கூடியதாயுமிருக்கும்" என்று கூறினார்.

"அப்பா, நான் இரட்சிக்கப்பட்டிருக்கிறேன், அபிஷேகம் பெற்றிருக்கிறேன். வேறென்ன வேண்டும்? இது போதாதா" என்று கேட்டேன்.

"நீ பரிசுத்த ஆவியானவரைப் பெற்றிருக்கிறாய் என்பது உண்மை தான். ஆனால் அவரோடு உனக்கு நெருங்கிய தொடர்பு இல்லை. நீ திருமணம் செய்து மனைவியை வீட்டிற்கு அழைத்துக்கொண்டு வரலாம். ஆனால் அவளை ஒரு ஆளாகக் கருதாமல் ஏதோ ஒரு அசையாப் பொருளாக

எண்ணினால் என்ன பயன்? அவளோடு நெருங்கிப் பழகி ஐக்கியம் பாராட்டாவிட்டால் என்ன பயன்?'' என்று தேவன் கூறினார்.

இந்த வெளிப்படுத்தல் என்னுடைய ஊழியத்தில் புதியதொரு மாற்றத்தை உருவாக்கிற்று. அதுமுதல் நான் பரிசுத்த ஆவியானவருடன் நெருக்கமான ஐக்கியம் கொள்ள ஆரம்பித்தேன்.

அதற்கு முன்பு 1 யோவா.1:3–ல் கூறப்பட்டுள்ளது போல பிதாவோடும், குமாரனாகிய இயேசு கிறிஸ்துவோடும் மட்டுமே என்னுடைய ஐக்கியம் இருந்தது. பிதாவோடும் குமாரனாகிய இயேசுவோடும் ஐக்கியமாயிருந்தால் போதும் என்று பல கிறிஸ்தவர்கள் நினைப்பதைப் போலவே நானும் நினைத்திருந்தேன். பிதாவாகிய தேவனை ஆராதித்தேன். அவரிடம் ஜெபித்தேன், குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை ஆராதித்தேன். அவரிடம் ஜெபித்தேன். ஆனால் பரிசுத்த ஆவியானவரைப் பற்றி நான் அதிகமாக நினைத்ததில்லை. அவரைத் தொழுதுகொள்வதோ அல்லது அவரிடம் ஜெபிப்பதோ இல்லை.

வேதத்தைக் கவனமாக ஆராய்ந்தபோது பிதாவாகிய தேவனோடும், இயேசுகிறிஸ்துவோடும் மட்டுமல்லாமல், பரிசுத்த ஆவியானவரோடும் ஐக்கியம் கொள்ளும்படி கட்டளையிடப்பட்டிருப்பதை அறிந்தேன் (2 கொரி.13:14).

இதன் பொருளை நாம் தெளிவாக அறிந்துகொள்ள வேண்டும். பிதாவாகிய தேவன் பழைய ஏற்பாட்டில் தனது கிரியையைச் செய்து முடித்தார். பின்பு தமது குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை அனுப்பினார். கிறிஸ்து சிலுவையிலறையப்பட்டு, மரித்து, உயிர்த்தெழுந்து இப்போது பிதாவின் வலதுபாரிசத்தில் உட்கார்ந்திருக்கிறார். அவரும் தனது கிரியைகளைச் செய்து முடித்துவிட்டார். இன்று நாம் பரிசுத்த ஆவியானவரின் காலத்தில் வாழ்ந்து வருகிறோம். பிதாவாகிய தேவனும் ஆண்டவராகிய இயேசுவும் பரிசுத்த ஆவியானவர் மூலமாகவே கிரியைச் செய்கின்றனர். எனவே தேவனுடைய அன்பையும் இயேசுகிறிஸ்துவின் கிருபையையும் நமக்குக் கொண்டு வருபவர் பரிசுத்த ஆவியானவரே.

ஐக்கியம் என்னும் பதத்திற்கு (Koinonia) என்னும் கிரேக்க பதம் உபயோகிக்கப்பட்டுள்ளது. இப்பதத்திற்கு ஐக்கியம், பங்கு, பகிர்ந்து கொள்ளுதல் என்ற பல அர்த்தங்கள் உண்டு. தேவனுடைய அன்பும், இயேசு கிறிஸ்துவின் கிருபையும் மாறாதவைகளானாலும், தேவ அன்பையும், இயேசுவின் கிருபையையும் கொண்டு வருவது யார்? பரிசுத்த ஆவியானவரின் ஐக்கியமே அவற்றை நமக்குக் கொண்டுவரும்.

தேவனுடைய அன்பையும், கர்த்தராகிய இயேசுவின் கிருபையையும் பற்றிய இறையியல் அறிவு நமக்கு ஏராளமாயிருந்தும், பரிசுத்த ஆவியானவரது ஐக்கியம் நமக்கு இராவிட்டால் நம்முடைய இருதயத்தில் இவற்றை நாம் அனுபவிக்க முடியாது. பரிசுத்த ஆவியானவரின் ஐக்கியமில்லாவிட்டால் பிதாவின் உண்மையான அன்பு குமாரனது உண்மையான கிருபை நம்முடைய இருதயத்தில் உண்மையாக விநியோகிக்கப்பட முடியாது. எல்லா இறையியல் அறிவும் நமக்கிருந்தாலும் நம்முடைய சபை ஒரு ஐஸ்பெட்டியைப் போலவே குளிர்ந்ததாயிருக்கும்.

ஒரு பிரசங்கியார் தன்னுடைய இறையியல் அறிவைக் கொண்டு வேத வசனத்தின் சத்தியத்தை தெளிவாக விளக்கலாம். ஆனால் பரிசுத்த ஆவியானவரது பூரண ஒத்துழைப்பு இல்லாவிட்டால், அந்தப் பிரசங்கம் வெறும் ஏட்டுச் சுரைக்காயாகவே இருக்கும். தேவனுடைய அன்பு மற்றும் இயேசுகிறிஸ்துவின் கிருபையை அனுபவித்த அனுபவத்திலிருந்து புறப்பட்ட பிரசங்கமாய் அந்தப் பிரசங்கம் இராது. உலகம் முழுவதும் உள்ள எல்லா சபைகளிலும் இன்றுள்ள பெரிய பிரச்சனை இதுதான். நல்ல அழகான கட்டிடங்கள், இனிமையாகப் பாடும் இசைக்குழுக்கள், கற்றுத் தேறிய ஊழியர்கள், திறமையான பிரசங்கங்கள் அத்தனையும் இருந்தும் சபைக்கு வருவோர் ஆவிக்குரிய பசிக்குத் தேவையான ஆகாரம் கிடைக்காமல் அவர்கள் பட்டினியால் சாகிறார்கள். அவர்களது மனதில் எல்லாவித அறிவும் புகுத்தப்பட்டாலும் அவர்களுடைய ஆத்துமாவோ பட்டினியாயிருக்கிறது.

Koinonia என்பதற்கு 'பங்கு' என்றொரு பொருளும் உண்டு. வியாபாரத்தில் ஒருவர் தனது பணத்தையும், இன்னொருவர் தனது திறமையையும் முதலீடு செய்யும்போது அவர்களது வியாபாரம் செழிக்கிறது. நாம் இராஜாதி இராஜாவின் வியாபாரத்தில் ஈடுபட்டிருக்கிறோம். பரிசுத்த ஆவியானவர் பண முதலீடு செய்கிறார். தேவ அன்பு, இயேசு கிறிஸ்துவின் கிருபை என்னும் பொருளாதாரத்தை அவர் முதலீடு செய்கிறார். நாம் நமது சரீர பிரயாசத்தை முதலீடு செய்து அவரோடு பங்காளிகளாக மாறி அவரோடு இணைந்து செயல்படும்போது தேவனுடைய ராஜ்யம் கட்டப்படும். பரிசுத்த ஆவியானவர் மூத்த பங்குதாரர். நாம் இளைய பங்குதாரர். இன்றுள்ள பிரச்சனை என்னவென்றால் இளைய பங்குதாரர்களாகிய நாம் மூத்த பங்குதாரராகிய பரிசுத்த ஆவியானவரை ஒதுக்கிவிட்டு சுயமாய்ச் செயல்பட விரும்புகிறோம். அதனால் விற்பதற்குப் பொருட்கள் இல்லாத கடைகளைப் போன்று நம்முடைய சபைகள் வெறுமையாயிருக்கின்றன.

இராஜாதி இராஜாவின் வியாபாரத்தில் நாம் வெற்றிபெற வேண்டுமானால் பரிசுத்த ஆவியானவரோடு நாம் பங்குதாரராயிருக்க வேண்டும். பங்குதாரராயிருக்க அவரோடு ஐக்கியம் இருக்கவேண்டும்.

பிதாவோடு நாம் ஐக்கியம் கொள்ளும்போது, "பிதாவே, உம்மில் அன்புகூருகிறேன். உமக்கு ஸ்தோத்திரம்" என்று கூறுகிறோம். "இயேசுவிடம், இயேசுவே உமக்கு ஸ்தோத்திரம், உம்மில் அன்புகூருகிறேன்" என்று கூறுகிறோம். ஆனால் பரிசுத்த ஆவியானவரிடம் அப்படிச் சொல்கிறோமோ என்றால் இல்லை.

பரிசுத்த ஆவியானவரை நமது பங்குதாரராக ஏற்று அவரோடு நம்முடைய வாழ்க்கையைப் பகிர்ந்துகொண்டு அவரோடு ஐக்கியம் கொள்ளாவிட்டால் நாம் பிதாவோடும் இயேசுவோடும் நெருங்கிய ஐக்கியம் கொள்ள முடியாது.

இந்நாட்களில் பரிசுத்த ஆவியானவரது பிரசன்னத்தை உணர்ந்து அவரை வரவேற்று அவரைத் தொழுதுகொள்ளும்படி என்னை நானே பயிற்றுவித்துக் கொண்டிருக்கிறேன். ஒவ்வொரு முறையும் நான் பிரசங்கிக்கும் முன்பு, "பரிசுத்த ஆவியானவரே நான் உம்மை வரவேற்கிறேன், உம்முடைய பிரசன்னத்தை உணர்கிறேன், நான் உம்மை நேசிக்கிறேன், உம்மையே சார்ந்திருக்கிறேன். நாமிருவரும் இணைந்து தேவனுடைய மகிமையை ஜனங்களுக்கு வெளிப்படுத்துவோம்" என்று பரிசுத்த ஆவியானவரிடம் கூறுகிறேன்.

அதைப்போலவே பிரசங்கிக்கும்போதும் எனக்குள், "பரிசுத்த ஆவியானவரே நான் பிரசங்கிக்கப் போகிறேன். எனக்குத் தேவையான ஞானம், அறிவு, பகுத்தறிவும் சக்தியைத் தாரும். நான் அதை ஜனங்களோடு பகிர்ந்துகொள்கிறேன்" என்று கூறுகிறேன்.

பிரசங்கத்தை முடித்து உட்கார்ந்தவுடன், "அன்பான பரிசுத்தாவியானவரே, நாம் இருவரும் இணைந்து அருமையாய்ப் பிரசங்கித்தோமல்லவா! தேவனுக்கு ஸ்தோத்திரம்" என்று கூறுவேன்.

இப்படியாக நான் பரிசுத்தஆவியானவரைச் சார்ந்துகொள்ளத் தொடங்கியபின் என்னுடைய வாழ்க்கை, ஊழியம் மற்றும் பிரசங்கத்தில் தேவனுடைய அளவில்லாத வல்லமை ஊற்றப்பட்டிருப்பதை உணர்கிறேன். ஏராளமானோர் மனந்திரும்புதலையும், சரீர சுகத்தையும் ஒவ்வொரு ஆராதனையிலும் பெறுகின்றனர். பரிசுத்த ஆவியானவர் என்னும் அலையில் நாம் மிதந்து செல்ல முயற்சிக்கிறேன்.

இதை இன்னும் தெளிவாக விளக்கக்கூடிய ஒரு சம்பவத்தைக் கூறுகிறேன். ஒரு முறை என் மனைவியை விட்டே பிரியக்கூடிய நிலை உண்டாயிற்று. எனக்கு திருமணம் நடைபெற்றபோது பிரபலமான சுவிசேஷகனாக, கொரியாவின் பில்லி கிரஹாமாக மாற வேண்டுமென்பதே என்னுடைய இலட்சியமாயிருந்தது. நானும் ஒரு பாஸ்டர் என்று கூறிக்கொள்ளும் சாதாரணமான ஊழியனாய் நான் இருக்க அப்போது விரும்பவில்லை.

எனவே திருமணம் முடிந்த பின்பு என் மனைவியை வீட்டிற்கு அழைத்துக் கொண்டு வந்த ஒரு வாரத்திற்குள் வெளியில் சென்று பிரசங்கிக்க ஆரம்பித்தேன். ஞாயிற்றுக்கிழமை என்னுடைய சபையில் பிரசங்கிப்பேன். திங்கள் முதல் வெளியிடங்களுக்குப் பிரசங்கிக்கச் சென்றுவிட்டு, வாரத்தின் இறுதியில் அழுக்குத் துணிகளைக் கொண்டு வந்து மனைவியிடம் கொடுப்பேன். பெரிய பிரசங்கியாராக வேண்டுமென்ற ஆசை எனக்குள் கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருந்தது. ஆறு மாதங்கள் இப்படியே சென்றன.

சில காலம் என் மனைவி மிக அன்பாகவே இருந்தாள். கூட்டங்கள் முடிந்து நான் வீடு திரும்பும்போது வாசல்வரை வந்து அன்புடன் வரவேற்பாள். அருமையாகச் சமைத்து எனக்கு உணவளிப்பாள். ஆனால் மாதங்கள் சில கடந்தபோது இதில் மாற்றம் உண்டாக ஆரம்பித்தது. அவள் மிகவும் ஏமாற்றமடைந்தாள். முன்புபோல் என்னை வரவேற்பதில் உற்சாகமில்லை. சில நேரங்களில் அழுவாள். அவள் சமைத்த உணவும் முன்புபோல் ருசியாயில்லை. ஏதோ தவறு நடந்திருக்கிறது.

நாங்கள் திருமணம் செய்த ஆரம்பம் நாட்களில் என் மனைவி மிகவும் கூச்சப்படுவாள். என்ன பிரச்சனை என்பதை அவள் ஒருபோதும் என்னிடம் கூறவில்லை. வேடிக்கை காட்டி நான் அவளைச் சிரிக்க வைக்க முயன்றேன். ஆனாலும் பலனில்லை.

இறுதியாக ஒரு நாள் என்னுடைய மாமியார் என்னிடம் வந்து, "யாங்கி, என் மகளுடன் வாழ விரும்புகிறாயா? இல்லையா?" என்று கேட்டார்கள். நான் "நிச்சயமாக வாழ விரும்புகிறேன்" என்று கூறினேன்.

"இப்படியே அவளை நடத்திக் கொண்டிருந்தால் சீக்கிரமாகவே, நீ அவளை இழந்துபோக வேண்டியதாயிருக்கும்" என்று அவர்கள் கூறினார்கள்.

"ஏன்? நான் அவளை நன்றாகத்தானே நடத்துகிறேன். அவளுக்கு நல்ல வீட்டை வாங்கிக் கொடுத்திருக்கிறேன். நல்ல உணவும், ஏராளமான உடைகளும் அவளுக்குக் கிடைக்கச் செய்திருக்கிறேன், இன்னும் என்ன

என்ன வேண்டும்? இதைவிட எப்படி அவளை நன்கு நடத்தமுடியும்?" என்று அதிர்ச்சியுடன் கேட்டேன்.

என்னைக் கூர்ந்து கவனித்த என் மாமியார், "மகனே, நீ புரிந்து கொள்ளவில்லை. நீ ஏதோ ஒரு அசையாப் பொருளையல்ல, ஒரு ஆளை கூட்டிக் கொண்டு வந்திருக்கிறாய். ஒரு பெண் சாப்பாடு, துணி, வீடு மற்றும் பணத்துடன் மட்டும் வாழ முடியாது. அவளுக்கு அன்பு, அரவணைப்பு முக்கியம் தேவை" என்று கூறினார்கள்.

அது பற்றி நீண்ட நேரம் யோசித்த எனக்குத் தோன்றியதெல்லாம் "இது தேவனின் வேலை. நான் தேவனுடைய வேலையைச் செய்வதில் கவனமாயிருக்கும்போது இவள் ஏன் என்னிடம் அன்பையும், அரவணைப்பையும், அக்கறையையும் எதிர்பார்க்க வேண்டும்?" என்பதுதான்.

ஆனால் என் மனைவியின் நிலை மிக மோசமாகிக்கொண்டேயிருந்தது. எனக்குள் ஏதோ எச்சரிப்பின் அறிகுறி காணப்பட்டதால் நான் கர்த்தரிடம், "ஆண்டவரே, ஊழியம் அல்லது மனைவி இந்த இரண்டிற்குள் ஏதாவது ஒன்றை தெரிந்துகொள்ள வேண்டிய நிலைக்கு நான் வந்திருக்கிறேன். எனக்கு மனைவியைவிட ஊழியமும், உம்முடைய மகிமையும் தான் அதிக முக்கியம். எனவே, ஊழியத்தினிமித்தம் மனைவியை இழந்து விடவும் நான் ஆயத்தமாய் இருக்கிறேன். ஒன்று என் மனைவியைத் திருத்தும் அல்லது எங்கள் இருவரையும் பிரித்துவிடும். நான் என் வாழ்நாளெல்லாம் தனிமையாகவே உமது ஊழியத்தைச் செய்கிறேன்" என்று ஜெபித்தேன்.

அப்போது பரிசுத்த ஆவியானவர் என் இருதயத்தில் "இல்லை, இல்லவே இல்லை. வாழ்க்கையில் முக்கியமான காரியங்களை வரிசைப்படுத்துவதில் நீ தவறியிருக்கிறாய். தேவன் முதலாவது, சபை இரண்டாவது, நீ மூன்றாவது, உன் மனைவி கடைசி என்ற வரிசையில் வைத்திருக்கிறாய். அது பெரிய தவறு.

தேவன் முதலாவதாக இருக்க வேண்டியது அவசியமே. ஆனால் மற்ற முக்கியமான காரியங்களை வரிசைப்படுத்தும்போது நீ இரண்டாவது ஸ்தானத்திலும், உன் மனைவி மூன்றாவது ஸ்தானத்திலும், உனக்குப் பிள்ளைகள் பிறந்தால் அவர்கள் நான்காவது ஸ்தானத்திலும், சபைதான் கடைசி ஸ்தானத்திலும் இருக்க வேண்டும்" என்றார்.

அதைப்பற்றி நான் யோசித்தபோது நான் அதிகமாய் பயந்தேன். இது ஒரு அமெரிக்கப் பிசாசாயிருக்க வேண்டும். எங்கள் நாட்டில் இப்படிப்பட்ட எண்ணத்தை நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாது என்று நான் கூறினேன்.

ஆனால் பரிசுத்த ஆவியானவர் தொடர்ந்து, "இது அமெரிக்காவிலிருந்து வந்ததல்ல; இதுதான் என்னுடைய வழி. தேவன் முதலிடத்திலிருக்க வேண்டும். நீ இரண்டாவது நிலையிலிருக்க வேண்டும். உன்னுடைய ஊழியம் நன்றாயிருக்க வேண்டுமானால், நீ நன்றாயிருக்கவேண்டும். நீ பரிசுத்தமாய் ஜீவிக்க வேண்டும். நீதான் முக்கியமானவன்.

அடுத்ததாக உன் மனைவி உனக்கடுத்த முக்கியத்துவம் வாய்ந்தவள். நீ உன் மனைவியைப் பிரிந்து விவாகரத்து செய்துவிட்டால் நீ சொல்லும் சத்தியத்தை யாரும் கேட்கமாட்டார்கள். உன் ஊழியம் நாசமாகிவிடும். நீ பிரதானமான சபையைக் கட்டலாம். ஆனால் உன் குடும்பம் அழிந்தால் உன் ஊழியமும் அழிந்துவிடும். ஒரு சபையை உருவாக்குவதைவிட மனைவியோடு நெருங்கிய ஐக்கியத்துடன் வாழ்வது மிக முக்கியம். ஏனெனில் முழு சபையும், உன் குடும்ப வாழ்க்கையைச் சார்ந்திருக்கிறது. நீ இரவு பகலாக உழைத்து தேவனுக்கு கொண்டு வரும் மகிமையைவிட உன் குடும்பம் பிரிவதற்கு காரணமாயிருப்பதனால் தேவநாமத்திற்கு அதிக தூஷணம் வர நீ காரணமாயிருப்பாய்.

மேலும் எல்லா கிறிஸ்தவர்களுடைய கண்களும் உன் பிள்ளைகள் மீதே பதிந்திருக்கும். உன் பிள்ளைகள் கெட்ட குமாரனைப்போல் தவறான வழியில் சென்றால், யார் உன் பிரசங்கத்தைக் கேட்பார்கள்? உன்னுடைய அடிப்படை ஊழியம் உன் பிள்ளைகள் மத்தியிலேயே இருக்கவேண்டும். உன் பிள்ளைகள்தான் உனது சபையில் முதல்தரமான விசுவாசிகளாயிருக்க வேண்டும். இப்படியாக நீயும், உன் மனைவியும் உன் பிள்ளைகளும், சேர்ந்தே ஊழியத்திற்கு கிடைத்த பொக்கிஷமாக எண்ணி அவளோடு நெருங்கி வாழ முதலாவது கற்றுக்கொள்" என்று தெளிவாகப் பேசினார்.

அது கடினமாயிருந்தாலும் முயற்சித்துப் பார்க்கலாமென முடிவுசெய்து என்னுடைய வெளியூர் ஊழியங்களில் பெரும்பாலானவற்றை ரத்து செய்தேன். ஒவ்வொரு திங்கட்கிழமையையும் என் மனைவிக்காக ஒதுக்குவதாக வாக்களித்தேன். அன்று அவள் பூங்காவிற்குச் செல்ல விரும்பினால் பூங்காவிற்கும் அல்லது பொருட்கள் வாங்கக் கடைக்குச் செல்வதானால் கடைக்கும் அவளோடு சென்றேன். பின்பு நாங்கள் இருவரும் சேர்ந்து உட்கார்ந்து சாப்பிடுவோம்.

ஒவ்வொருநாளும் காலையில் என் மனைவியிடம், "நான் உன்னை நேசிக்கிறேன். நீ அழகானவள். நீ இனிமையானவள். நீ எனக்கு மனைவியாகக் கிடைத்தது எனக்கு கிடைத்த பாக்கியம்" என்று கூறுவேன்.

பின்பு அற்புதம் நடைபெற்றது. என் மனைவி தனது சோர்விலிருந்து விடுதலை பெறத் தொடங்கினாள். அவளது முகத்தோற்றம் மாறிற்று. அவளுடைய இருதயத்தில் ஒரு புதிய மகிழ்ச்சி உண்டாயிற்று. மறைந்துபோன சிரிப்பு மீண்டும் அவளது முகத்தில் தோன்றிற்று. மீண்டும் ருசியாக சமைக்கத் தொடங்கினாள். எங்களுக்குள் நல்ல ஐக்கியம் உண்டாயிற்று.

நாங்கள் இருவரும் சேர்ந்து ஜெபித்து ஊழியங்களைக் குறித்து திட்டம் வகுத்தோம். ஒரு நல்ல குடும்ப வாழ்க்கை அமையவேண்டுமானால் உண்மையான ஐக்கியம் கணவன் மனைவிக்குள் இருக்கவேண்டும் என்பதனை நான் அறிந்துகொண்டேன். உங்கள் மனைவி, வீடு, உடை, உணவு, பணத்தில் திருப்தியடையும் ஒரு பொருளல்ல. அவள் ஒரு ஆள் அவளுக்கு உங்களது அன்பு ஐக்கியம் அதிகம் தேவை.

பரிசுத்த ஆவியானவரோடு நமக்கு இருக்க வேண்டிய ஐக்கியமும் இப்படிப்பட்டதே. அவர் உங்களோடிருக்கிறார். ஆனால் நீங்கள் அவரை சபையின் ஒரு மூலையில் உட்கார வைத்துவிட்டு ஆராதனை முடிவில் ஆசீர்வாதம் கொடுக்கும்போது உபயோகப்படுத்தும் ஒரு வார்த்தையாக அல்லது வேத சாஸ்திரத்தின் ஒரு பொருளாக உபயோகப்படுத்தினால் அவர் துக்கமடைவார். உங்களது ஊழியத்திலிருந்து அவர் ஒதுங்கி விடுவார். உங்கள் ஊழியம் தண்ணீரற்ற வறட்சியான நிலம் போலிருக்கும்.

இறையியல் அறிவு உங்களுக்கு அதிகமிருந்தாலும், அழகாக வார்த்தைகளை அடுக்கிப் பிரசங்கித்தாலும் உங்களது ஊழியத்தில் பலனிராது. ஏனெனில் ஆவியானவரால் செய்யப்படாத ஊழியம் மாம்சத்தில் செய்யப்படும் ஊழியமாகும்.

என் வாழ்க்கையின் அந்த நாளிலிருந்து பரிசுத்த ஆவியானவரோடு இன்னும் நெருங்கிய ஐக்கியம் கொள்ளத் தொடங்கினேன். என்னோடு இணைந்து பணியாற்றும் படியாகவே பரிசுத்த ஆவியானவர் என்னோடிருக்கிறாரேயல்லாமல், ஏதோ ஒரு மூலையில் ஒதுங்கி இருப்பதற்காகவல்ல என்பதை உணர்ந்து கொண்டேன். தேவன் சிங்காசனத்தில் வீற்றிருக்கிறார். இயேசு கிறிஸ்து அவரது வலது பாரிசத்திலிருக்கிறார். ஆனால் பரிசுத்த ஆவியானவரோ உங்களுக்குள்ளும், எனக்குள்ளுமிருந்து நம்மோடு இணைந்து தேவனுடைய ராஜ்யத்திற்கான வியாபாரத்தில் நமக்கு வெற்றியைத் தருகிறார்.

இன்று என் வாழ்க்கையில் பரிசுத்த ஆவியானவரை மிக மிக முக்கியமானவராக கனம் பண்ணுகிறேன். அவரைத் துதித்து அவரில் அன்புகூருகிறேன்.

பின்பு "பரிசுத்த ஆவியானவரே" நாமிருவரும் சேர்ந்து பிதாவாகிய தேவனிடம் ஜெபிப்போம்; நாமிருவரும் சேர்ந்து இயேசு கிறிஸ்துவிடம் ஜெபிப்போம்; நாமிருவரும் சேர்ந்து வேதத்தைப் படிப்போம்" என்று கூறுகிறேன். என்னுடைய ஐக்கியம் முதலாவது பரிசுத்த ஆவியானவரோடு தொடங்கி பின்பு அவரோடு இணைந்து பிதாவாகிய தேவனையும், அவரது குமாரனாகிய இயேசு கிறிஸ்துவையும் ஆராதிக்கிறோம்.

இப்போது பரிசுத்த ஆவியானவர் பேசும்போது அதைப் புரிந்து கொள்ளக்கூடிய அளவிற்கு நான் அவரோடு நெருங்கி வாழ்கிறேன். அவர் கட்டிடத்தைக் குறித்துப் பேசினாலும், சரீர சுகத்தைக் குறித்துப் பேசினாலும், தெளிவாக புரிந்துகொள்ளக்கூடிய அளவிற்கு அவர் எனக்குள் வாசம் பண்ணுகிற ஒரு நிச்சயமான ஆளாயிருக்கிறார்.

மேலும் ஒவ்வொருநாளும் காலை எழுந்தவுடன் முதல் வேலையாக பரிசுத்த ஆவியானவரோடு குறைந்தது ஒரு மணி நேரமாவது செலவிட நான் முயற்சிக்கிறேன். எத்தனை வேலை இருந்தாலும் அவருக்கு ஒரு மணி நேரத்தைக் கொடுக்கிறேன். "அன்பான பரிசுத்த ஆவியானவரே, நாம் சேர்ந்து ஜெபிப்போம், வேதத்தை வாசிப்போம்" என்று கூறி அவரோடு சேர்ந்து பிதாவாகிய தேவனிடமும், இயேசு கிறிஸ்துவிடமும் ஜெபிக்கிறேன். வேதத்தை வாசிக்கிறேன். நான் அவரை நேசிக்கிறேன், அவரைத் துதிக்கிறேன். நாங்கள் இணைந்து செய்ய வேண்டிய பணிகளைத் திட்டமிடுகிறோம்.

ஆதிச் சபையில் சீஷர்கள் பரிசுத்த ஆவியானவரோடு நெருங்கிய ஐக்கியம் உள்ளவர்களாயிருந்தனர். உதாரணமாக புறஜாதிகள் விருத்த சேதனம் பெற வேண்டுமா என்பதைத் தீர்மானிக்கும்படி எருசலேமில் கூடி வந்தபோது, "அவசியமான இவைகளையல்லாமல் பாரமான வேறொன்றையும் உங்கள் மேல் சுமத்தாமலிருப்பது பரிசுத்த ஆவிக்கும் எங்களுக்கும் நலமாகக் கண்டது" என்று அவர்கள் கடிதம் எழுதியிருப்பதைப் பார்க்கிறோம் (அப்.15:29). நாங்கள் தீர்மானிக்கிறோம் என்று அவர்கள் கூறவில்லை. பரிசுத்த ஆவியானவரும், அவர்களும் சேர்ந்து தீர்மானம் செய்தார்கள்.

நாம் நம்முடைய சபையில் தீர்மானங்கள் எடுக்கும்போது இப்படிக் கூற முடியுமா? கமிட்டிக் கூட்டங்களில் எடுக்கப்பட்ட முடிவுகளை எழுதும்போது, "பரிசுத்தாவியானவரும் நாங்களும் ஒருமித்துத் தீர்மானித்ததாவது" என்று குறிப்பிடுகிறோமா? இல்லை, நாம் அப்படிச் செய்வதில்லை. நம்முடைய சபையிலும், கூட்டங்களிலும், ஊழியத்திலும் அவரை ஒரு பார்வையாளராகவே வைத்து விடுகிறோம். இது பெரிய தவறு.